# தருமபுரி கோட்டைக் கோயில்கள்
## தல வரலாறு



கோட்டை ஈசுவரன் கோயில்: ஆலயத் தோற்றம்

ஸ்ரீ விவேகானந்தர் கொடை மற்றும் அறக்கட்டளை
தருமபுரி - 636 701.

# தருமபுரி கோட்டைக் கோயில்கள்
# தல வரலாறு

ஆக்கியோன்
புலவர் **தி. கோவிந்தன்**, எம்.ஏ., ப்ரவீன்,

வெளியீடு
ஸ்ரீ விவேகானந்தர் கொடை மற்றும் அறக்கட்டளை,
தருமபுரி-636 701.

# தருமபுரி கோட்டைக் கோயில்கள் தல வரலாறு
# DHARMAPURI KOTTAI KOILGAL THALA VARALARU

FIRST EDITION : 1992



Prof. T. GOVINDAN, M.A.
Prof. Dr. M. RAJENDRAN, M.A., Ph.D.



DONER

***Thiru K. M. Kasiviswanathan.***
Managing Partner,
Ramakrishna Magnesite Mines, SALEM-636004.

Photography and Drawing

Prof. Dr. M. RAJENDRAN, M.A., Ph.D.

ART : N. ARUMUGAM, DHARMAPURI.

PRINTING :

SRI THIRUGNANAM PRINTERS,
23-E, First Street, Weavers Colony,
DHARMAPURI-636 701.

SIRANGEEVI OFFSET PRESS,
DHARMAPURI-636 701.

CHROME GRAPHICS,
6, Devaraju Mudali St., MADRAS-5.

Publishers :

SRI VIVEKANANDA CHARITIES AND ENDOWMENTS
5/184, W. D. Chinnasamy Street, DHARMAPURI-636 701.

Dedicated to

**SRI K. G. MUNISWAMY CHETTY**

(Founder, Ramakrishna Magnesite Mines, Salem-636 004.)

# -: பொருளடக்கம் :-


| | பக்கம் |
|---|---|
| முன்னுரை | |
| தருமபுரி என்னும் தகடூர்த் தலபுராணம் | 1 |
| பேராசிரியர் தி. கோவிந்தன், M.A. | |
| தருமபுரிக் கோட்டை ஈசுவரன் கோயில் வாலாறு | 32 |
| பேராசிரியர் அ. மோகன்ராம், M.A. | |
| தகடூர்த் தல அமைப்பு | 49 |
| டாக்டர் எம். ராஜேந்திரன், M.A., Ph.D. | |
| தருமபுரிக் கோட்டைக் கோயில் சிற்ப இராமாயணம் | 89 |
| டாக்டர் எம். ராஜேந்திரன், M.A., Ph.D. | |
| ஸ்ரீ வித்யையும் ஸ்ரீ சக்கரமும் | 100 |
| டாக்டர் S. சுப்பராயன், B.Sc., B.L., L.L.D. | |
| வழிபாடு | 105 |
| தருமபுரிக் கோட்டை அருள்மிகு காமாட்சியம்மன் பதிகம் | |
| பேராசிரியர் அ. கண்ணப்பன், M.Sc. | இணைப்பு |

## முன்னுரை

# தகடூர்த் தலபுராணமும் வரலாறும்

பேராசிரியர். தி. கோவிந்தன்

தருமபுரி மாவட்டத்தில் மிகத் தொன்மை வாய்ந்த ஊர் தகடூர். இதனைத் தகடூர், தருமபுரி நல்லூரார், தருமபுரி என்ற பெயர்களால் வரலாறு கூறுகிறது. இத்தகடூர், பழங்காலத்தில் பேரரசனுக்கு நிகராக விளங்கிய அதிகர்களாலும், நுளம்பர், ஹொய்சாளர், கங்கர், சோழர், விஜய நகர அரசர்கள், ஆங்கிலேயர் போன்ற பேரரசர்களாலும் ஆளப்பட்டது. காலந்தோறும் இவ்வரசர்களின் கருத்தைக் கவர்ந்த இவ்வூரின் வரலாற்றுச் சிறப்பையும், கலைச்சிறப்பையும் விளக்க இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

இந்நூலில் தகடூர்ப்புராணம், வரலாறு, தலச்சிறப்பு, போற்றிப்பாடல், வழி பாடு என்ற ஐந்து பிரிவுகள் இடம் பெற்றுள்ளன. இதில் உள்ள தகடூர்ப் புராணம் பழைய புராண மரபை ஒட்டி உரைநடையில் எழுதப்பட்டுள்ளது. போற்றிப்பாடல் பழைய மரபை ஒட்டி விருத்த வடிவில் எழுதப்பட்டுள்ளது. தகடூர்க்குப் புராணம் இல்லை என்னும் வசை எம்மால் கழிந்ததன்றே!

'தகடூர் வரலாறு' இதுவரை அறியப்பட்ட வரலாற்றுச் செய்திகளைத் தக்க ஆதாரங்களுடன் முழுமையாகத் தருகிறது. இதனை எழுதிய பேராசிரியர் திரு. மோகன்ராம் அவர்கள் இதனை ஓர் ஆய்வுப் பணியாகவே மேற்கொண்டு எழுதி உள்ளார்கள்.

'தகடூர்த்தலச் சிறப்பு : இப்பகுதி தகடூரின் பல்வேறு கோயில்கள் எங்கிருந்தன? நீர்த்துறைகள் எவை ? இப்பொழுதுள்ள கோவில்களின் கலைச் சிறப்புக்கள் எவை? முதலிவற்றைச் சிறப்பாக எடுத்துக்காட்டுகிறது. இப்பகுதியை எழுதிய பேராசிரியர் டாக்டர் எம். ராஜேந்திரன் அவர்கள் மிக நுட்பமாக ஒவ்வொரு பகுதியையும் விளக்கியுள்ளார். இத்தலவமைபைச் சரியாகப் புரிந்து கொள்ளும்வகையில் செய்திகள் விளக்கப்பட்டுள்ளன.

தகடூர் ஸ்ரீமல்லிகார்ச்சுனர் ஸ்ரீகாமாட்சி அம்மன் மேல் போற்றிப்பாடல்கள் எழுதியுள்ள பேராசிரியர் அ. கண்ணப்பன் அவர்கள் மரபு மாறாமல் பக்திச் சுவையுடன் இதனைப் படைத்துள்ளார்கள். சுமார் 100 க்கும் மேற்பட்ட தலத்தில் உள்ள இறைவன் மேற்போற்றிப் பாடல் எழுதியுள்ள பேராசிரியரின் பக்திச்சுவை

நிரம்பிய பாடல்கள் நமக்கு நாயன்மார்களையும் அருணகிரி நாதரையும் நினைவூட்டுவதாக அமைந்துள்ளன. இப்பேராசிரியப் பெரியோர்களுக்கு அறக்கட்டளையின் சார்பில் நன்றியை உரித்தாக்குகின்றேன் புராணங்களுக்குச்-சான்றுகள் உண்டா ? அத்தகைய நூல் இக்காலத்திற்கு இன்றியமையா தனவா? என்ற வினா புராணப் பகுதியைப் பற்றிப் படிப்பவர்க்குத் தோன்றலாம்.

'புராணங்கள்' தொன்மை என்னும் இலக்கிய வடிவைச் சார்ந்தவை. வாய்மொழிச் செய்திகளும், நம்பிக்கைகளுமே புராணங்களுக்கு அடிப்படை, தலத்துப் பெயர், இறைவன் பெயர், கோவிலில் காணப்படும் சிற்பம், ஓவியம் ஆகியவையே 'புராணப் பகுதிக்கான ஆதாரங்கள், இவை எல்லாம் ஏதேனும் ஒருவகையில் அத்தலத்தொடு தொடர்பு கொண்டவை. இவற்றை ஆதாரமற்ற--வை என ஒதுக்கிவிடலாகாது. ஆதலின் இவற்றையே ஆதாரமாக் கொண்டு புராணப் பகுதி எழுதப்பட்டுள்ளது.

எங்கெல்லாம் ஸ்ரீ மல்லிகார்ச்சுனர் கோயில் உள்ளதோ அங்கெல்லாம் உள்ள இறைவியின் திருப்பெயர் ஸ்ரீ பிரமராம்பிகை என விளங்குகிறது. ஆனால் இத்தலத்தில் மட்டும் அம்மன் பெயர் ஸ்ரீ காமாட்சி அம்மன் என விளங்குகிறது. அதனால் இங்குள்ள ஸ்ரீ மல்லிகார்ச்சுனரை அபிதான சிந்தாமணி கூறும் மல்லிகார்ச்சுனரொடு இணைத்துக் காணலாயிற்று.

அதியர் தேவர்களை வழி பட்டவர்; வேள்வி செய்தவர். அதனால், தேவர்கள் உதவியொடு கரும்பையும் அரியநெல்லியையும் பெற்றனர்! 'அமிழ்தத்திற்கு இணையான கரும்பு' என்று கூறப்படுவதால், அமிழ்தம் கடைந்த வரலாறு அதியனொடு இணைத்துக் கூறப்பட்டது. அகத்தியன், இராமன் வரலாறுகளுக்குத் தகடுரொடு நேரடித் தொடர்பு யாதொன்றும் கிடைக்க இல்லையாயினும், தீர்த்தமலை, ஒகேனக்கல் ஆகிய இடங்கள் அகத்தியரொடு தொடர்ப்படுத்திப் பேசப்படுவதால், அதனிடையே உள்ள தகடூரும் அதனுடன் சார்த்தி உரைக்கப்பட்டது. தகடூர்க்கோவிலில் உள்ள அர்ச்சுனன் தபசு, தனித்த யானை ஆகிய சிற்பங்கள் பாசுபதம்பெற்ற அர்ச்சுனன், மற்றும் வெள்ளையானையொடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. வேளால் ஈஸ்வரர் என்னும் பெயர் கொண்டு மன்மதன் வரலாறும், இராமாயணச் சிற்பங்களைக் கொண்டு இராமன் வரலாறும் இணைக்கப் பட்டுள்ளன. இங்குள்ள தீர்த்தம் சனத்குமாரநதி என இன்றும் பேச்சு வழக்கில் உள்ளது. ஸ்ரீ சக்ரம் மேருவடிவானது. எனவே, முப்பரிமாணத்தில் உயர்ந்த ஆசனத்தில் அம்மன் காமாட்சி வீற்றிருக்கிறார்.

இங்ஙனம் தகடூர்ப்புராணத்தில் உரைக்கப்பட்ட கருத்துக்கள் ஏதேனும் ஒருவழியில் தகடூரோடு தொடர்புடையதாக உள்ளதால், தொன்மை வடிவினதான புராணத்தில் இயைந்துள்ளன. இங்ஙனமாயின் எல்லாத் தலங்களுக்கும் எல்லாச் செய்திகளும் உரிய ஆகாவா எனின், பாரத நாட்டில் உள்ள அனைத்துக் கோயில்களுக்கும் அனைத்து வழக்காற்றுச் செய்திகளும் பொதுவாகவே வழங்கலாகும் என்பதே புராணங்கள் நமக்கு உணர்த்தும் உண்மை. எனவே, தகடூர்ப் புராணத்தில் குறைகாணல் வழக்கிற்கு முரண் என்றே கொள்ளல்வேண்டும்.

பழைமையும் மரபும் ஒருசமுதாயத்தைப் பின்னோக்கி இட்டுச்செல்வன வல்ல. மாறாகப் பண்டைப் புகழிற்கு ஏற்ப இத்தலை முறையினர் வாழ வேண்டும் என்று அறிவுறுத்துவதே பழைமையை உணர்த்துவதன் நோக்கம் ஆம். ஆதலின் தகடூர்ப் புராணத்தைப் படிப்போர் இத்திருக்கோயில்களைப் போற்றிப் பாதுகாத்தும், சனத்குமார நதியைப் பாதுகாத்தும் வருவராயின், அஃது ஊர்க்கு நல்லது; நாட்டிற்கு நல்லது; மக்களுக்கு நல்லது. ஸ்ரீ மல்லிகார்ச்சுனர், ஸ்ரீ காமாட்சி அம்மன் மேல் நம்பிக்கை கொண்டு தமது வாழ்வை நேரிய வழியில் நடத்தத் தகடூர்ப் புராணம் துணைபுரிதல் கூடும். நமது முன்னோர் நம்பிய மரபு நம்மைப் பாதுகாக்கும் என்ற நம்பிக்கையைத் தருவதே நூலின் நோக்கம் ஆகும். சிலபல ஆண்டுகள் இருந்து மறையும் சாதாரண மானிடங்களை நம்புவதைக் காட்டிலும் இந்தத் தெய்வ நம்பிக்கை நல்லதேயாம்.

இந்நூல், ஏழாண்டுகள் பரிணமித்த வேட்கையின் விளைவு, இதனை உருவாக்கித் தந்த சான்றோர்களான தருமபுரி அரசு கலைக் கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் **எம். ராஜேந்திரன், M.A.,Ph.D.,** பேராசிரியர் **அ. மோகன்ராம், M.A.,** திருவாரூர் அரசு கலைக் கல்லூரிப் பேராசிரியர் **அ. கண்ணப்பன், M.A.,** தருமபுரி வழக்கறிஞர் டாக்டர் **எஸ். சுப்பராயன், B.Sc.,L.L.D.,** அவர்கட்கும் திரு **எஸ். சாயிராம் M.A.M.Phil**, அவர்கட்கும் நன்றி கூறக் கடப்பாடுடையேன். இப்பணிகளில் என்னை ஆர்வமூட்டிப் பரிவுகாட்டி நெறிப்படுத்தி வரும் பேராசிரியர் **பேசு. கோவிந்தராசன், M.A.,M.Phil.** அவர்க்கட்கும், வாமதேவசிவம் திரு **சண்முகசுந்தர சிவாச்சாரியார்** அவர்கட்கும் என் நெஞ்சார்ந்த நன்றி.

என்னைப்புவியில் ஒரு பொருளாக்கி, மருள்சுரந்த முன்னைப் பழவினை வேரறுக்கும் இராமநுசன் எழில்வடிவாய் வந்து எனை ஆதரித்து மங்களாசாசனம் வழங்கிய ஸ்ரீ பெரும்புதூர் ஸ்ரீமத் பரமஹம்ஸேதி ஸ்ரீ வரதராஜயதிராஜஜீயர் சுவாமிகள் திருவடிகளைப் போற்றி என் நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன்.

அம்மன் அருள் வடிவாய் எங்களிடம் அன்புகாட்டி அணிந்துரை வழங்கிய சென்னைக்காளிகாம்பாள் திருக்கோயில் சைவத்திரு **சாம்பமூர்த்தி சிவாச்சாரியார்** அவர்கட்கும்,

அம்மையோடப்பனாய் பரிவும் பாசமும் கொண்டு வாழ்த்துரை வழங்கி அருள்புரிந்த சேலம் கந்தகிரி தவத்திரு **சாந்தானந்த சுவாமிகள்** அவர் கட்கும் எங்களிடம் அருள்கொண்டு ஆதரித்து வாழ்த்தி வழிகாட்டி வரும் கௌமாரமடாலயத் தலைவர் தவத்திரு **சுந்தர சுவாமிகள்** அவர்கட்கும்,

எங்கள் வேண்டுகோளை ஏற்றுச் சாற்றுகவி தந்து உதவிய டாக்டர் திருமுருக **கிருபானந்த வாரியார்** அவர்களுக்கும் எங்கள் நன்றியை நெஞ்சம் நிறைந்து சமர்ப்பிக்கின்றோம்.

அருளும் அன்பும் ஆகிய மழலைகளை வளர்க்கும் செல்வச் செவிலி செல்வமேயாம். அதுபோல இந்நூல் வெளிவரப் பெருந்துணைபுரிந்த சேலம் ராமகிருஷ்ணா மேக்னசைட் நிர்வாக மேலாளர் திரு **கே. எம். காசிவிஸ்வநாதன்** அவர்கள் எம்பால் பரிவு காட்டி வழங்கிய பொருளதவியால் இந்நூல் வெளிவருதல் இயல்வதாயிற்று. அவருடைய கொடையுளத்தைப் போற்றுகின்றோம். அவர்க்கு எங்கள் இதயமார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றோம்.

அவரும் அவர் குடும்பத்தாரும் நீடுவாழ்க! வாழ்க! என வாழ்த்துகின்றோம். அவரனைவர்க்கும் ஸ்ரீ காமாட்சி சமேத மல்லிகார்ச்சுனரும், ஸ்ரீ வரமகாலட்சுமி சமேத ஸ்ரீ பரவாசுதேவரும், மற்றைய தெய்வங்களும் எல்லா நலனும் வழங்கப் பிரார்த்திக்கின்றோம்.

இந்நூல் வெளிவரக்கருவியாயமைந்த அறக்கட்டளையின் பெருந் தலைவர் திருமதி **எம். ஆர். காளியம்மாள்,** அவர்கட்கும் என்னோடு இரவும் பகலும் அயராது பணிபுரிந்த தலைவர் திரு **B. N. குருராவ்,** அவர்கட்கும் செயலாளர் திரு **பி. பொன்னுசாமி, B.A., B.L., M. L. A.** அவர் கட்கும் திரு **V. இராமலிங்கம், M.A.,B.G.L.,** திரு **S. ராமச்சந்திரன், B.A.** ஆகியோர்க்கும் என் நன்றிஉரிய. மேலும் அறக்கட்டளைப் பணிகளில் துணைநின்று உதவி வரும் திரு **A. விமலன், A.E.,A.M.I.E.,** திரு **M. வடிவேல், B.A.** மேகலச் சின்னம்பள்ளி திரு **B. R. M. சுப்பிரமணியம், B.Sc.** ஆகியோர்க்கு அகமகிழ்ந்து நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இந்த நூல் வெளியிடும் பணியில் எங்களுக்கு பொருள் உதவி புரிந்த அனைவரின் கொடைத்தன்மையைப் பாராட்டிப் போற்றி எங்கள் நன்றியை உரித்தாக்குகின்றோம்.

இந்நூலைச் சிறப்பாக அச்சிட்டு உதவிய தருமபுரி ஸ்ரீ திருஞானம் அச்சகத்தார்க்கும், வண்ணப்படங்களை அச்சிட்டு உதவிய சென்னைகுரோம் கிராபிக்ஸார்க்கும், வரைபடங்களை அச்சிட்டு உதவிய தருமபுரி சிரஞ்சீவி லேசர் அச்சகத்தாருக்கும் ஓவியர் திரு ந. ஆறுமுதம், அவர்கட்கும் எங்கள் பணிகளில் உதவிபுரிந்த தருமபுரி அரசு பயிற்சிப்பள்ளி தேசியப்பணித் திட்ட ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நன்றிகூறக்கடப்பாடுடையேன்

இந்த நூல்வழிக்கிடைக்கும் சிறுதொகை அறக்கட்டளையின் சமுதாயப் பணிகளுக்கு உரமூட்டுவதாகும், மெய்யன்பர்கள் இந்நூலினை மனமுவந்து வாங்கி எங்கள் சமுதாயப் பணி செழித்து வளர, அதன் வழிமானுடன் வளரத்துணைபுரிய வேண்டுகின்றேன்.

ஆன்றோர் இந்நூலில் உள்ள குற்றங்களை நோக்காமல், இதனை ஏற்று இத்தகைய முயற்சிகளை ஆதரிக்கவேண்டுகின்றேன்.

தருமபுரி 16—4—1992

ஸ்ரீ மதே ராமானுஜாய நம

ஸ்ரீ மத் பரமஹம் ஸேத்யாதி
ஸ்ரீ வரதராஜ மடாபதி யதிராஜ ஜீயர்,
எதிராஜ ஜீயர் மடம் மற்றும்
பரம்பரை தர்ம, கேள்வி முத்திரை கர்த்தா
ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாள் ஸ்ரீ பாஷ்யகார ஸ்வாமி சன்னதி,
26, சன்னதி வீதி, ஸ்ரீபெரும்புதூர்–602 105. நாள் 19—2—1222

ஆழ்வார்களையும் அருளிச் செயல்களையும்
தாழ்வாக நினைப்பவர்கள் தாம் நரகில் வீழ்வார்க
ளென்று நினைத்து நெஞ்சே–எப்பொழுதும் நீ யவர்பால்
சென்ற ணுகக் கூசித் திரி.

## மங்களாசாசனம்

'கடல் சூழ்ந்த மண்ணுலகம் வாழ' என்றார் ஒரு பெருமகனார். 'வையத்து வாழ்வீர்கள்' என்றாள் ஸ்ரீ ஆண்டாள். 'சூழ்ந்திருந்து ஏத்துவர் பல்லாண்டே' என்றார் பெரியாழ்வார். இதில் ஜாதி, சமய வேறுபாடு இல்லாத சமுதாயம் ஒளிவீசும் இலக்கிற்கு ஆழ்வார்கள் வழியில் அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக இன்புருகு சிந்தை இடுதிரியா' என்று ஞானந் தமிழில் பக்திக்கே முதலிடம் அளித்து ஆன்மீயத்தை முழுமுதலாகக் கொண்டனர் வரலாறு கண்ட ஆசார்யப் பெருந்தகையாளர்.

அன்பென்ற ஒளிவெள்ளத்தைக் கோயில்களில் தாம் காணமுடியும் என்பது கண்கூடான தத்துவம், உலக வரைபடத்திலே–பாரதத்திலே–குறிப்பாகத் தொன்னாட்டில்தான் ஆன்மீயம் என்ற நந்தாவிளக்கு, முக்கடல், முத்தமிழ், மூவேந்தர், முன்று தளபதிகள், முக்கனி போன்று ஸ்ரீ சங்கர ஸ்ரீ ராமானுஜ, ஸ்ரீ மத்வ சமயாச்சாரியார்களால் அறம் பொருள், இன்பம் என்ற முறையில் மூன்று தட்டுகள் முத்தமிடுவது போல் மூன்று தத்துவங்களாகச் சமைக்கப்பட்டு, உலகிற்கே விடிவெள்ளியாக வெளியிடப்பட்டது.

மூன்று ஆசார்யர்களில் ஸ்ரீ பகவத் இராமாநுஜர் மற்ற இருவரின் கொள்கைகளுக்குத் தன்னைப் பாலமாக்கிச் சமயப்புரட்சியுடன், தனது சரீர சரீரி தத்துவத்துடன், ஜாதி, மத பேதமில்லாது தமிழுக்கு முதலிடம் கொடுத்து உலகமும், அதில் உள்ள உயிர், உயிரற்ற பொருள்களுடன் மற்ற எல்லாத் தெய்வங்களும் ஸ்ரீ மந் நாராயணனின் உடலின் அங்கங்கள் என்றும் அவனே அவைகளில் நிறைந்துள்ளான் என்றும் கூறினார். ஸ்ரீமந் நாராயணனே கூடாரை வெல்லும் கோவிந்தன் என அன்பைக் கொண்டே புரட்சிகரமான சமுதாயத் தொண்டினை, இடர்களைக் கருதாது 'எம் பெருமானார் தரிசனம்' கண்டார் என்பது வரலாறு. கீழேயும் மேலேயும் கிளைகள் கொண்ட தனது விசிஷ்டாத்வைதத்தை அடிமரமாகக் கொண்டு, செயலில், தனது கொள்கையை நடு நாயகமாகக் காட்டி, வேற்றுமையிலும் ஒற்றுமைகண்டு தேச ஒற்றுமைக்காக 'நாராயணனே நமக்கே பறை தருவான்' என்று 'ஒரே தேவன் கேசவன் தமர்கள் ஒரே குலம்' என அறுதியிட்டார்.

இங்ஙனமே, நாயன்மார்களும் முக்கண்ணன் புகழ்பாடிச் சமயத்தொண்டு செய்தனர் ஆழ்வார்களைப் போல். இத்தகைய தன்னலம் கருதாத பெருந்தகையர்களின் பெருமுயற்சியால் விண்ணைமுட்டும் விஷ்ணு, சைவ சமயங்கள், தென்னக மெல்லாம் கோபுரத்துடன் பக்திப் பெருக்கின் அழிவிலா அடையாளங்களாகச் சேர, சோழ, பாண்டிய, ஹொய்சள, விஜய நகர அரசர்களால் தலவரலாற்றுடன் அமைக்கப்பட்டு வடிவமைக்கப் பட்டன. 108 திவ்விய தேசங்கள் என்று கொண்டாடப்படும் வைணவக் கோயில்களில் சைவ சமயக் கோயில்கள் போல சுமார் எண்பதுக்கும் மேல் தென்னாடு கொண்டது. இவைகளைப் பராமரிக்க மடங்கள் தோன்றி, மடாதிபதிகள் செங்கோல் கொண்டு பராமரித்து, இளைஞர் சமுதாயத்திற்கு வற்றாத தடாகமாகச் செயற்பட்டு, மலராத மலர்கள் போன்ற இளைஞர் கட்கு ஞானப்பால் ஊட்டி வந்தனர்; வருகின்றனர்.

அந்தோ! இடையே காலத்தின் கோலத்தால் மேற்சுட்டிய கோயில்கள் பராமரிப்பு இல்லாது, பொலிவிழந்து, சொத்துக்களையும் இழந்து இன்று நிற்கும் நிலைக்கும், மடங்களில் பல செயல் இழந்து வருவதற்கும் காரணம் யாவரும் அறிந்தபேருண்மை, இளைஞர் சமுதாயம் திக்குத்

தெரியாத காட்டில் திசை திருப்பப்பட்டு, ஆன்மீயம், இறையுணர்வு, சமுதாயம் என்று அறிந்தும் செயற்பட முடியாதவாறு தவிப்பது இன்று தேசம் சேதமாய் வருவதிலிருந்து அறிய எளிதாம்,

ஆயினும் நூலாசிரியர் திரு. கோவிந்தனார் மேற்படிக் கோயில்களின் வரலாற்றைப் புதுப்பித்துக் குறிப்பாக இளைஞர் சமுதாயத்திற்குத் தென்றலாகச் சாதகப்பக்ஷிகள் போன்ற அவர்கட்கு, ஆழிமழைக் கண்ணனாகத் தன்னலம் கருதாது, 'It is he (Sri Ramanuja) who preached spirituality from Pariah to Brahmin' என்று ஸ்வாமி விவேகானந்தர் பணித்தபடி சமய வேறுபாடின்றி உலகிற்கு அளிக்க இருப்பதைத் தமிழ் கூறும் நல்லுலகம் ஏற்றுப் பெருமையடைய வேண்டும்.

'மலர் வேண்டுமென்ற மனம் முள் என்றால் மயங்குவது எளிதா!' என்று மண் போன்ற பலர் இடர்களில் இருக்க, மணத்தைக் கொண்டே மேம்முயற்சியில் அவர் ஈடுபட்டு இருப்பது காலம் திரும்புவதற்குக் கனையிருள் அகற்றிடும் குணதிசைக் கதிரவனின் செயலை நினைவூட்டுவதாகும்.

இத்தகைய பணிக்குப் பொருள் வேண்டுவது தவிர்க்க வேண்டியதே எனக்கருதாது, அவரவர்களின் ஒருநாள் கேளிக்கைச் செலவையாது ஈந்து, மாணிக்கங்கட்டி, வைரமணிகட்டி, ஆணிப்பொன்னால் செய்த வண்ணச் சிறு தொட்டில் ஆகிய ஸ்தல வரலாறு படைக்கத்தொண்டாகவும், பொருளாகவும், இறையுணர்வு மேலிட அனைவரும் ஜாதி, மத பேதமில்லாது வழங்கி இந்நூல் வெளிவரவும், அவரது குறிக்கோளுக்கு ஆக்க பூர்வமான ஊக்கம் அளிக்கவும் இச்செய்தி மூலம் தெரிவிக்கிறோம்.

தீயிற்பொலிகின்ற செஞ்சுடராழி போன்ற இப்பெருந்தகையாருக்கு, அவரின் இத்தகைய சீரிய பணி தொடர் சங்கிலியாக மேலும் வளர்ந்து, அத்தகைய பணிகள் மேலும் வளர வித்தாக அமைய அவருக்கும் அவரின் துணைவர்கட்கும் பல்லாண்டு பல்லாண்டு என்று நற்செல்வனுடையவும், அவன் தங்கியினுடையவுமாக இன்னருளுடன் நமது மங்களா சாசனத்துடன் பல மந்த்ராக்ஷதையும் மங்களகரமாயளித்து மகிழ்கிறோமாயிற்று.

நித்யஸ்ரீ.

# சேலம் ஓம் ஸ்ரீ ஸ்கந்தாஸ்ரமம்
# ஸ்ரீமத் ஸத் குரு சாந்தானந்த ஸ்வாமிகளின்
# ஸ்ரீ முகம்

‘‘மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய் வணங்கினோர்க்கு வார்த்தை சொல்ல சத்குருவும் வாய்க்கும் பராபரமே’’ என்பதற்கேற்ப மூவகையிலும் சிறப்புற்று க்ஷேத்திர மகிமை பெற்றது தகடூர் எனும் இந்நாளைய தருமபுரி.

புராண வரலாற்றுடன் கூடச் சரித்திர வரலாறும் கொண்ட தகடூர் தமிழ் இலக்கியப் புகழ் கடையெழுவள்ளல் அதியமான், ஔவைக்கு நெல்லிக்கனி ஈந்து அழியாப் புகழ் பெற்றுள்ளது யாவரும் அறிந்ததே.

தக்ஷிண பினாகினி எனும் பெண்ணையாறும், காவிரி நதியும் இருபுறமும் பாய்ந்தோடி வளம் கொழிக்கும் தகடூர். தருமபுரி கோட்டைக் கோயிலில் 9–ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. நுளம்பர், சோழர் ஆட்சிக்கால கல்வெட்டுகளும் காணப்படும் புரதானச் சிறப்பு வாய்ந்த இக்கோயிலில் ஸ்ரீ மல்லிகார்ஜுனர் காமாக்ஷி தேவியுடன் காட்சி தருகிறார். சமயபேத மற்று ஸ்ரீ மஹாவிஷ்ணு கூட இடம் பெற்றிருக்கிறார். மேலும் ராஜ துர்க்கை, விநாயகர், முருகன் சந்நதிகளும் உள. ஓர் கால கட்டத்தில் சமணர் பரந்து வாழ்ந்த பூமி என்பதைச் சாஸனங்கள் தெரிவிக்கின்றன. அதிசிய சிற்பகலை நுணுக்கங்கள் காண்போரைப் பிரமிக்கவைப்பவை.

கல்தூண் ஒன்று தரையைத் தொடாமலேயே மண்டபத்தைத் தாங்கி நிற்கும் அதிசியம் பொறியியல் வல்லுநர்களையும் வியப்படைய வைக்கும் தகடூரை மையமாகக் கொண்டு கோலோச்சிய மன்னர்கள் சிற்பக்கலைப் பொக்கிஷங்களை ஆலயங்களுள் சேர்த்துக்குவித்து மகிழ்ந்துள்ளனர் என் பதற்குத் தர்மபுரி கோட்டைக்கோயிலே சான்று. கோவில்களுக்கு வழிபடச் செல்வோரும் உண்டு. கலையழகு காணப்போவோரும் உண்டு. அத்த வகையில் யாவரும் கண்டு வரவேண்டிய பெருமையுடையது தர்மபுரி கோட்டைக் கோவில் என்பதில் ஐயமில்லை.

இவ்வளவு சிறப்புக்கள் படைத்து, பல நூற்றாண்டுகளாக நிலைத்து நிற்கும் தர்மபுரி கோட்டைக் கோயில்கள் தலப்பெருமைகளை முன்னோர் செயல் திறனை அறிந்து நாம் அனைவரும் கண்டு இன்புற வேண்டும். யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் எனும் பரந்த மனோபாவத்தில் கடினமாக உழைத்து ஆராய்ந்து சிரத்தையுடன் பல்லாண்டு பாடுபட்டு இந்நூல் ஆசிரியர்கள், பேராசிரியர்கள்

பேராசிரியர் புலவர் தி. கோவிந்தன், M.A.,

பேராசிரியர் டாக்டர் எம். ராஜேந்திரன், M.A., Ph.D.,

பேராசிரியர் எ. மோகன்ராம், M.A.,

பேராசிரியர் எ. கண்ணப்பன், M.Sc.

ஆகியோர் அசாத்திய சாதனை புரிந்துள்ளனர் என்பதில் ஐயமில்லை.

அவர்களைப் பாராட்டிப் பெருமைப் படுத்த மக்கள் கடமைப்பட்டுள்ளனர்.

இந்நூல் வெளிவரப் பெரிதும் விஷயதானத்துடன் ஊக்குவித்து ஒத்துழைப்பு நல்கிப்பணியைத் தொய்வின்றி நிறைவேற உதவியவர்—இன்று தெய்வ சாந்நித்யம் ஏற்படப் பாடுபட்டவர் சிவ ஸ்ரீசண்முக சுந்தர குருக்கள் என்பதறியக் கூடுதல் மகிழ்ச்சி அளிக்கிறது.

அனைவரின் தொண்டும் வளர வாழ்த்துகிறோம்.

(ஸ்ரீமத் ஸத்குரு சாந்தானந்த
ஸ்வாமிகளவர்கள் ஆக்ஞைப்படி)

இந்நூல் வெளிவரத்துணை புரிந்த அனைவரும் பாராட்டிற்கும் போற்றுதலுக்கும் உரியவராவர். இத்தகைய நல்ல பணியில் ஈடுபட்டுள்ள ஸ்ரீ விவேகானந்தர் கொடை மற்றும் அறக்கட்டளைப் பொறுப்பாளர்கள், தொடர்ந்து மேலும் மேலும் நல்ல பணியாற்ற வாழ்த்துகிறோம்.

செயலாளர்,
ஸ்கந்த ஆசிரமம்.

கோட்டை ஈசுவரன் கோயில்



ஒளிமய்மான மல்லிகார் ஜீனேஸ்வரர்



அருள் வடிவான காமாட்சியம்மன்

## அணிந்துரை :

**சைவத்திரு. சாம்பமூர்த்தி சிவாசாரியார்,**
காளிகாம்பாள் திருக்கோயில்,
சென்னை.

தருமபுரி கோட்டக் கோயில்களின் தல வரலாற்றையும், சிறப்பையும் தெளிவுற விளக்கிப் பேராசிரியப் பெருந்தகைகள் கோவிந்தன், மோகன்ராம், கண்ணப்பன், மற்றும் டாக்டர் ராஜேந்திரன், ஆகியோர் நுண்மான் நுழைபுலத் திறமொடு தொகுத்துள்ள **அறிவுக் களஞ்சியமே இந்நூல்.**

இந்துசமயத்தின் பெருமையை உலகெல்லாம் நிலைநிறுத்திய விவேகானந்தரது பெயரால் இயங்கும் அறக்கட்டளை இதை வெளியிடுவது வெகு பொருத்தம்.

இந்நூலில் தகடூர்ப் புராணம் வரலாறு அமைப்பு போற்றிப்பாடல், வழிபாடு என ஐந்துபிரிவுகளில் ஆய்வு செய்து விளக்கப்படும் செய்திகள் மூர்த்தி, தலம், தீர்த்தம் இவற்றின் மகிமையை அறிந்துகொள்ள உதவுகின்றன.

ஒரு மாங்கனியை விரும்பி உண்டதற்காகச் சாவின் கரத்திலே ஒரு பருவக்கனி விருந்தாக்கப்பட்ட விபரீதமே **நன்னன்** கதை. ஆனால் சாவாமூவா மருந்தாகிய கருநெல்லிக் கனியை அரசாளும் தான் உண்ணுவதினும் தமிழ்ச் சொல்லாடிய ஔவை மூதாட்டி உண்டு தமிழ் வாழ வேண்டும் என்றெண்ணிய **கொடை வேந்தன் வாழ்ந்த மண்** தகடூர். அந்த வேந்தன் **அதிகமான் ! அந்த மண்ணின் மகிமையே இந்த ஆய்வு நூல் ! இன்று இங்கு, நம் கண்ணெதிரே எத்தனை நன்னன்கள் உலவுகிறார்கள்? எத்தனை அதிகமான்கள் இருக்கிறார்கள்? இந்தக் கணக்கெடுப்பே வாழ்க்கையில் புதைந்துள்ள பொருள் !** '' இக்கோயில் குடமுழுக்கு நடந்துபலப்பல ஆண்டுகள் ஆகிவிட்டன. எப்போது, எந்தப் புண்ணியவான் இந்தக் கைங்கர்யத்தைச் செய்து கோயில் புத்துயிர் பெறச் செய்யப் போகிறானோ என்ற ஏக்கமும், எதிர்பார்ப்பும் மனதில் பாரமாய் இருக்கிறது ''

"இன்று நம் நாடும், மக்களும் உள்ள பரிதாப நிலைக்கு நாம் நமது புராதனச் செல்வங்களான திருக்கோயில்களைக் கவனியாமல், இறை வழிபாட்டையும் அருட் செல்வத்தையும் நினையாமல், பொருட் செல்வத்திலேயே நாட்டம் கொண்டிருப்பதே காரணம்; இனியாவது நம் முன்னோர்கள் விட்டுச் சென்றுள்ள அருட் செல்வங்களும், கலைக் கூடங்களுமான இத் திருக்கோயில் களைச் சரிவரப் பராமரிப்பதையும், காலா காலத்தில் செய்ய வேண்டிய பூஜைகளையும், விழாக்களையும் செய்வதையும் கடமையாகக் கொள்வோமாக" என்று **இந்நூலின் இறுதியில் தொகுப்பாசிரியர்கள் வருந்தி எழுதியிருப்பதையும் படிக்கும் போது**

**நன்னன்களே அதிகமாயும் இச்சமுதாயத்தில்--இன்று அதிகமான்கள் அரிதே காணும் காட்சிப் பொருளாயும்- ஆகிவிட்ட அவல நிலையே தென்படுகிறது.**

தமிழகத்திலுள்ள ஒவ்வொரு தொன்மையான ஆலயத்தைப் பற்றியும் இப்படிப்பட்ட ஆய்வுநூல்கள் தொடர்ந்து வெளியாதல் வேண்டும்; அதைப் படிக்கும் அன்பர்கள்,

"நல்லதோர் வீணைசெய்தே—அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ ?
சொல்லடி சிவசக்தி ! "

என்ற பாரதியாரின் பாடலுக்கேற்ப, நமது முன்னோர்கள் செய்த அறத்தைத் தலைமுறை தலைமுறையாகப் பேணிக்காக்கத் தவறவிட்ட தமது குறையை உணர்ந்து திருந்த வேண்டும்;

புதிய கோயில்களை முன்னோரளவு கட்டும் கலைஞானமும், பொருட் தகுதியும் அற்ற இன்றைய சமுதாயம் குறைந்த பட்சம் உள்ளதைப் பேணிக் காக்க வேண்டும் என்கிற உத்வேகத்தைப் பெற வேண்டும். அதற்கு **இத்தகு நூல்கள் நம்மை நாமறியப் பேருதவி செய்யும்**; இம்முயற்சியை வரவேற் கிறோம்- மகிழ்கிறோம் - பாராட்டுகிறோம் - முயன்றவர்களின் முயற்சிக்கு நன்றி செலுத்துகிறோம்! இறை நலம் நிரம்பி ஒளிர வாழ்த்துகிறோம்!

அன்பன்,
**சாம்பமூர்த்தி சிவாசாரியார்**
27—12—1991

உ

முருகா

வேலை வணங்குவதே வேலை

கிருபானந்தவாரி,
**107, சிங்கண்ண செட்டித் தெரு,**
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை-600 002.

# வாழ்த்துச் சாற்றுக்கவி

## நேரிசை வெண்பா

அதியர் தலைநகராம் அன்பு தகடூர்
பெரியகோட் டைக்கோயில் பேணும் – வரலாற்றை
கூறும் புலவன் கோவிந்த நாதவேள்
பேறுபெற்று வாழ்க பெரிது.

அன்பன்,
கிருபானந்தவாரி.

தவத்திரு. சுந்தர சுவாமிகள், உ
மடாதிபதி,
சிரவணபுரம்,
கௌமார மடாலயம்,
சின்னவேடம்பட்டி அஞ்சல்,
கோவை-641 006.

# தருமபுரிக் கோட்டை வரலாறு

## வெண்பா

போற்று தருமபுரி பொற்புடைய கோட்டையிடை
வீற்றருளும் தெய்வ விளக்கத்தை—ஏற்றமுற
நல்லவர லாறு நயம்பெறவே தந்திட்டார்
வல்லகோ விந்தன் வளம்

பற்றுவிவே கானந்தர் பார்மெச்சும் கட்டளையை
உற்று நடத்தும் உயர்அன்பர்—நற்றகைய
கோயில் வரலாற்றைக் கொற்றமுடன் தந்திட்டார்
மேயபுகழ் ஓங்குகமென் மேல்.

அன்புள்ள,
சுந்தர சுவாமிகள்.

# கோட்டைக் காமாட்சியம்மன் ஆலயம்



கருணையே வடிவான காமாட்சி அன்னை.



அம்பாளின் பாதத்தருகே திரிசூலம்,
அஷ்டலட்சுமி சக்கரம்
மற்றும் மகிமை வாய்ந்த மகாமேரு.



இராஜ துர்காம்பிகை.

**டாக்டர் மு. பெரி. மு. இராமசாமி,**
தமிழ்த்துறைத் தலைவர்,
சௌடேசுவரி கல்லூரி,
சேலம்-636 010.

# மதிப்புரை

தகடூர் தமிழக வரலாற்றில் தனியிடம் பெறும் ஓர் ஊர். இவ்வூரின் ஒரு பகுதியாயுள்ள குமாரசுவாமிப்பேட்டையில் குடிகொண்டுள்ள அருள்மிகு முருகனையும், கோட்டைக் கோயிலில் குடிகொண்டுள்ள அருள்மிகு காமாட்சி அம்மனையும் போற்றிப் பேராசிரியர் அ. கண்ணப்பன் எழுதியுள்ள போற்றிப் பாடல்கள் பக்திச்சுவை மிக்கவை. படிப்போர் சிந்தனைக்கு விருந்தாயமைந்தவை. இதனை நூலாக தருமபுரி ஸ்ரீ விவேகானந்தர் கொடை மற்றும் அறக்கட்டளையினர் வெளியிட்டுள்ளனர்.

நூலுள், பேராசிரியர் கண்ணப்பன் அவர்களால் எழுதப்பட்ட இரு பதிகங்களும் இடம் பெற்றுள்ளன. அருள்மிகு முருகன் பதிகம், திருப்புகழை நினைவூட்டுகிறது.

'உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு'

என முருகனின் தோற்றப் பொலிவை உவமிப்பர் நக்கீரர். கண்ணப்பரோ இக்கருத்தினைப் பாமரரும் எளிதில் உணருமாறு, 'உதயக் கதிர்ஒத் தவனென்பேன்' என ஒரே வரியில் எளிமையாகக் கூறியுள்ளார். முருகனை, சைவ சமயத்தின் ஒட்டுமொத்த வாரிசாக்கி 'மயில்மேல் சைவ மணியென்பேன்' என்று பாராட்டுகின்றார்.

அருள்மிகு காமாட்சியம்மன் பதிகம் அபிராமி அந்தாதியின் எதிரொலியாய் இலங்குகின்றது. தாழ்வைத் தவிர்த்து வாழ்வைக்கொடுக்கும் தருமபுரிவாழ் காமாட்சி அம்மையை விதவிதமாகப் போற்றிப் பரவும் விதம் பாராட்டுக்குரியது. பேராயிரம் பரவி வழிபட விரும்புவோர் இரண்டாவது ஐந்தாவது பாடல்களை மீண்டும் மீண்டும் பாடிப் பரவலாம்.

எட்டாம்பாடல் ஆசிரியரின் அடக்க உணர்வைக் காட்டுகிறது.

'நீடிப் பரவி நினைந்தில்லேன்
நினைத்துப் பரவி நின்றில்லேன்
நின்று பரவி நெகிழ்ந்தில்லேன்
நெகிழப் பரவிப் பாடுகிலேன்

இந்நெகிழ்ச்சி வடலூர் வள்ளலின் திருவருட்பாப் பாடல்களை நம் மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறது.

இத்தகு போற்றிப் பாடல்கள் நமக்குப் புதியனவல்ல என்றாலும், இன்றைய நிலையில் மரபு மாறாமல் பக்திப்பாடல்களாக உணர்ச்சி பொங்க யாத்துத்தந்துள்ள பேராசிரியர் பணி சிறக்க வாழ்த்துகின்றேன்.

அறக்கட்டளையின் தொண்டு நாளும் பொலிவு பெறுவதாக.

அன்பன்,
மு. பெரி. மு. இராமசாமி.
20—01—92

**தி. கோவிந்தன்** எம். ஏ.,
தமிழ் விரிவுரையாளர்,
அரசு கலைக் கல்லூரி,
தருமபுரி-636 705.

# அணிந்துரை

நூற்றுக்கும் மேற்பட்ட தலங்களில் உள்ள இறையவர் மேற் போற்றிப் பாடல் எழுதியுள்ள பேராசிரியர் **அ. கண்ணப்பன்** அவர்கள் பக்திநலம் கனியப் பாடியுள்ள அந்தப் பாடல்களே அருள்மிகு **காமாட்சியம்மன் பதிகம்** அருள்மிகு **சுப்பிரமணியசுவாமி பதிகம்** ஆம். முன்னோர் மொழி பொருளும் சொல்லும் விரவி அன்னையின் சிறப்பையும், குமரனின் பெருமையையும், ஆசிரியர் மிகத்தெளிவாகப் புலப்படுத்தியுள்ளார். நெஞ்சம் நிறைப்பாள் எனத் தொடங்கி அன்னையின் அருள் திறத்தை ஆசிரியர் புலப்படுத்துகின்றார்.

'வையாபுரி சேய் ஆலயத்தன்' எனவும் அதியன் ஆண்ட கோட்டைக் கற்றளி எனவும் வரலாற்றுச் செய்திகளை நினைவுகூறும் ஆசிரியர் அன்னையின் ஆற்றலையும் குமரனின் வீரத்தையும் குறிப்பிடும் உணர்ச்சி படிப்போர் உள்ளத்தில் பதிதல் ஒருதலை.

அருணகிரி நாதரின் இந்தப்பாடல்களை நினைவுபடுத்தும் இப்போற்றிப் பாடல்கள் அருச்சனை பாட்டேயாகும் என்பதற்கு இலக்கியமாய் விளங்குகிறது.

வீழக் காலனைக் கால்கொடு பாய்ந்த விலங்கலான்
கூழை யேறுகந்தானிடங் கொண்டதுங் கோவலூர்
தாழையூர் தகட்டூர் தக்களூர் தருமபுரம்
வாழைகாய்க்கும் வளர்மருகல் நாட்டு மருகலே

என்பது சுந்தரர் தேவாரம்.

இந்தப்பாடலுக்குத் தருமபுரி உரிமை உடையதுதானா? எனவினா எழுப்புவோர்க்கு வரலாற்று ஆசிரியர்கள் பதில் உரைத்துள்ளனர். தமிழகத்தில் உள்ள கோயில்கள் பலவற்றை எடுத்த பெருமைக்குரியவன் சோழன் செங்கணான். அங்ஙனம் புதுப்பிக்கப்பட்ட கோயில்களில் ஒன்று தருமபுரியில் இருந்த கோச்செங்கண்ணீஸ்வரம் என்பது. இந்தக்கோயிலே நுளம்பப்

பல்லவர் காலத்து மீண்டும் எடுக்கப்பட்ட கோட்டைக்கோயிலாதல் வேண்டும் என்பது தருமபுரி வரலாறும் பிரகலாத சரித்திரமும் என்னும் நூலை எழுதிய ஆசிரியர் திரு. சு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கருத்தாகும்.

(பார்க்க : பக்கம் 66 & 67)

வண்ணானைக் கும்பிட்டார் என்னும் கல்வெட்டுத்தொடரைக்கொண்டு சேரமான் பெருமாள்நாயனாரைத் தருமபுரியொடு இணைத்துக் காண்பார் வரலாற்று ஆசிரியர். அதற்குத் துணையாகச் சேரமான் பெருமாள் நாயனாரும் சுந்தரரும் புரவியூர்ந்து கைலாயம் செல்வது போன்ற சிற்பக் காட்சி ஒன்று கோட்டைக்கோயிலில் உள்ள ஸ்ரீ பரவாசுதேவர் ஆலய மண்டபத்தூணில் உள்ளது. இவற்றால் சுந்தரர் போற்றும் தகட்டூர் இத்தலமே என்னும் வழக்குச் செய்தியை ஏற்று உரைப்பார் தகடூர் வரலாறு எழுதிய திரு. பெரும்பாக்கன் அவர்கள்.

இந்தத் தேவராத்தில் திருமுடிக்காரியின் தலைநகராகிய கோவலூரரையே சுந்தரர் குறிப்பிடுகிறார் என்று துணிந்தால், அக்காரியின் அண்டைநாடான அதியனின் தலைநகராகிய தகட்டூரைச் சுந்தரர் போற்றுகின்றார் என்று துணியலாம். இந்தவரலாற்றுச் செய்திகளை எல்லாம் உள்ளடக்கிப் போற்றிப்பாடல் ஆசிரியர் திரு. அ. கண்ணப்பன் அவர்கள் சுந்தரர் சொல் தகடூர்த் தலத்துச் சங்கரிநீ' என்று முடிபு கூறுகிறார்.

பக்திப்பாடல்கள் இறைஉணர்விற் பிறப்பது, உள்ளுணர்வின் பயனாய் வெளிப்படுவது. இவ்வுணர்வைப் பதிகத்தின் சொல்தோறும் நாம்கண்டு சுவைக்க முடியும். இத்தகைய பக்திப்பாடல்களைப் பயில்வோர் தூய இறை உணர்வினராய், மெய்ஞ்ஞானியாய் வாழ்வர். இந்த ஞானம் வாழ்வை முழுமையாக்கும்; மகிழ்ச்சியுடையதாக்கும். அதனால் வாழ்வின் நலனெல்லாம் வந்து சேரும். ஆதலின் இந்தப் போற்றிப்பாடல்களைப் படித்து இறையன்பர்கள் பயன்பெறுவார்களாக !

எமது வேண்டுகோளை ஏற்று இப்பதிகங்களைத்தந்து, அதனைச் அச்சிட்டு வழங்க அனுமதியும் வழங்கிய பேராசிரியர்க்கு யாம் வழங்கத்தக்க கைம்மாறுதான் என்னே? இறைவன் அவர்க்கு மேலும் மேலும் இன்னருள் சுரக்க இறைவனை வேண்டுவதே நம்பணி.

இந்தநூல் உருவாக, வடிவாகத் துணைபுரிந்தவர் திரு. கோ. சின்னப்பையன், M.Sc.,M.Phil. அவர்க்கு அறக்கட்டளையின் நன்றியை உரித்தாக்குகின்றேன். இந்தநூலை அச்சிட்டு உதவிய ஸ்ரீ திருஞானம் அச்சகத்தார்க்கும் நன்றி கூறும் கடப்பாடுடையேன்.

அறக்கட்டளையின் பணிகளாக நான்வரித்துக் கொண்டவற்றுக் கெல்லாம் ஆதரவு நல்கிவரும் அறக்கட்டளையின் பெருந்தலைவர் திருமதி. M. R. காளியம்மாள், தலைவர் திரு. B. N. குருராவ், செயலாளர் திரு. P. பொன்னுசாமி, B.A.,B.L. அவர்கட்கு என் நன்றியைக் கூறக் கடப்பாடுடையேன்.

தருமபுரி நகரத்தவர் அறக்கட்டளையின் பணிகளுக்கு உறுதுணையாக அமைய அருள்புரியுமாறு இறைவனை மனமொழிமெய்களால் போற்றி வழிபட்டு, இறையன்பர்களுக்கு இந்நூலைச் சமர்ப்பிக்கின்றேன்.

ஓம் தத் ஸத்

அன்பன்.
தி. கோவிந்தன்.
25—01—92

## கோட்டை ஈசுவரன் கோயிலூர் மூன்று பிரதான ஆலயங்களும்

## (மேலே) மூலவர் திரு வுரு வங்களும்

மல்லிகார் ஜீனேஸ்வரர்



காமாட்சியம்மன்



சோமேசுவரர்







தி. கோவிந்தன், எம். ஏ.

# 1

# தருமபுரி என்னும் தகடூர்த் தலபுராணம்

## காப்புச் செய்யுள்

### விநாயகர் துதி

சித்சபை நாதன் சிறப்பினை உரைக்கும்
தகடூர்ப் புராணம் தமிழில் நிகழ்த்த
சித்தியும் புத்தியும் சத்தியாய்க் கொண்ட
வித்தகன் விநாயகன் விரையடி போற்றுவோம்.

### சிவபெருமான் துதி

* மலைகளுக்கு அரசனாகிய பருவதராசன் பெற்ற கருணைக் கடலாகிய பார்வதி தேவியைத் தன் இடப்பாகத்தே கொண்டுள்ள முக்கண் முதல்வன் தகடூர்த் தலபுராணத்தைத் தமிழில் அனைவரும் கேட்டுப் பயன்பெற நல்லருள் புரியுமாறு, அகம் பணிந்து போற்றுவோம்.

குறிப்பு : மலைவிந்தம் அரசன்கோ கருணைக்கடல் பெருங்கருணை எனத் தலப்புராண ஆசிரியர் பெயரும் ஊரும் தோற்றிநிற்கும்.

## திருமால் துதி

யோகத் துயிலால் உலகத்தைக்காத்து, மெய்யன்பர் மனத் துயரைப் போக்கியருளும் திருமால், நமது மனமயக்கத்தைக் கெடுத்துத் தகடூர்த் தலபுராணம் செவ்வையாய்ச் செய்ய அருளுமாறு வேண்டுவோம்.

## கலைமகள், பிரமன் துதி

பிரமன் நாவில் எந்நாளும் உறையும் திருவருளின் பேற்றைப் பெற்றதால், எந்நாவில் எந்நாளும் உறையும் கலைமகள் தந்த வரத்தின் பயனால் தகடூர்த் தலபுராணம் இயம்பும் பேற்றினைப் பெற்ற நெஞ்சமே ! எந்நாளும் அந்தக் கலைவாணியை வாழ்த்துவாயாக !

## அகத்தியர் துதி

தவத்தாலும் தண்டமிழாலும் அரக்கரை அகற்றிய ஆதிகுரவன் அகத்தியர் திருவடிமலர்களைத் தகடூர்த் தலபுராணமாகிய இனிய மலர் கொண்டு போற்றி வழிபடுவோம்.

## அவை அடக்கம்

கடற்கரை மணலில் சிற்றில் இழைத்து ஆடும் சிறுமியர் விளையாட்டுக் காண்போர் கண்களுக்குப் பரவசம் தருமேயன்றி, அதனில் எவரும் குறைகாணமாட்டார்கள். அதுபோல யாம் எழுதும் தகடூர்ப்புராணத்திலும் அறிவிற்சிறந்த சான்றோர் குறைகாணமாட்டார் எனும் உறுதியாற் பிறந்த இத்தகடூர்ப் புராணத்தை அறிஞர் தம் மனத்துக்கு உவகைப் பொருளாகக் கொள்ள வேண்டுவோம்.

## முதலாவது அத்தியாயம்
## தகடூர்த்தலப் பெருமை

நைமிசாரண்யத்தில் உள்ள முனிவர்கள், அங்கு எழுந்தருளியிருந்த சூத முனிவரை நோக்கித் தவமுனிவரே! சகல திருத்தலங்களின் பெருமைகளையும் சிறப்புக்களையும் அறிந்த மேலோய்! வேதவியாசரின் திருக்குமாரராக அவதரித்த புண்ணியனே! பூலோக மெங்கும் எல்லாத் தெய்வங்களுக்கும் அமரர்களுக்கும் உகப்பான இடம் எது? அது ஏன் உகப்பானதாயிற்று? என்பதை எங்களுக்கு விளக்கமாகக் கூற வேண்டும் என்று பிரார்த்தித்து நின்றனர்.

முனிவர்களின் பக்தியையும் விருப்பத்தையும் அறிந்த சூத முனிவர் தகடூர்த்தலத்தின் பெருமையைக் கூறலுற்றார்.

இறைவன் திருக்கோயிலே பொகுட்டாகவும், அதனைச் சுற்றியுமுள்ள கோயில்களே அகஇதழாகவும், இல்லறத்தார் இல்லங்களே தகடாகிய புற இதழாகளும், கொடையே நறுமணமாகவும், நுகர் பொருள்களே மகரந்தமாகவும் அறம், தவம், போகம், பொருள் முதலியவற்றை இரப்போரே வண்டுகளாகவும் கொண்டு தாமரை மலர் போல விளங்கும் தலம் ஒன்று உண்டு. (2) மலையின்றி மாநிலம் இல்லை, தவமுடை யார் இல்லாமல் மழையும் இல்லை, நல்லரசன் இல்லாதவழி தவம் செய்வாரும் இல்லை, நல்லகுடி மக்கள் இல்லாமல் அரசனும் இல்லை. ஆகவே எல்லாவற்றுக்கும் அடிப்படையாக உள்ளவர் இல்லறத்தாரேயாவர். அத்தகைய இல்லறத்தார் வாழும் புறஇதழ்ச் சிறப்பினால், அத்தலம் தகடூர் என்று எல்லாஉலகத்திலும் சிறப்புப் பெற்றது. அதுவே தேவ உலகத்தவர்க்கும் பூவுலகில் உள்ளவர்க்கும் உகப்பான இடம் என்று சூத முனிவர் கூறினார்.

மேலும் சூத முனிவர் கூறலுற்றார்,

இத்தகடூரின் ஒருபால் காவிரி பாய்ந்து செல்கிறது. மற்றொரு பால் தக்ஷபினாகினி என்று சொல்லப்படும் தென்பெண்ணை ஆறு பரந்துசெல்கிறது. இந்நாடெங்கும் சனத்குமாரநதி ஆலமரத்தின் சிறு சிறு வேர்கள் போலப் பரந்துள்ளது. மலைகளின் கண்கள் போலக்குன்றமெங்கும் சிறியசுனைகள் உண்டு. தாகத்தைத் தீர்ப்பதைத் தண்ணீர் என்றும் பாவத்தைத் தீர்ப்பதைத் தீர்த்தம் என்றும் உயர்ந்தோர் கொண்டாடுவர் அத்தகைய தீர்த்தங்கள் பல

இந்நாட்டகத்தே உண்டு. இவையன்றித் தீர்த்தமலையின் கண்ணேயும் பல தீர்த்தங்கள் உண்டு. தீர்த்தம், அனுமன்தீர்த்தம் எனப் பல தீர்த்தத் துறைகளும் இங்கு உண்டு. காளி தேவி கையில் எடுத்து ஆடும் அம்மனையும் கழங்கும் போன்று சிறிதும் பெரிதுமான மலைகளும் குன்றுகளும் நிறைந்தது நாடு இது. இம்மலைகளில் உள்ள குகைகளில் சித்தர்கள் எந்நாளும் இடையூறின்றி யோகம் முயல்வர். இங்குள்ள கானகத்தில் பயன்தரும் மரங்களும் நுகர்ந்திடப் பூக்களைச் சொரியும் செடி கொடிகளும் உண்டுகளித்திட இனிய தேறலும் உண்டு. ஞானப்பழத்திற்காக அன்னையையும் அத்தனையும் சுற்றி வந்த விநாயகனை நினைவுபடுத்தும் வலிமையான யானைகள் மலைகளையும் காடுகளையும் சுற்றி உலாவரும். சிவபெருமானின் சடையாக விளங்கும் தீர்த்தமலைத் தொடர்களும் யோகிகளின் சடையைப்போல விளங்கும் பிற மலைத்தொடர்களும் எந்நாளும் சிவனும் அவன் அடியார்களும் அங்குத் தங்கியிருப்பதை நினைவூட்டிக் கொண்டே இருக்கும்.

## நகரச்சிறப்பு

இந்நாட்டின் நடுவே தகடூர் நகரம் சிறப்புற்றுவிளங்கும். இங்குவாழும் மக்கள் வாழ்வின் நுட்பத்தை நன்கறிந்த சான்றோர் ஆவர். அறம்புரி கொள்கையும், மறைநவில் இயல்பும் வாய்ந்த அந்தணரும் அறஉயர்வையே தம்மியல்பாகக் கொண்டபிறமக்களும், கொடையே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்ட அரசனும், இந்நாட்டில் வாழ்வர். இந்நாட்டில் குறிஞ்சிநில வளமும், மருதநில வளமும், முல்லைநில வளமும் மிகவும் உண்டு. நெய்தல் நிலத்தவர் தமக்குக் கிடைக்கும் உயர்ந்த முத்துக்களை இங்குக் கிடைக்கும் யானையின் முத்துக்களுக்கும், மூங்கிலில் விளையும் முத்துக்களுக்கும் ஒத்துநோக்கி, இம் முத்துக்களைப் புகழ்வர். காயும் கனியும், கறியும் பொன்னும் பிற உலோகங் களும் இங்கு மிகுதியாக உண்டு.

## அதிகர் சிறப்பு

இத்தகைய சிறப்பு மிக்க தகடூரை அதிகர் என்பவர் படைப்புக் காலந்தொட்டு ஆட்சிபுரிந்து வருபவர். இவர் கொடைமடம் கொண்டவர். வீரமும் ஊக்கமும் மிக்கவர். அதிகர் குடியின் கிளைக்குடியினராக உதியர் என்பவர் மேற்குப்பகுதியிலிருந்து ஆட்சிபுரிவர். அதிகன் நாட்டின் நடுவே ஓடும் பெண்ணையாற்றின் கரைகளில் பெண்ணைமரங்கள் மிகுதி, இவ் விருகுடியினரும் பெண்ணையைத்தமது மாலையாக - அணிந்து தாம் ஒரே குடியினர் என்று உலகிற்கு உணர்த்திவருவர். தேவர்களும் அசுரர்களும்

பாற்கடலைக் கடைந்தபோது தேவர்களுக்குரிய உணவாகிய ஆவுதியான் அவர்களை அருத்திய சிறப்புடையவர் அதிகர். மாபாரதப் போரின் போது இருதிறப்படைகளுக்கும் பெருஞ்சோறளித்தவர் உதியர், இத்நகைய கொடைப் பண்பைப் பெற்று, ஏனைய அரசர்களைக் காட்டிலும் இவர்கள் அதிகர்களாக விளங்கினர். இதனால் உலகமே இவரை அதிகர் என்று அழைத்தது.

அதிகர்கள் ஆலகால விஷத்தை உண்டு அனைவரையும் காப்பாற்றிய கொடை நலம் சான்ற நீலமணி மிடற்றோனை எந்நாளும் வழிபடுவர். இத்தகைய அதிகரிடம் பேரன்பு கொண்ட அமரர்கள் அமிழ்தம் போன்ற கரும்பினை அதிகர்க்கு வழங்கினர். அதிகன் அந்தக் கரும்பினை விண்ணுலகில் இருந்து மண்ணுலகிற்குக் கொண்டு வந்த நாளில் எல்லாத்தேவரும், மறைகளால் போற்றப்படும் சிவபெருமானும் தகடூர் வந்தனர். அவர்களை வழிபாடு செய்த அதிகன் எந்நாளும் அவர்கள் தன்னாட்டில் வாழ வேண்டுமென்று வேண்டினான். இதற்கு இயைந்த சிவபெருமான் லிங்கவடிவில் எந்நாளும் தாம் அங்குத் தங்கியிருப்பதாக வரமளித்தார்.

குடைபோன்ற வேலாலமரத்தின் கீழ் அவர் கோயில் கொண்டதால் அவர் வேலாலீஸ்வரர் என்று அழைக்கப்பட்டார். அந்தக்குடை வேலமரமே இத்தலத்தின் விருட்சமாயிற்று. ஆதிசேடனைத் தனது குடையாகவும் ஆசனமாகவும் கொண்ட ஸ்ரீ மகாவிஷ்ணு ஆதிசேடனைக் குடையாகக் கொண்டு எந்நாளும் அங்கு அமர்ந்து உறைவதாகக் கூறினார். அவரைப் பரவாசுதேவராகப் போற்றி வழிபட்டான் அதிகன். மற்றத்தேவர்கள் எல்லாம் லிங்க வடிவினனாகிய சிவபெருமான் முன் தத்தம் மந்திரவடிவில் எப்பொழுதும் உறைவதாகக் கூறினார்கள். அவர்களைச் சிற்ப வடிவில் போற்றினர் உலகோர். இங்ஙனம் எல்லாத் தெய்வங்களும் அமரர்களும் தாமே விரும்பி உறைவதாக வரமளித்த தகடூர்த்தலமே பூலோகத்தில் மிகச் சிறப்பானதாகும்; பிறதலங்கள் எல்லாம் ஏதேனும் நிமித்தம்பற்றிச் சிறப்படைந்தவை. அதிகர் தலமோ அதியன் கொடைப்பண்பால் அனைத்துத் தேவாதி தேவர்களும் தாமே உகந்து வந்து தங்கியதலமாகும் என்று சூதமுனிவர் தகடூர்த்தலத்தின் பெருமையைக் கூறினார்.

# தருமபுரி நல்லூர் - தருமபுரியின் பெருமை

மேலும் சூதமுனிவர் கூறத்தொடங்கினர். தகடூர் நாட்டு மக்கள் இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற மூன்று கால எண்ணமாகிய சுருதி, பிரக்ஞை மதி என்ற முத்திறத்திலும் அறத்தையே தம்உயிரின் இயல்பாகக் கொண்டவர். சாவாமைக்குக் காரணமான அரியநெல்லியே யானாலும், அதிகனும், அதிகர் நாட்டு மக்களும் சான்றோர்க்கே தந்து மகிழ்வர். அறம் புரிவதையே தமது கொள்கையாகக் கொண்ட அறம்புரி அந்தணாளரும், மக்களும் இங்கு நிரம்பியிருந்தனர். இந்த அறத்தின் பயனாலேயே அதிகர் விண்ணாடு செல்லவும், அமரரால் போற்றவும் பட்டனர். இவ்வறத்தின் பண்பினாலேயே தேவர்கள் தாம் பெற்ற அமிழ்தத்திற்கு இணையான கரும்பினையும் அரிய நெல்லியையும் அதிகர்க்கு வழங்கினர். இவ்வாறு உலகத்தார் அனைவருக்கும் அறத்தின் பண்பையும் பயனையும் விளக்கிக் காட்டியமையால், இத்தலமே உலகத்தாரால் 'அறம்புரி' என அழைக்கப்பட்டது, இதனையே பின்னோர் தருமபுரி என்றும் தருமபுரி நல்லூர் என்றும் போற்றுவாராயினர்.

இங்ஙனம் அறத்தின் பண்பையும் பயனையும் உலகிற்கு விளக்கி நிற்பதால், இந்தத் தலம் தருமபுரி என்றாயிற்று. இதனைத் தகடூர்த் தருமபுரி என்று உலகம் கொண்டாடுகிறது என்று சூதமுனிவர் கூறினார். இதனைக் கேட்ட முனிவர்கள், அறமுரைக்கும் சனத்குமார நதியின் வரலாற்றை எங்களுக்கு எடுத்துரைக்க வேண்டும் என்று வேண்டச் சூதமுனிவர் சனத்குமார நதியின் வரலாற்றைக் கூறத்தொடங்கினார்.



# 2

## சனத்குமார நதி என்னும் தீர்த்தப் பெருமை

முன்னொரு காலத்தில் கயிலாயத்தின் கண்ணே சிவபெருமான் திருவோலக்கத்திருந்தபோது எண்ணற்ற நாரணரும், பிரமரும், இந்திரரும் பிறதேவர்களும் முனிவர்களும், அத்திருவோலக்கக்காட்சியைக் கண்டு மகிழ்ந்திருந்தனர். அப்பொழுது உமாதேவி, சிவபெருமானை நோக்கிப் பிரபு ! இங்குள்ளோர் அனைவரும் நின் திருவடி சேர்வார்களோ ? மாட்டார் களோ ? என வினவினார். அதனைக் கேட்ட சிவபெருமான், அகத்தே நகைத்து, இவரனைவரும் நாம ரூபக் கிரியைகளால் கட்டுண்டிருத்தலின் நம்மையடைய மாட்டார்கள். கர்மபூமியில் பிறந்து, அறமுணர்த்து, மெய்ம்மை உணர்வுபிறந்திட நம்மை வழிபட்டுப் பின்னர் நம் திருவடிநிழலைச் சேர்வர் என்று கூறினார்.

இதனைக் கேட்ட உமாதேவி உயிர்களிடம் உள்ள கருணைமிகுதியால் முதல்வா ! கர்மபூமியில் இவர்கள் அறத்தை உணர்வது எப்படி ? என்று வினவினார்.

அதனைக்கேட்ட யோகநாதன், நாம் தக்ஷிணாமூர்த்தியாகி அன்று சனகர், சனத்குமாரர் முதலான நால்வருக்கு அறத்தினை உரைத்தோம். அவர் வழி மக்கள் அறத்தினை உணர்வர் என்றார். அதனைக் கேட்ட உமாதேவி தங்கள் அருள் பெற்ற ஆசாரியர்களை எங்கு ? எப்படிப் பூலோகத்தில் அறிவது எனக் கேட்டார்.

அதற்குச் சிவபெருமான் சனகர், சனத்குமாரர் முதலானோர் தேசங்கள் தோறும் அந்த அந்த யுகத்திற்கேற்ற பெயர்களால் ஞானாசிரியர்களாக உள்ளனர், என்றும் குமரராய், துறவுக் கோலத்துச் சிறப்புற்ற சனத்குமாரர் என்ற பெயரினைக் கொண்டவர் ஞானசிரியராக விளங்குவதோடன்றி, எந்நாளும் அறம்புரியும் தகடூர் நாட்டில் தீர்த்தமாகவும் விளங்குகின்றார். அதனை மக்கள் சனத்குமார நதி என்று போற்றுவர். அந்தச் சனத்குமாரநதி ஒருபால் நமது சடையில் விளங்கும் கங்கையிற் பிறந்த காவிரியையும், மறுபால் நமது வில்லில் பிறந்த தக்ஷிணபி பினாகினி எனும் பெண்ணையையும் எப்பொழுதும் ஸ்பரிசித்து விளங்கும். அன்றியும் தகடூரில் நாமே உவந்து உறையும் திருக்கோயிலில் முன்னர்த்தீர்த்தமாக அவர் நாளும் நம்மை வழிபட்டு வருபவர். வற்றாத வற்ருமலையிலும் பிற இடங்களிலும் சுனையாக விளங்குவார். இவ்வாறு தீர்த்த ரூபமாக உள்ள சனத்குமாரரை ஸ்பரிசித்த அளவில் அஞ்ஞானம் நீக்கி ஞானம் பிறக்கும். அற உணர்வு தாமேபிறக்கும் அப்பொழுதே அவர்களுடைய அனைத்துப் பாவங்களும் நீங்கும். அத்தீர்த் தத்தைக் கொண்டு நம்மை நீராட்டி வழிபடுவோர் நம்மை வந்தடைவர் என்று கூறினார்.

இதனைக் கேட்ட முனிவர்கள் உவகைக்கடலில் மூழ்கினர். முனிவர் களின் மனமகிழ்ச்சியைக் கண்ட சூதமுனிவர், தகடூர் நாட்டில் பாயும் மற்ற தீர்த்தங்களைப் பற்றியும் கூறத் தொடங்கினார்.

முனிவர்களே ! இந்நாடு எந்நாளும் நீர்வளத்துடன் விளங்குவதற்காகச் சிவபெருமான் அருளால் அவரது வில்லினால் ஏற்பட்ட நீர் பினாகினி என்றும் பெயர் கொண்டு தெற்கு நோக்கிப் பாய்ந்து செல்கிறது. அதனையே தஷ்ணபினாகினி என்று சான்றோர் போற்றுவர். அதனைத் தென்பெண்ணை என்று அதிகர் கொண்டாடுவாராயினர். அந்தநதி அதிகர் நாட்டின் நடுவே பெருக்கெடுத்துச் செல்கிறது. அகத்தியர் தென்திசை நோக்கி வரும் பொழுது அதிகர் நாட்டு எல்லையில் உள்ள குடகுமலையில் தங்கிப் பூசை செய்தார், அவர் தனது வழிபாட்டிற்காகச் சிவபெருமானை வேண்டிக் கங்கை நீரைப் பெற்றுத்தமது கமண்டலத்தில் வைத்திருந்தார். அப்பொழுது தேவர்கள் வேண்டுகோளால், விநாயகப் பெருமான் காகவடிவம் பூண்டு அகத்தியர் கமண்டல நீரைக் கவிழ்ந்தார். அந்தக் கங்கை நீரானது கமண்டலத்திலிருந்து விழுந்தவுடன் பெருகிச் செல்லத் தொடங்கியது.

பூஜை முடித்த அகத்தியர் விநாயகர் காகவடிவில் இருப்பதையும், கங்கையாறு பாய்ந்து செல்லத்தொடங்குவதையும் கண்டார். தனது ஞானக் கண்ணால், இது தேவர்களின் காரியம் என்று அறிந்து கங்கையை நோக்கி ! அன்னையே ! காகத்தினால் கவிழ்க்கப்பட்டதால் இன்று முதல் நீ காவிரி என்று அழைக்கப்படுவாயாக ! இன்று முதல் தமிழ்நாட்டை வளப்படுத்துவாயாக ! என்று கூறி வாழ்த்தினார். விநாயகப் பெருமானையும் துதித்து வழிபட்டார். இதனைக் கண்ட தேவர்கள் அகமகிழ்ந்து அகத்தியரை வாழ்த்தினர். விநாயகரை வழிபட்டனர்.

கமண்டலத்திலிருந்து புறப்பட்ட காவிரியை மலைவழியே அழைத்து வந்த அகத்தியர் ஆரண்ய எல்லையை அடைந்தார். அப்பொழுது அகத்தியர் காவிரியை நோக்கி ''நீ இனித்துள்ளிக் குதித்துச் செல்வாயாக !'' என வாழ்த்தினார். இது அறம் செழிக்கும் அதிகர் நாட்டு எல்லை இனி, உனக்குத் தடையில்லை. இங்கு நீராடுபவர் கங்கையில் நீராடிய பயனைப் பெறுவர் என்று அகத்தியர் வாழ்த்தி உரைத்து விடைதந்தார். அங்ஙனம்

வாழ்த்துப்பெற்ற காவிரி வேகமாகப்பாயத் தலைப்பட்டாள். அவளது வேகத்தால், அவள் பூமியின் உள்ளே சென்று விடுவாளோ? என்று அஞ்சிய தேவர்கள் பூமாதேவியைப் பிரார்த்தித்தனர். பூமாதேவி காவிரி குதிக்கும்படியாகப் பெரியகற்களைத் தளமாகப் பரப்பினாள். அந்தக் கற்றளத்தில் காவிரி வேகமாகக் குதிக்கும் போது காவிரியின் நீர்த்திவலைகள் தெறித்துச் சிதறின. முத்துக்கள் போன்ற நீர்த்திவலைகள் தம்முள் ஒன்றோடொன்று மோதிப்பரந்தன. அதனால் எங்கும் புகைபரந்தது போலக்காணப்பட்டது.

தொலைவில் நின்று கொண்டிருந்த அகத்தியரும் மற்றமுனிவர்களும் இந்த அரிய காட்சியைக் கண்டு மகிழ்ந்தனர். அந்த நீர்த்திவலைகளால் தோன்றிய புகையானது கல்லிலிருந்து புகை புறப்படுவது போல இருந்தது. இந்தத் தோற்றத்தைக் கண்டவர் என்ன விந்தையான காட்சி. காவிரி பாய்வதால் கல்லும் புகையைத் தருகிறது. நெடுங்காலமாக ஆதவனது வெப்பத்தால் வாடிய பூமித்தாய், காவிரியின் ஸ்பரிசம் பெற்ற மாத்திரத்தில் குளிர்ந்து மாறிய மேனி வெப்பம் புகையாக மாறுகிறது போல உள்ளது என்று இந்தக்காட்சியைப் போற்றினர். இந்த இடத்தை மக்கள் புகையினகல் என்று போற்றுவர். புகையின கல் என்ற பெயரை அங்குள்ள மழலை பேசும் சிறுவர்கள் ஹொகனக்கல் என்று குதித்தனர். இன்றும் அந்தப் பெயரால் உலகு அதனைக் குறிக்கிறது.

இந்த நதி முகத்தில் அகத்தியர் வழிபட்டகோயில் உள்ளது. அகத்தியர் வழிபாடு செய்த நினைவாக இறைவனுக்கும் அகத்தியர்க்கும் கோவில் எடுத்து மக்கள் அனைவரும் வழிபாடு செய்யத் தொடங்கினர். இந்த இடத்தில் பாரத்துவாசன் அகத்தியரைக்கண்டு வழிபாடு செய்தார். அப்பொழுது அகத்தியர் எல்லாக் குடும்பங்களையும் பாதுகாப்பதால் பாரத்துவாஜ என்ற பெயர் பெற்ற முனிவனே! காவிரியின் துணையால், தமிழகக் குடிகளைப் பாதுகாத்து வருவாயாக! நீயும் இங்கே தங்கித் தமிழக மக்களைப் பாதுகாப்பாயாக! எனக் கூறினார். அன்று முதல்

அங்குப் பாரத்துவாசர் ஆசிரமம் அமைத்துத்தங்கினார். இன்று காவிரிக்கரையில் பாரத்துவாசர் ஆசிரமம் ஒன்று உள்ளது. இத்தகைய தீர்த்தங்களால் தகடூர் பெருமை பெற்றது என்று சூதமுனிவர் கூறினார்.

இதனைக் கேட்ட முனிவர்கள் இத்தலத்தின் மற்ற விசேடங்களையும் இதனை வழிபட்டு உயர்ந்தவர்கள் வ ர லா ற் றை யு ம் விளக்கமாக எடுத்துரைக்க வேண்டுமென்று பணிவாக விண்ணப்பித்துக் கொண்டனர். அதனைக்கேட்ட சூதமுனிவர் ஸ்ரீ மல்லிகார்ச்சுனர் வரலாற்றைச் சொல்லத் தொடங்கினார்.



# 3

## ஸ்ரீ மல்லிகார்ச்சுனர் வரலாறு

முன்னொரு காலத்தில் அபிதான சிந்தாமணி ஸ்ரீ சந்திரன் என்ற பெயருடைய சிறந்த சிவபக்தன் சிவபெருமானை நோக்கித் தவம்புரிந்தான். அவனுடைய தவத்தைத் கண்ட கைலாய நாதன் அவனுக்கு இடபரூபராய்க் காட்சி அளித்தார். தேவர்களும் நான்மறையும் காண்டற்கு அரியனாகிய சிவபெருமானைக் கண்ணாரக் கண்டு களித்த ஸ்ரீசந்திரன் சிவபெருமானை நோக்கி, வேதமுதல்வ! முக்கண் நாயக! அடியார்க்கு எளிதில் அருள்தரும் ஞானசேகர ! சோமசேகர ! கங்கையை அணிந்துள்ள கங்காள ! உன்னைத் தரிசனம் செய்யப் பேறு பெற்றேன். என்னிலும் பாக்யவான் யார்? என்று உள்ளங்குளிர்ந்து போற்றினான். அதனைக் கேட்ட உமாமகேஸ்வரன், ''நீ வேண்டிய வரத்தைக் கேள்'' என்று சொல்லத் தேவாதிதேவே ! ''புத்திரபேறு இல்லாமல் மானிட வாழ்க்கை முழுமையடையாது, இம்மையில் மழலையின்பமும் மறுமையில் வீடுபேறும் தரும் செல்வம் புத்திரப்பேறே என்று நூல்கள் கூறும். ஆதலின் உலகையெல்லாம் காத்தளிக்கும் ஸ்ரீ மகா விஷ்ணுவையே நான் என் மகவாகப் பெறும் பேற்றினை எனக்கு நல்கவேண்டும்'' என்று வேண்டினான்.

அதனைக் கேட்ட சிவபெருமான் மிக மகிழ்ந்து ''அவ்வாறே ஆகுக !'' என்று வரமளித்து மறைந்தார்.

உரியநாளில் ஸ்ரீதரனுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. ஸ்ரீதரன் அத்தக் குழந்தைக்கு மல்லிகார்ச்சுனன் என்று பெயரிட்டனர். தக்க பருவம் வந்ததும் மல்லிகார்ச்சுனருக்கு முறைப்படி கல்வி கற்பித்தனர். அவரும் நான்குவேதம், ஆறுசாஸ்திரம், அறுபத்திநான்கு கலைகள், என்று அனைத்தையும் கற்றுத்தேறினார். மேலும் நீர் பல கால்மூழ்கி, எரியோம்பித் தகடூரில் இறைவனை வழிபாடு செய்தார். அவரது வழிபாட்டில் மகிழ்ந்த கௌரிநாதன் அவர்க்கு அருள்செய்தார். அதனால் தருமபுரித்தலந்தில் உள்ள லிங்கேசுவரர் திருவடி நிழலில் மல்லிகார்ச்சுனர் கலந்தார். அவ்வாறு மல்லிகார்ச்சுனர் இறைவனுடன் இரண்டறக்கலந்த காட்சியைக் கண்ட தேவர்களும் முனிவர்களும் ஸ்ரீமல்லிகார்ச்சுனர் தவத்தைப் போற்றினர். ஸ்ரீ மல்லிகார்ச்சுனர் வழிபட்டு இரண்டறக் கலந்ததால் அந்தத் தலத்து இறைவன் ஸ்ரீ மல்லிகார்சுனர் என்றே அழைக்கப்பெற்றனர். அத்தகைய சிறப்புப் பெற்றது தகடூர் ஸ்ரீ மல்லிகார்ச்சுனர் திருக்கோயில்.

இத்தகைய புத்திரனைப் பெறும்பேறு பெற்றதால் ஸ்ரீதரனின் ஏழு ஏழு தலைமுறையினரும் கைலாயம் அடைந்தனர்.

ஸ்ரீ மல்லிகார்ச்சுனரைப் பூவும் நீரும் கொண்டு வழிபட்டால் சிறந்த நன்மக்களைப் பெறுவர். இம்மை இன்பமும் மறுமை இன்பமும் கிட்டும். கல்வி ஞானம் பெருகும், சத்குணம் வளரும், மனக்கவலைகள் நீங்கும்.

ஸ்ரீ மல்லிகார்ச்சுனர் கோவிலுக்குச் சிறப்பும் பூசனையும் செய்பவர் குடும்பம்விருத்தியடையும். பக்திசிரத்தையாக ஸ்ரீ மல்லிகார்ச்சுனரை வழிபட அறப்பலன் அனைத்தும் கிடைக்கும். போயபிழையும் புகுதருவான் நின்றனவும் தீரும். பிரார்த்துவ கர்மப்பயனால் விளைந்த நோய்கள் நீங்கி மக்கள் பொன்னுடலைப் பெறுவர் என்று ஸ்ரீ மல்லிகார்ச்சுனர் பெருமையைச் சூதமுனிவர் கூறினார்.

இதனைக் கேட்ட முனிவர்கள், இந்த வரலாற்றைக் கேட்டு ஆனந்தக் கண்ணீர் பெருக்கினர். அவர்களது அன்பின் திறத்தையும் பக்திப் பெருக்கத் தையும் கண்ட சூத முனிவர் மகிழ்ச்சி அடைந்தார்.



# 4

## ஸ்ரீராமன் அகத்தியரை வழிபட்டது

சூதமுனிவர், முனிவர்களைப் பார்த்துத் தகடூரில் எழுந்தருளியுள்ள இறைவன் திருநாமங்களுள் ஒன்று வேளாலீஸ்வரர் என்பதாகும். அதன் வரலாற்றைக் கூறுகிறேன் கேட்பீராக! என்று சொல்லி, வேளாலீஸ்வரர் வரலாற்றைக் கூறலானார்.

ஸ்ரீ ராமபிரான் அரக்கனாகிய இராவணனைக் கொன்று பூமியில் அறத்தை நிலைநாட்ட அவதரித்தார். இராவணன் சீதாப்பிராட்டியை எடுத்துச்சென்று இலங்கையில் சிறைவைத்தான். இதனை அறிந்த ஸ்ரீராமன் ரரவணன் மேல் போர் தொடுத்து அவனைக் கொன்றார். சீதையைச் சிறைமீட்டு அயோத்திக்குத் திரும்பலானார். அப்பொழுது ராவணாதியர்களைக் கொன்ற கொலைப்பாவம் நீண்ட பெரிய கரிய உருவமும் கோரைப்பற்களும், இடிமுழக்கமும் கொண்ட பிரமஹத்தி தோஷமாகப் பின் தொடர்ந்தது. அப்பொழுது ''இவ்விடம் நம்மை வழிபட்டுச் செல்'' இந்ததோஷம் நீங்கும்

என்று ஓர் அசரீரி கேட்டது. அதனைக்கேட்ட ஸ்ரீராமன் அங்கு லிங்கம் அமைத்துச் சிவபெருமானை வழிபட்டார். ஸ்ரீரரமனைப் பின் தொடர்ந்த பிரமஹத்திதோஷம் உடனே விலகிச் சென்றது. இங்ஙனம் ஸ்ரீ இராமன் வழிபட்ட இடம் இராமேஸ்வரம் என்று அழைக்கப்பட்டது.

ராமேஸ்வரத்திலிருந்து, ஸ்ரீ ராகவன் அயோத்தியை நோக்கிப் புறப் பட்டான். ஸ்ரீ ராமனைத் தொடர்ந்த பிரமஹத்தி தோஷம் விலகிச் சென்றாலும் கூட ஸ்ரீ இராமனை அந்தத்தோஷம் முற்றிலும் விட்டு விட வில்லை. இதனை உணர்ந்த ஸ்ரீ இராமன் பட்டீசுவரத்தில் இறைவனை வழிபட்டுக் கொலைப்பாதகத்தை நீக்க வேண்டினார்.

அப்பொழுது பட்டீசுவர இறைவன், அவருடைய பாவம் தீர்த்த மலையில் முழுவதுமாக விலகும் என்று கூறி மறைந்தார்.

ஸ்ரீ இராமன் அங்கிருந்து புறப்பட்டுப் பல தலங்களைத் தாண்டி கொல்லிப்பாவை உறையும் கொல்லி மலையையும் கடந்து அரியூர் வந்தடைந் தார், அரியூரில் உள்ள வானியாற்றில் நீராடி வானியப்பரைத்துதித்தார். துதித்து வழிபாடு செய்து, தனது பாசறையில் ஸ்ரீ ராமன் வீற்றிருந்த போது அகத்தியன் அங்கு வருவதை அங்குள்ளவர் உணர்த்த, இராகவன் அகத்தியரை எதிர்ச்சென்று வணங்கினார்.

வணங்கிய ராகவன், அகத்தியரிடம் தந்தையை இழந்து பரதனை நீங்கி தாய்மார்களைப் பிரிந்து வாழ்ந்ததையும், சடாயுவின் மரணத்தையும், சீதை சிறை இருந்ததையும் கூறி வருந்தினார். அதனைக் கேட்ட கும்பமுனிவராகிய அகத்தியர் ஸ்ரீ இராமனை நோக்கி, ராகவா! உனக்கு ஒரு துன்பமும் இல்லை. உன் பெயரைச் சொல்பவர்களுக்கும் துயர் தீரும். சிவார்ச்சனை செய்தால் ஆணவாதி மலங்களும் மாயையும் தீரும். ஆகவே இங்குத் தீர்த்தமலையில் எழுந்தருளியுள்ள ஈசனை வழிபட்டால் உனது மனக்கவலைகள் யாவும் நீங்கும் என்று கூறினார், இதனைக் கேட்ட ஸ்ரீ இராமன் தீர்த்தகிரி ஈசுவரனைத் தியானித்து, அதனால் தீர்த்தம் அருளப் பெற்றுப் பிரமஹத்தி தோஷமும், துயரமும் நீங்கப் பெற்றான்.

அப்பொழுது அகத்திய முனிவர் ஸ்ரீ ராமபிரானை நோக்கி ராகவா! தேவர்கள் பொருட்டுத் தன் உயிரைத் தந்த மன்மதன் சிவபெருமான் நெற்றிக்கண்ணால் சாம்பல் ஆனதைக் கண்டு மனம் பெறாத பார்வதி தவம் இயற்றச் சென்றார். அதனைக் கண்ட தேவர்கள் சிவபெருமான் தவம் புரியும் தீர்த்தமலையை அடைந்து சிவபெருமானைத் துதித்தனர். சிவபெருமான், நாம் பார்வதியை மணந்து குமரனைத் தருவோம் என்று கூறி மறைந்தார். இதனைக் கேட்ட தேவர்கள் மகிழ்ச்சியுடன் புறப்பட்டனர் அப்பொழுது பரமசிவனை நினைத்து யோக நிலையில், இருந்த காமாட்சி சிவபெருமான் தேவர்களுதகு வரம் கொடுத்த செய்தியைக் கேட்டு அறிந்து மனம் மகிழ்ந்தாள். தானும் தீர்த்தமலைக்கு அருகில் சென்று தவம் புரியத் தீர்மானித்தாள், யோக காமாட்சியாகக் காஞ்சிபுரத்தில் இருந்தவள் காஞ்சிபுரத்திலிருந்து நீங்கி, தீர்த்தமலைக்கு அருகில் உள்ளதும், வாணியாறு, பெண்ணையாறு சனத்குமார நதி மற்றும் காவிரி சூழ்ந்த பகுதியாகிய தகடூரில் வந்து ஸ்ரீ சக்கரத்தை அமைத்து அதில் அமர்ந்து தவம் புரிந்து வருகிறாள்.

எனவே! ஸ்ரீ ராம மூர்த்தியே! நீயும் இங்கு இருந்து வாணியாற்றைக் கடந்து ஸ்ரீ மல்லிகார்ச்சுனர் வழிபட்ட தகடூரை அடைவாயாக! அங்குத் தனது நீர்ப்பிரவாகத்தால் எப்பொழுதும் இறைவனை வழிபடும் சனத்குமாரரை வழிபடுவாயாக! அங்குத் தவம் புரியும் ஸ்ரீ காமாட்சிதேவி இடம், சிவபெருமான் உனக்குத் தீர்த்தம் அளித்ததையும் அவர் யோகம் கலைந்து இருப்பதையும் கூறுவாயாக. அப்பொழுது அன்னை மகிழ்ச்சி அடைவாள். அந்த நேரத்தில் மன்மதனை மீட்டுப் உயிர்ப்பித்துத் தருமாறு அன்னையிடம் வேண்டுவாயாக! என்று சொல்லி அகத்தியர் ஸ்ரீ ராமனை வழிப்படுத்தினார். ஸ்ரீ ராமனும் அகத்திய முனிவர் கூறிய படியே தீர்த்த மலையில் தீர்த்தகிரிசுவரரை வழிபட்டுச் சனத்குமாரரை நோக்கிப் புறப்பட்டார்.



# 5

## ஸ்ரீ வேளாலீஸ்வரர் வரலாறு

ஸ்ரீ ராமபிரானது வரலாற்றைக் கேட்ட முனிவர்கள் சூதமுனிவரிடம் மன்மதன் வரலாற்றை எங்களுக்குக் கூறி அருள வேண்டுமென்று கேட்டனர். அதைக்கேட்ட சூதமுனிவர், புன்முறுவல் கொண்டவராய், மன்மதன் வரலாற்றை விரிவாகக் கூறலானார்.

சூரபன்மன் முதலான அரக்கர்கள் பூமியை முழுவதும் அகப்படுத்திக் கொண்டு தேவர்களையும் நலிந்தனர். தேவர்கள் பிரம்மனிடம் சென்று முறையிடப், பிரம்மன் ஸ்ரீ மகாவிஷ்ணுவிடப் சென்றுமுறையிடுமாறு கூறினார். ஸ்ரீ மகாவிஷ்ணு அந்த அரக்கர்கள் சிவகுமாரனால் மட்டுமே சங்கரிக்கப்படுவர். ஆகவே, சிவகுமாரனைத் தருமாறு கைலாய நாதனை வேண்டுவீர்களாக என்றார். எல்லாத் தேவர்களும் கைலாய மலைக்குச் சென்றனர்.

அப்பொழுது பார்வதிதேவி பர்வதராஜ குமாரியாகத் தோன்றி சிவபெருமானை அடையத் தவம் செய்து கொண்டிருந்தாள். சிவபெருமான் யோகத்தில் இருந்தமையால், சிவபெருமான் யோகம் நீங்கினால் ஒழியப் பார்வதி திருமணம் நிகழாது என்பதையும் குமார ஸம்பவம் நிகழாது என்பதையும் அறிந்த தேவர்கள் சிவபெருமானின் யோகத்தைக் கலைக் குமாறு மன்மதனிடம் வேண்டினர். தேவர்களின் பொருட்டுத் தன் உயிரைத் தியாகம் செய்யத் தீர்மானித்த மன்மதன் தன் மலர்ப்பானங் களைச் சிவபெருமான் மேல் பொழிந்தார். சிவபெருமான் யோகம் நீங்கிப் பார்வதியைப் பார்த்தார். அப்பொழுதே ஆறுமுகன் பிறந்தான். அப்பொழுது அவர் திருமுன் துணிந்து நின்ற மன்மதனைச் சிவபெருமான் தனது நெற்றிக் கண்ணால் நோக்கினார். அதனால் மன்மதன் சாம்பல் ஆனான். அதனைக் கண்ட பார்வதி தானும் தவஞ்செய்யப் போனாள் என்று மன்மதன் சாம்பலானதையும், தேவிகாமாட்சியின் தவத்திற்கான காரணத்தையும் சூதமுனிவர் கூறினார்.

அங்ஙனம் தேவர் காரணமாக உயிர் நீத்த மன்மதனை உயிர்ப்பிக்கத் தக்க தருணம் வந்தது. ஆதலின் யோககாமாட்சியாகத் தகடூரில் ஸ்ரீ சக்தி மந்திராசனத்திலிருந்து தவம் செய்யும் அன்னையை வேண்டுவாயாக! என்று அகத்தியர் ஸ்ரீ இராமனிடம் கூறினார் என்று சூதமுனிவர் கூறினார். ஸ்ரீ இராமனும் தகடூர்த் தருமபுரியை அடைந்து சனத்குமார நதியில் நீராடி அன்னையைத் தியானித்தான். அப்பொழுது ஸ்ரீ சக்கரத்தின் மேலிருந்து ஸ்ரீ காமாட்சி அம்மன், தேவர்களது குறைமுடிக்கும் சிவபெருமானைத் தியானித்தார். யோகந்தெளிந்து தீர்த்தமலையில் வீற்றிருந்த யோக நாயகன், அன்னையின் பிரார்த்தனைக்கு இரங்கிச் சந்திரசேகரனாகத் தேவி முன் காட்சி அளித்தார்.

மனைவியரிடம் பாரபட்சமாக நடந்து அதனால் சாபம் பெற்ற சந்திரனுக்கும் சாப விமோசனம் தந்து தன் தலையில் உயர்ந்த ஸ்தானத்தைத் தந்த அவரது திருக் குறிப்பை உணர்ந்த தேவி தேவர்கள் குறையையும், ரதியின் குறையையும் ஸ்ரீ பரமேஸ்வரனிடம் கூறி குறையிரந்து நின்றாள்,

ஸ்ரீ பரமேஸ்வரனும் மன்மதனை மீண்டும் உயிர்பிக்குமாறு சக்திக்கே அனுமதி அளித்தார்.

ஸ்ரீ பரமேஸ்வரனிடம் ஆக்ஞைபெற்ற சக்திதேவி ஸ்ரீ ராமச்சந்திரனை நோக்கி ஹே ! ராகவ ! உமது குறை தீர மன்மதனை மீண்டும் உயிர்தெழச் செய்வோம். அம்மன்மதன் ரதிதேவிக்கு மட்டுமே கட்புலனாவான். மற்றவர்கண்களுக்கு அரூபியாக விளங்குவான் என்று வரமளித்தாள். அதனைக்கேட்ட ஸ்ரீ மகாவிஷ்ணுவாகிய ராகவனும், மற்ற தேவர்களும், ரதிதேவியும் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்கள்.

அனைவருடைய முகத்திலும் தோன்றிய மகிழ்ச்சியான முகத்திலே சிறிது சோகமும் பதிந்திருப்பதைக் கண்ட ஸ்ரீ பரமேஸ்வரன் இன்னும் வேண்டிய வரங்களைக் கேட்பாயாக ! என்று ஸ்ரீ ராமச்சந்திரனிடம் கூறினார். ஸ்ரீ இராமச்சந்திரனும் ''முக்கண் முதல்வ ! வேதநாயக ! நிர்குணா ! நிமல ! நித்த ! தத்துவதீத ! சகள ! அகள ! முத்தனே ! தாங்கள் அறியாதது ஒன்றுமில்லை ! அனைத்துயிர்களிலும் பரமாய் நிறைந்துள்ள பரம ! தாங்கள் பார்வதி தேவியை ஸ்வீகரித்துத் திருமணக் காட்சியை எங்களுக்குத் தரல் வேண்டும்'' என்று வேண்டினார். அதனைக் கேட்ட சிவபெருமான். முறுவலைக் கொண்டு ''நாம் பார்வதியை முறைப்படி திருமணம் செய்து கொள்வோம் ; அதற்கு உரியவற்றைச் செய்வீர்களாக,'' என்று கூறினார். மேலும் ஸ்ரீசக்ரபீடத்தில் இருந்து சகல தேவர்களின் குறைகளையும் தீர்த்த தேவி இத்திருதலத்தில் சக்திபீடத்தின் மேலேயே நின்று எந்நாளும் பக்தர்களுக்குத் காட்சி தருவாளாக ! இச்சக்திபீடம் அஷ்ட தசகஜங்களால் நிலைநிறுத்தப்பட்ட தேர் போல விளங்குவதாக ! சத்தியின் அருட்சிறப்பை விளக்கும் முகந்தான், இங்கு எழுந்துள்ள தேவியின் ஸ்தானம் உயர்ந்து பொலிவதாக ! யோக காமாட்சியாகக் காஞ்சிபுரத்தில் விளங்கும் தேவி இங்கு அனைவருக்கும் போகபாக்கியத்தை அளித்துச் சிறப்புச் செய்தமையால். இச்சத்திதலம் போக கமாட்சித்தலமாக விளங்குவதாக ! என்றும் வரமளித்தார்.

இதனைக் கேட்ட காமாட்சியின் முகத்தில் மகிழ்ச்சியான சிறுமுறுவல் தோன்றியது. சிவபெருமான் சக்தியின் விரதத்தை ஏற்றதால் சக்தியும் போகத்தின் வடிவமாயினாள். அப்போது காமாட்சியின் புன்முறுவலைக் கண்டு தேவர்களும் சக்தியையும் சந்திர சேகரத்தையும் நோக்கி ''அம்மையே அப்பனே! தாங்கள் இங்கே எந்நாளும் உறையும் வரந்தர வேண்டும்'' என்று விண்ணப்பித்தனர். சிவபெருமான் திருக்குறிப்பை அறிந்து காமாட்சி அன்னையும் தன் புன்முறுவலால் அதற்கு இயைந்தாள். அதனைக் கேட்ட தேவர்கள் சிவபெருமானை ஓராயிரம் நாமங்களால் அர்ச்சனை செய்தனர். அப்பொழுது ஈஸ்வரி இவர் ஓராயிரமீஸ்வரர் அல்லவோ? என்றதும் ஓராயிரமீசர் என்ற பெயர் எங்கெங்கும் எதிரொலித்தது.

இங்ஙனம் மற்றத்தலங்களுக்கு இல்லாத சிறப்புக்களுடன், உயர்ந்த ஸ்தானத்தில் போக காமாட்சியாக விளங்கும் தேவியை அனைவரும் வழிபட்டனர்.

அப்பொழுது தேவர்கள் ராகவனை நோக்கி! ஸ்ரீ மகாவிஷ்ணுவே! அச்சுதா! அமரர் ஏறே! ரிஷிகேசவா! பத்மநாபா! தாமோதரா! தேவர்களின் குறைதீர்ந்து எல்லாரும் இன்புற்றிருக்கும் இங்கேயே இந்த அவதாரத்திருக்கோலத்தோடு எந்நாளும் அமர்ந்து எங்களுக்கு அருள்புரிய வேண்டுமென்று வேண்டினர். அப்பொழுது ஸ்ரீ ராகவன் அன்னையை நோக்கினான். பக்தவத்சலனான ஸ்ரீ ராமச்சந்திரனின் கருத்தினை உணர்ந்ததேவி! ஸ்ரீ ராகவ! நீ நமது வரத்தினால் தசரதனுக்கு மழலையாகப் பிறந்தாய்! எமது அருளில் பிறந்த நீ எனக்கு அரிய மைந்தனாவாய்! ஸ்ரீ ராமாவதாரத்தில் கோசலை மைந்தனாய், ஜானகியின் கரம்பிடித்து அரக்கர்களை அழித்த நீ இந்த அவதாரக் காட்சிகளோடு எமது பீடத்து மந்திரத்தோடு இரண்டறக் கலந்து இங்கேயே இருப்பாயாக! என்று கூறினார். தனக்குச் சகலசக்திகளையும் வழங்கி ராவணனை வெல்லத் துணை புரிந்த சக்தியின் பெருமையை உணர்ந்து ஸ்ரீ ராகவனும் தமது அவதாரச் சிறப்புக்கள் எல்லாம் தோன்றுமாறு ஸ்ரீ சக்ரத்தோடு ஐக்கியமானான்.

அதனைக்கண்ட ஸ்ரீ தேவி எமது மூலமந்திரம் ஸ்ரீ ராமன் அகத்தில் எப்பொழுதும் நிலைபெற்றிருக்க ஸ்ரீ ராமாவதாரக் காட்சி மட்டும் அனைவர்க்கும் கட்புலனாகும். இந்தச் ஸ்ரீ சக்ரமும் தேர்ச்சக்கமும் தேர்த் தட்டும் போலக்கட்புலன் ஆகும். இங்குவந்து என்னை வழிபடுகின்றவர் எனது ஸ்ரீ சக்ரமந்திரத்தையும் ஸ்ரீ ராகவனையும் ஒருசேர வழிபட்ட பயனைப்பெறுவர் என்று திருவாய் மலர்ந்தருளினார். எனறு சூதமுனிவர் முனிவர்களை நோக்கிக் கூறினார்.

மேலும், சூதமுனிவர் இத்திருத்தலத்தில் அம்மனை வழிபடுவோர். சகலபோகங்களை நுகர்வோர். இம்மை இன்பமும் மறுமையின்மையும் அவர்கட்குக் கிடைக்கும். திருமாமகளோடு ஸ்ரீ மகாவிஷ்ணு இங்கு வீற்றிருப்பதால், இதனை வழிபடுகின்றவர், அஷ்ட ஐஸ்வர்யமும் பெறுவார்கள். சந்தானபாக்கியம் அவர்களுக்குக் கிட்டும் கர்மபலனால் மனைவி, மக்களைப் பிரிந்தவர்கள், இத்தலத்தைத் தரிசித்தால், குடும்பம் ஒன்று சேர்ந்து சர்வமங்களமும் பெறுவர் என்று கூறினார். அதனைக் கேட்டு முனிவர்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர். சூதமுனிவர் தருமபுரித் தலத்தில் வழிபாடு செய்து திருவருள் பெற்றவர்கள் வரலாற்றைக் கூறத் தொடங்கினார்.



# 6

## அர்ச்சுனன் துயர் தீர்த்த வரலாறு

ஸ்ரீ மகாவிஷ்ணு தர்மம் எப்பொழுதெல்லாம் அழிகிறதோ அப்போதெல்லாம் திரு அவதாரம் எடுத்துத் தர்மத்தைக் காத்து அதர்மத்தை அழிக்கிறார். அப்பேர்பட்ட ஸ்ரீ மகாவிஷ்ணு பூவுலகில் தர்மத்தை நிலை நிறுத்த ஸ்ரீ கிருஷ்ணனாக அவதரித்தார். அவரோடு எமதர்மன் தரும புத்திரனாகவும் வாயுகுமாரன் பீமனாகவும் இந்திரன் அம்சத்தால் அர்ச்சுனனும் மருத்துவ தேவர்கள் நகுலசகாதேவர்களாகவும் சூரிய புத்திரன் கர்ணணாகவும் பிறந்தனர். அதர்மத்தின் பக்கத்தில் உள்ள கௌரவர்களோடு கர்ணன் இருந்தான். தருமன் முதலான பஞ்சபாண்டவர்கள் தர்மத்தின் பக்கம் இருந்தனர். தர்மத்தை நிலைநிறுத்தப் பகவான் கிருஷ்ணன் பாண்டவர்களோடு இருந்தார். கௌரவர்களும் பாண்டவர்களும் யுத்தத்திற்காக ஆயத்தம் செய்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது பகவான் கிருஷ்ணன், பாண்டவர்களை நோக்கிச் சிவபெருமானிடமிருந்து பாசுபத அஸ்திரத்தை வேண்டிப் பெறுவீராக என்று கூறினார்.

அதனைக் கேட்டு இந்திரனின் குமாரனும் வில்வித்தையில் தேர்ச்சி பெற்றவனும், காண்டீபம் என்னும் தனுசை உடையவனுமாகிய அர்ச்சுனன், பாசுபத அஸ்திரம் பெற இமயமலைக்குச் சென்றான். அவன் ஒற்றைக் கால்விரலை மட்டும் தரையில் ஊன்றி, அன்னமும் நீரும் இன்றி பசுபதியை நோக்கிக் கடுந்தவம் புரிந்தான். அப்பொழுது கௌரவர்கள் ஏவலால் மூகாசுரன் என்னும் அரக்கன் காட்டுப் பன்றி வடிவமாகச் சென்று அர்ச்சுனன் தவத்தைக் கலைக்க முற்பட்டான். கடுமையான தவத்திலிருந்த அர்ச்சுனன் கண்விழித்துத் தன் அருகில் இருந்த காண்டீபத்தை எடுத்து நாணேற்றிச் சரம் தொடுத்தான். அது அந்த அரக்கன் மேல் பட்டது. அப்படிப் பாய்ந்த பன்றி காடுமலைகளை எல்லாம் தாண்டி வேகமாக ஓடியது தன்னால் வேட்டையாடப்பட்ட மிருகத்தின் சரீரத்திற்பட்ட அம்பை எடுக்கும் கடமை வீரனாகிய தனக்கு இருப்பதால் அர்ச்சுனனும் அந்தப்பன்றியைப் பின் தொடர்ந்து ஓடினான்.

நெடுந்தொலைவு சென்ற அர்ச்சுனன் ஓரிடத்தில் அந்தக் காட்டுப் பன்றி அம்புப்பட்டுக்கிடப்பதைக் கண்டு அதனருகில் சென்று தன் வேட்டைப் பொருளை எடுக்க முனைந்தான். அப்பொழுது வேடன் ஒருவன் கையில் வில்லேந்தி அந்தக் காட்டுப் பன்றி அருகில் வந்து அதற்கு உரிமை கொண்டாடினான். அதனைக்கண்ட அர்ச்சுனன் கோபங்கொண்டு வேடனைத் திட்டினான். இருவருக்கும் கடுமையான போர் நடந்தது. உக்கிரமாக நடந்தபோரில் இருவரும் சளைக்காமல் போர் செய்தனர். அப்பொழுது அர்ச்சுனன் வேடனை வில்லால் தாக்கினான். வேடன் திரும்பத் தாக்கவே அர்ச்சுனன் நிலைகுலைந்தான். அப்போது வேடன் சிவபெருமானாக அர்ச்சுனன் முன் காட்சி தந்தார்.

அர்ச்சுனன் தன்னோடு வேடனாக வந்து சண்டையிட்டது சிவபெருமானே என அறிந்து மனம் வருந்தினான். தன் செயலுக்கு நாணிச் சிவபெருமானிடம் தன் பிழையைப் பொறுக்குமாறு வேண்டினான். பக்தர்களிடம் திருவிளையாடல் புரிவதையே தனக்கு ஆனந்தமாகக் கொண்டுள்ள சிவபெருமான் அர்ச்சுனனை நோக்கி, ''நாம் உன் தவத்தை

மெச்சினோம். நீ வேண்டியதைக்கேள் என அர்ச்சுனன் தனக்குப் பாசுபத அஸ்திரத்தை நல்குமாறு வேண்டினான் சிவபெருமானும் அர்ச்சுனனுக்குப் பாசுபத அஸ்திரத்தை வழங்கி'' நீ வேடனாக நம்மைப் பழித்தமையால் அடுத்த பிறவியில் வேடனாகப் பிறப்பாயாக!'' எனச்சாபம் வழங்கினார். பாசுபத அஸ்திரத்தோடு சாபத்தையும் பெற்ற அர்ச்சுனன் கவலை கொண்டவனாய்த் திரும்பிவந்து கொண்டிருந்தான். வரும் வழியில் காவிரிக்கரையில் இருந்த பரத்துவாசரைத் தரிசித்தான்.

பாரத்துவாசர் அர்ச்சுனனை நோக்கி அவன் துன்பத்திற்கான காரணத்தைக் கேட்டார். அர்ச்சுனன் நடந்ததைக் கூறினான். அதனைக் கேட்ட பாரத்துவாசர் அவனை வாழ்த்தித் தகடூர்த் தருமபுரியில் உள்ள சிவபெருமானை வழிபட்டால் அனைத்துத் துன்பங்களும் நீங்கும் என்று கூறினார். அதனைக் கேட்ட அர்ச்சுனன் தருமபுரி வந்து இறைவனையும் அம்மையையும் வழிபட்டான்.

அப்பொழுது சிவபெருமான் அவன் முன் தோன்றி நாம் உன்னைக் கண்ணப்பனாகக் திருக்காளத்தியில் ஆட்கொள்வோம்! வருந்தற்க! என்று கூறி அவனுடைய மனத்துன்பத்தை நீக்கினார். அதனைக் கேட்ட அர்ச்சுனன் சிவபெருமானை நோக்கிப் ''பக்தர்களை பரிபாலித்துக் காப் பாற்றும் பரமமூர்த்தியே! நான் அபராதம் செய்த அர்ச்சுனக் கோலத்தில் தங்களை என்றும் இங்கு வழிபட அருள்புரிவீராக! என்று வேண்டச் சிவபெருமான் உளமகிழ்ந்து உன்தவக்கோலமும் நம் கோலமும் ஒன்றாக அமைய இத்தலத்தில் சிலாரூபமாக எந்நாளும் இருப்பாயாக! என வாழ்த்தினார்.

அன்று முதல் அர்ச்சுனன் அவர் திரு முன்பு சிலா ரூபமாக நின்று சிவனை வழிபடுவான் ஆயினன். அர்ச்சுனன் மனத்துன்பத்தை நீக்கிய இந்தத் தலமே இந்திரனின் வெள்ளை யானைக்குச் சாபத்தால் நேர்ந்த மன வியாகூலத்தை நீக்கியதாகும் என்று சூதமுனிவர் கூறினார். அதனைக் கேட்ட முனிவர்கள் வெள்ளை யானை துயரம் தீர்த்த வரலாற் றையும் எங்களுக்கு உரைப்பீராக! என வேண்டச் சூதமுனிவர் கூறலானார்.



# 7

## வெள்ளையானை துன்பம் தீர்த்த வரலாறு

முன்னொரு நாள் துர்வாச முனிவர் கைலாயத்திற்குச் சென்று கயிலாய நாதனைத் தரிசித்துவிட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தார். அப்போது பார்வதியின் சேடிகளின் ஒருகந்தர்வ நங்கை பார்வதிதேவியின் கூந்தலில் இருந்த தாமரை மலரைத் துர்வாச முனிவருக்கு அளித்தாள். அதைப் பெற்றுக் கொண்ட துருவாசர் இந்திரலோகம் சென்றார். அப்பொழுது இந்திரன் வெள்ளையானையின் மேல் பவனி வந்து கொண்டிருந்தார். அவனது உலாக்காட்சி கண்ட துர்வாசர் தன்னிடமிருந்த தாமரை மலரை இந்திரனுக்கு வழங்கினார். இந்திரன் வெள்ளையானையின் மேலிருந்தபடியே அந்த மலரை வாங்கி அதன் முதுகில் வைத்தான். வெள்ளையானையாகிய ஐராவதம் தன் துதிக்கையால் அந்த மலரை எடுத்துக் காலில் மிதித்து நசுக்கிவிட்டது. இதனைக் கண்ட துர்வாசர் இந்திரனையும், வெள்ளையானையையும் சபித்தார்.

சாபம் பெற்ற இந்திரன் தன் பிழையை மன்னிக்கும்படி வேண்டினான். துர்வாசர் மனிமிரங்கிக் கடம்பவனத்தில் உள்ள ஈசுவரரால் சாபவிமோசனம் பெறுவீராக! என்று கூறி மறைந்தார். அவ்வாறே வெள்ளையானையும் சாதாரண யானையாகக் கடம்பவனத்தில் வாழ்ந்து சோமசுந்தரக் கடவுள் அருளால் சாபவிமோசனம் பெற்றது. சாப விமோசனம் பெற்ற வெள்ளை யானை சாபத்திற்குக் காரணமான தன் செயலை நினைத்து வருந்தியது. உலகத்தில் எல்லாருடைய துக்கங்களையும் நீக்கும் விக்னேஸ்வரனை வழிபட்டது. விக்னேஸ்வரனும் ''நீ காவிரி தீர்த்ததில் நீராடி உன் வருத்தம் நீங்கப் பெறுவாயாக!'' என்று கூறிமறைந்தார்.

விநாயகருடைய ஆணைப்படி காவிரியில் நீராடி வந்த வெள்ளை யானை காவிரி குதித்தோடத் தொடங்கும் இடத்திற்கு வந்து நீராடி அங்குள்ள இறைவனை வழிபட்டு நின்றது. அப்பொழுது அங்குவந்த யானை வேட்டுவர்கள் இந்த யானை நமது அரசனுக்கு உரியதாகும் என்று விநாயகமந்திரத்தால் அதனைக்கட்டித் தகடூர்த் தருமபுரியில் உள்ள அரசனிடம் கொண்டுவந்தார்கள். அரசனும் இந்த யானை நமது இறைவனாகிய சிவபெருமானுக்கே உரியதாகும் என்று சொல்லிக் கோயிலுக்குக் கொண்டு வந்துவிட்டான் இங்ஙனம் தகடூர்த் தருமபுரிக் கோயிலுக்கு வந்த யானை, விநாயகனையும் அங்குள்ள சிவபெருமானையும் வழிபட்டது.

சிவபெருமான் அந்த யானையின் மனத்துன்பம் நீங்கும்படி அருளினார். சிவனது அருளைப் பெற்ற வெள்ளையானை சிவபெருமான் திருமுன்பு அத்தலத்தில் எப்பொழுது நிற்கவும், எந்நாளும் சனத்குமார நதியில் இறைவனை வழிபாடு செய்யவும் வரந்தருமாறு வேண்டியது.

வெள்ளையானையின் விருப்பத்தை அறிந்த சிவபெருமான், ''நீ சிலாரூபமாக எந்நாளும் இங்கிருப்பாயாக'' என்று அருளினார். இங்ஙனம் சிவனருள் பெற்ற வெள்ளையானை விநாயக்கடவுளை மீண்டும் வணங்க! விநாயக் கடவுள் ''நீர் எந்நாளும் இங்கிருக்கும் வரம் பெற்ற

மையால் பக்தர்கள் என் பொருட்டுச் செய்யும் அனைத்து உபச்சாரங்களையும் இன்று முதல் ஏற்பாயாக! எல்லோரும் உன்னை விநாயகர் என்றே வழிபடுவாராக!'' என் வாழ்த்தினர். இங்ஙனம் வெள்ளை யானை இறைவன் திருமுன்பு சிலா ரூ ப மா க இருந்துவருகிறது. பக்தர்களும் இதனை விக்னேஸ்வரராக வழிபட்டு வருகிறார்கள்.

இங்ஙனம் இந்திரகுமாரனும் இந்திர ஊர்தியும் மனக்கிலேசமும் பாவமும் நீங்கித் தகடூர்ச் சிவபெருமான் ஆலயத்தில் இன்று சிலாரூபமாக இருந்து வருகிறார்கள். இவ்வாறு தன்னை அடைந்தவர்களின் மூல வினையையே தீர்க்கும் தலம்புவியெங்கும் வேறு இல்லை. ஆகவே இத்தலத்தில் இறைவனை வழிபட்டால் மனத்துன்பமும் பயமும் நீங்கும்; கர்மவினைகள் அனைத்துப் நீங்கும் என்று சூதமுனிவர் கூறினார்.



# 8

## ராஜ துர்க்கையின் மகாத்மியம்

முனிவர்களின் வேண்டுகோளை ஏற்றுச் சூதமுனிவர் தகடூரில் எழுந்தருளியுள்ள ராஜதுர்க்கையின் வரலாற்றைக் கூறலானார்.

மன்மதன் எரிந்த சாம்பலில் பிறந்த பண்டாசுரன் சிவபெருமானிடம் தன்னிடம் எதிர்ப்பவர்களின் பலத்தில் பாதியையும், அவர்கள் அஸ்திர சஸ்திரங்களால் இறப்பு இல்லாமையும் ஆகியவரத்தைப் பெற்றுத் தேவர் களை எல்லாம் கொடுமைப்படுத்தினான். கடைசியில் அவனை வெல்ல சாஷாத் மகாதேவி தோன்றினாள் அவளை அனைத்துத் தேவர்களும் தேவி! ஜகன்மாதா! சங்கரி! வாமாக்ஷி! காமாக்ஷி! என்று பலவாறு துதித்துப் போற்றினார்கள். ஜகன்மாதாவும் ஸ்ரீ சக்கரத்தில் ஏறிப் பண்டன் ஆட்சி புரிந்த சூனிய நகரத்தை நோக்கிப் புறப்பட்டாள். எதிரே வந்த ராட்சச சேனைகளைத் துவம்சம் ஆக்கினாள்; பண்டன் புத்திரர்களை வதம் செய்தாள்; அவனது சகோதரர்களும் மந்திரிகளும் மாண்டனர். கடைசியில் பண்டனே நேரில் போருக்கு வந்தான்.

நான்கு நாட்கள் போர் நடந்தது. நான்காம் நாள் பண்டன் காம ஸுராஸ்திரத்தைப் பிரயோகித்தான். அவ்வஸ்திரத்திலிருந்து எண்ணற்ற அசுரர்கள் தோன்றினர். அவர்களில் ஒருவனாக மகிஷாசுரன் தோன்றினான். இந்த அசுரனைக் கண்டு சக்திசேனை அலறித் தேவியைச் சரணடைந்து. ''தேவி! காப்பாற்று! சீக்கிரம் காப்பாற்று'' எனக்கதறினர். அதனைக் கண்டு மகேஸ்வரி கோபங்கொண்டு ரோஷத்தால் அட்டஹாஸம் செய்தாள். அதிலிருந்து ஸகல தேவர்களது தேஜஸால் படைக்கப்பட்ட துர்க்கை தோன்றினாள்.

துர்க்கைக்கு ஈஸ்வரன் சூலத்தையும், விஷ்ணு சக்கரத்தையும் வருணன் சங்கத்தையும், வாயு வில்லையும் அம்பறாத்துணியையும், இந்திரன் வஜ்ராயுதத்தையும், ஐராவதம் மணியையும் காலன் மகாதண்டத்தையும் வருணன் பாளத்தையும் மிருத்யுகத்திகேடயங்களையும் வழங்கினர். இவ்வாறு சகலதேவர்களும் தத்தம் உபகாரங்களை வழங்க நாராயணி எனும் துர்க்கை ஸிம்மவாகனத்தில் அமர்ந்து யுத்தம் செய்தாள்.

மகிஷாசூரன் அவளுடன் போரில் மற்றைய அசுரர்கள் அழிவதைக் கண்டு தன் மனத்தில் துர்க்கையைத் தியானித்து அவளது திருவடிகளில் கிடந்தான். துர்க்காதேவி மகிஷ வடிவமாக இருந்த அவனது தலையில் உள்ள கொம்புகளைத் தனது இடக்கையால் திருகினாள். தனது மற்றைய வலக்கையால் தனது சூலத்தை அவனது தோளில் செலுத்தினாள். அவனை ஸம்காரம் செய்யும் போதே துர்க்கை அவனது வேண்டுதலைச் செவிமடுத்தாள். மகிஷாசுரன் அன்னையே! சகலமாதா! என்னை எந்நாளும் உன் திருவடிகளில் என் மகிஷத் தலையுடனே இருக்க அருள்புரிவாயாக! உன்னை வழிபடும் அனைவரும் உன்னுடன் சேர்த்து என்னையும் வழிபட அருள வேண்டும்'' என்று பிரார்த்தித்தான்.

ஸ்ரீ சக்தி ரதத்தின் முன்னால் நின்று போர் புரிந்த துர்க்கை எப்பொழுதும் அருள் பாலிப்பவளாதலால் மகிஷாசுரனுக்கும் அவ்வாறே இருக்க வரம் தந்தாள்.

தகடூர்த் தருமபுரியில் மகேஸ்வரியாகிய காமாக்ஷி ஸ்ரீ சக்கரத்தில் எழுந்தருளியிருப்பதால், அவளின் முன்னே உள்ள துர்க்கையின் முன்னர் இன்னும் மகிஷாசுரன் துர்க்கையை அருட்கண்கொண்டு பரிபாலிக்க வேண்டும் என்று வேண்டி அருள் அருட்பாதத்திலேயே உள்ளான். இத்துர்க்கையை அனைத்து அரசர்களும் போற்றிவழிபடுவர். இவளை அரசர்கள் வழிபடு தெய்வமாகப் போற்றி வழிபடுவதால் ராஜதுர்க்கை என்று பேர்பெற்றுத் தகடூர்த் தருமபுரியில் ஸ்ரீ சக்தி ரதத்தில் இருந்து வரம் அளித்து வருகிறாள்.

இந்த ராஜதுர்க்கையை வழிபட்டு வந்தால் வீட்டில் மங்களம் பெருகும், திருமணம் நிகழும், எதிரிகள் பயம் நீங்கும், வித்தை பெருகும். இத்துர்க்கை மகேஸ்வரியிடமிருந்து நாம் அருளைப் பெறத்துணைபுரிவாள். ஆகவே மகேஸ்வரியை வழிபட்டவர் ராஜதுர்க்கையை வழிபட்டுப்பலனை யடைவதே எளிது என்று சூதமுனிவர் கூறினார்.

இவ்வாறு தகடூர்த் தருமபுரியில் இறைவனை வழிபட்டு உய்ந்த தேவர்கள் பலர். அதிகன் முதலாக அரசர்கள் பலர். எனவே, எல்லோரும் தகடூர்த் தலத்தையும், அதன் தீர்த்தத்தையும் வழிபாடு செய்தல் வேண்டும். அதற்கு வேண்டிய நித்தியநைவேத்தியங்கள் சிறப்பாக நடைபெறத் துணைபுரிய வேண்டும் என்று சூதமுனிவர் கூறினார்.

இத்தகைய சிறப்புப் பெற்ற தகடூர்த் தலபுராணத்தைக் கூறியவர், படிப்பவர், கேட்பவர், படியெடுப்பவர், அச்சிடுபவர், அதற்குத்துணை புரிபவர் ஆகியோர் எல்லா நலனும் பெறுவர். வாழ்வில் இன்பமும் வளமும் பெறுவர். அதற்கு ஸ்ரீ காமாட்சி ஸமேத மல்லிகார்ச்சுனரும், ஸ்ரீ ராகவனும், ஸ்ரீ துர்க்கையும் என்றும் வரந்தருவர்.

தகடூர்த் தலபுராணம் வாழ்க !

தகடூர் ஈசர் வாழ்க !

தகடூர் அம்மன் வாழ்க !

தகடூர் நகர் வாழ்க !

தகடூர் எல்லாவளமும் செழிக்க !

தகடூரார் நீடுவாழ்க !

தரணி எல்லாம் வாழ்க ! வாழ்க.

பகுதி 1

1. சூதமுனிவர் கூறுவதாகக் கூறுதல் புராண மரபு.

2. தண்டி அலங்காரமேற்கோள் பாடல் கருத்து.

3. ''அமரர்ப் பேணியும் ஆவுதி அருத்தியும் அரும்பெறல் மரபின் கரும்பிவண் தந்தும்.'' — புறம் 99

சேரமான் பெருஞ் சோற்றுதியன் சேரன் என்னும் புறநானூற்றுத் தொடர் கொண்டும் அதியர் தேவர்களுக்கு வேள்வி செய்து அதன் பயனைத் தேவர்களிடமிருந்து கரும்பைப் பெற்றனர் என்றும் கூறப்பட்டது. 'தந்தும்' என்ற வினையான் தேவர்கள் அதியரொடு சமநிலையினராகக் கொள்ளப்பட்டனர். ஈதாகொடுவெனும் மூன்றும் முறையே இழிந்தோன் ஒப்போன் மிக்கோன் இரப்புரை என்பது நன்னூல் ஆதலின். அதியரும் உதியரும் பனம் பூவிற்கு உரியராதலின் தாயத்தினராகக் கொள்ளப்பட்டு, விளக்கம் தரப்பட்டது புறப்பாடலில் உள்ள 'அறம்புரி' என்னும் தொடர் 'தருமபுரி' யாகக் கூறப்பட்டது.

பகுதி 2

புகை ஹொக எனத்திரிவது மொழி நூல் இயல்பு எனவே, ஹொகனகல் என்பதற்குப் புகையினகல் என்ற பொருள் கூறப் பட்டு விளக்கம் தரப்பட்டது. பரத்துவாசர் பெயரான் இன்றும் அங்கு ஒரு ஆசிரமம் உள்ளது. அகத்தியர் கோயிலும் உள்ளது.

பகுதி 3

மகாவிஷ்ணு குழந்தையாகப் பிறந்து மல்லிகார்ச்சுனன் என்று வழங்கப்பட்டதாக அபிதான சிந்தாமணியில் ஒரு கதைக்குறிப்பு உண்டு. அதனால் மகாவிஷ்ணு வழிபட்ட கோயில் இறைவனும் மல்லிகார்ச்சுனர் என அழைக்கப்பட்டார் என்று கூறப்பட்டது.

# தருமபுரிக் கோட்டை ஈசுவரன் கோயில் வரலாறு

பேரா. அ. மோகன்ராம், எம்.ஏ., (பி.எச்.டி)
வரலாற்றுத் துறை,
அரசு கலைக் கல்லூரி,
தருமபுரி-636 705.

எழுத்தின் ஒலி வடிவை உணர்த்துவதற்கு வரியெழுத்து அமைந்தது போலக் கட்புலனால் காணமுடியாத இறைவனைக் காட்டும் சாதனங்களாகக் கோவில்கள் விளங்குகின்றன.

உடலுக்கு உணவைத் தரும் வயல்கள் அமைந்திருப்பது போல, உள்ளத்துக்கு உணவாகிய பக்தியை உண்டாக்கும் பாங்கில் கோவில்கள் விளங்குகின்றன. இவ்வகையில் தமிழகம் தெய்வ மணங் கமழும் திருநாடாகத் திகழ்கிறது.

## தருமபுரியும் கோட்டைக் கோவில்களும் :

இன்றைய தமிழகத்தின் வடமேற்குப் பகுதியில் வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவட்டமாக அமைந்துள்ள மாவட்டத்தின் தலைநகர் தருமபுரி ஆகும். தருமபுரி நகரம் சேலத்திலிருந்து கிருஷ்ணகிரிக்குச் செல்லும் வழியில் 68 வது கிலோமீட்டரில் அமைந்துள்ளது.

## தருமபுரியின் பழம் பெயர் :

சங்கத் தமிழ் இலக்கியங்களும், 17 ஆம் நூற்றாண்டு வரையிலான கல்வெட்டுகளும் தருமபுரியைத் ''தகடூர்'' என்றே குறிப்பிடுகின்றன.

## தருமபுரியின் பெயர்க்காரணம் :

17 ஆம் நூற்றாண்டின் போது விஜய நகரப் பேரரசின் சார்பாகத் தகடூரின் சிற்றரசனாக ஆட்சி புரிந்த ஜெகதேவராயன் என்பவன் காலத்தில்தான் தகடூர் நாடு ''தருமபுரி'' எனப் பெயர் மாற்றம் பெற்றது. ஜெகதேவராயன் விருதுப் பெயர்களில் ஒன்று தருமராஜன் என்பது. அவனது இந்த விருதுப் பெயரிலிருந்து 'தருமபுரி என்னும் இவ்வூர்ப் பெயர் பெறப்பட்டதாகக் கூறுவர் (1)

## தருமபுரிக் கோட்டைக் கோவில் அமைவிடம் :

தருமபுரியில் கோட்டை எனப்படும் பகுதியானது நகரின் வடக்கே அமைந்துள்ளது. (2) இப்பகுதி 'பழைய தருமபுரி' என்று இக்காலத்து அழைக்கப்படுகிறது. இதைக் கன்னட மொழியில் 'ஹளே தருமபுரி' என்பர். நுளம்பர் ஆட்சியின் போது இங்குக் கோட்டை, கொத்தளம் அமைக்கப்பட்டன என்பர். (3) பதினேழாம் நூற்றாண்டில் ஜெகதேவராயன் என்பவனே தனது நிர்வாக வசதியின் பொருட்டு இங்குக் கோட்டையைக் கட்டினான் என்றும் கூறுவர். தருமபுரியில் ஆங்கிலேயரது ஆட்சி நிர்வாகம் (1792-இல்) ஏற்படுவதற்கு முன்பு இக்கோட்டையானது திப்புவின் பாசறைகளில் ஒன்றாகச் செயல்பட்டது. (4) துரதிர்ஷ்டவசமாகத் தகடூர் என்ற பெயர் மறைந்தது போலவே, கால வெள்ளத்தின் போக்கை எதிர்த்து நிற்க முடியாமல் இங்கிருந்த கோட்டையும் இருந்த சுவடே தெரியாமல் அழிந்து தரைமட்டமாகிப் போனது. (5)

கோட்டை இருந்த இடத்தில் ஈசுவரன் கோவில், பரவாசுதேவர் கோவில், மாரியம்மன் கோவில் ஆகியவை மட்டுமே உள்ளன. இன்று இக்கோட்டை ஈசுவரன் கோவிலினுள் சிவனுக்கென்று ஓர் ஆலயமும், அம்மனுக்கென்று தனி ஆலயமும் அமைந்துள்ளன.

## தருமபுரிக் கோட்டை ஈசுவரன் கோவில் வரலாறு :

ஆயிரத்தெட்டுச் சிவத்தலங்களில் ஒன்றாகக் கருதப்படும் இக்கோட்டை ஈசுவரன் கோவில் நுளம்பரது ஆட்சியின் போதுதான் எடுப்பிக்கப்பட்டது என எச். கிருஷ்ணசாஸ்திரி போன்ற அறிஞர்கள் கருதுகின்றனர். (6) கோவில் எடுக்கப்படுமுன் சிறிய அளவில் கோவிலும் வழிபாடும் இருந்திருத்தல் கூடும், புகழ்ச்சோழன், பழையதலங்களில் கோவில் அமைத்தது போல, இங்கிருந்த தலத்தையும் தனியாக அமைத்துக் கோவில் எடுத்து இருக்கலாம்

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நுளம்பரது ஆட்சி தகடூரில் ஏற்படுவதற்கு முன்பு, ஔவையார் புகழ்ந்து பாடிய அதியமான் மரபின் நெடுமான் அஞ்சி, பொகுட்டெழினி ஆகிய குறுநில மன்னர்களது தலைநகராக இருந்து பெருமை கொண்டது இத்தகடூர். அஞ்சியையும், அவன் மகன் எழினியையும் பெருஞ்சேரல் இரும்பொறை தோற்கடித்துக் கொன்றபோது, தகடூர் நாடு சேரரது ஆதிக்கத்தின் கீழ்ச்சென்றது.

சங்க காலத்துக்குப்பின், கட்டி மரபினர், கங்கர், பாணர் போன்றோர் தகடூர் நாட்டில் சிற்றரசுகளை நிறுவினர். களப்பிரரை வீழ்த்தித்தொண்டை நாட்டில் ஆட்சியை அமைத்துப் பல்லவர் தமது ஆதிக்கத்தைப் பின்பு தகடூர் நாட்டிலும் ஏற்படுத்திக் கொண்டனர்.

ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், அனந்தப்பூர் மாவட்டத்தில் ஹேமாவதி என்ற இடத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த நுளம்பர் என்னும் மரபைச் சேர்ந்த மகேந்திர நுளம்பன் (கி. பி. 870-95) என்பவன் தகடூர் மீது படையெடுத்து வந்து அதன் அப்போதைய ஆட்சியாளனான பாண அரசனை வென்று, தகடூரைக் கைப்பற்றி (878-இல்) (7) அதைத் தனது தலைநகராக்கிக் கொண்டான். அது முதல் கி. பி. 931 வரை தகடூர் நுளம்பரது ஆட்சிக்குட்பட்டிருந்தது. (8)

சிறந்த வீரனான மகேந்திர நுளம்பன் சைவ சமயத்தைப் பெரிதும் போற்றினான் எனச் சாசனங்கள் குறிப்பிடுகின்றன.

'அதியமான் கோட்டை' என்னும் பகுதி இவன் காலத்தில் 'மயீந்திர மங்கலம்' (மகேந்திர மங்கலம்) எனப்பெயர் மாற்றம் அடைந்தது போலவே அங்குள்ள சிவாலயமும் இவன் காலத்தில் கட்டப்பட்டதன் காரணமாகவே அதன் இறைவனும் 'மயீந்திஸ்வரம் உடையார்' என்னும் பெயரைக் கொண்டான் எனக்கூறுவர். (9)

இந்நுளம்ப மன்னன் பரகூரில் முகாமிட்டிருந்தபோது அங்கும் ஒரு சிவாலயத்தை எடுப்பித்து அதில் 'மகேந்திரீஸ்வரர்' என்னும் பெயரில் இறைவனைப் பிரதிஷ்டை செய்தான். அச்சமயம், அக்கோவிலுக்கு ஸ்ரீ நாடு என்னும் பகுதியில் அமைந்திருந்த நந்தனூரைத் தானமாக வழங்கினுன் (10) என்பதும் அக்கோவிலுக்கு அவனது மகன் அய்யபதேவன் (895-920) நிலமானியம் வழங்கியுள்ளான் (11) என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கன.

தருமபுரி கோட்டைப் பகுதியில் உள்ள மாரியம்மன் கோவில் எனப்படும் விருந்தாடி அம்மன் கோவிலில் காணப்படும் மகேந்திர நுளம்பனது சக வருஷம் 800 இன் (878) காணப்படும் கல்வெட்டானது அம் மன்னன் ஒரு சைவ ஆச்சாரியருக்கு மருதனேரியைத் தானமாகக் கொடுத்த செய்தியைக் கூறுகிறது. அத்துடன், சமணக் கோவிலைக் கட்டிய வணிகர் உள்ளிட்ட தகடூர் வணிகர்கள் சில வாணிபப்பொருட்கள் மீதான வரியைத் 'தேவதானமாகச்' சிவன் கோவிலுக்குக் கொடுத்ததையும் அது குறிப்பிடுகிறது. (12)

தருமபுரிக்கு அருகிலுள்ள இராமக்கா ஏரிக் கரையிலுள்ள கற்பலகையில் காணப்படும் இதே காலத்தைச் சேர்ந்த நுளம்பரது கன்னட மொழிச் சாசனம் தகடூரின் சைவ ஆச்சாரியர் வித்யாராசி (வித்திராசி) என்பவரைக் குறிப்பிடுவதோடு காளி-சோளீஸ்வரர் ஆலயம், பல்லவேஸ்வரர் ஆலயம், மகா போகீஸ்வரர் ஆலயம், சிறப்பு வாய்ந்ததும், குறையில்லாததுமான

நன்னீஸ்வரர் ஆலயம், மற்றும் காஞ்சி பஜங்கீஸ்வரர் ஆலயம் ஆகியவை இப்பேரரசைச் சார்ந்த புகழில் சிறப்புற்றன என்ற செய்தியையும் தெரிவிக்கிறது. (13)

இச்சாசனங்களைப் பார்க்கும் போது, தருமபுரிக்கோட்டை ஈசுவரன் கோவிலும் அப்பெரு மன்னன் காலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. ஆனால், அக்கோவிலுக்கென நுளம்பர் செய்த அறப்பணியைப் பற்றிக் கூறும் சாசனம் ஏதும் தற்போது இல்லை. நுளம்பருக்குப் பின்பு பாழ்பட்டுப்போன அக்கோவிலைச் செப்பனிட்டவர்கள் நுளம்பரது சாசனங்கள் இருந்த பழுதுபட்ட கல்தூண்களையும் நீக்கியிருக்க வேண்டும்.

கோட்டைச் சிவன் கோவிலுக்கு நுளம்பரது சேவையைக் கூறும் சாசனம் தற்போது இல்லாவிடிலும், அக்கோவிலின் முன் மண்டபத்தூண் ஒன்றில் (14) மகேந்திர நுளம்பனும் அவனது மகன் அய்யப்பதேவனும் சமனக் கோவிலுக்கு வழங்கிய தானத்தைப் பற்றிக் கூறும் இரண்டு சாசனங்கள் காணப்படுகின்றன.

மல்லிகார்ச்சுனர் (சிவன்) கோவில் முன் மண்டபத்தூண் ஒன்றின் நான்குபுறமும் சமஸ்கிருதம் மற்றும் கன்னட மொழிகளில் செதுக்கப்பட்ட சாசனம் சக ஆண்டு 815-இல் (கி. பி. 893), மகேந்திர நுளம்பனது ஆட்சியின் போது ஸ்ரீ மங்கலம் என்னும் ஊரைச் சேர்ந்த ஒரு வணிகனது இரு புதல்வர்களான நிதியண்ணன், சண்டியண்ணன் என்பவர்கள் தகடூரில் ஒரு சமண பஸ்தி கட்டியதையும், மகேந்திர நுளம்பனிடமிருந்து அச் சகோதரர்கள் மூலஹள்ளி என்னும் கிராமத்தைப் பெற்று அதை அவர்கள் வினயசேனரது மாணவரான கனகசேனருக்கு மேற்படிச் சமண பஸ்தியைச் செப்பனிடவும், புதிதாகக் கட்டவும், வழிபடவும் வேண்டித் தானம் செய்ததையும் கூறுகிறது. (15)

அதே தூணின் கீழ்ப் புறத்தில் உள்ள மற்றொரு சமஸ்கிருத கன்னட மொழிச் சாசனம். (16) மகேந்திர நுளம்பனது மகன் அய்யப்பதேவன் காலத்தில், சக ஆண்டு 841-இல் (கி.பி. 919) எழுதப்பட்டது. இதில், லோகையா என்பவர் புது கூரு என்னும் கிராமத்தை அய்யப்பதேவனிட மிருந்து பெற்று அதை நிதியண்ணன் கட்டிய சமணப்பஸ்திக்குத் தானம் செய்த செய்தி கூறப்படுகிறது.

இத்தூண் சாசனங்கள் சமணக் கோவிலுக்கு நுளம்ப மன்னர்கள் கொடுத்த தானத்தைக் குறிப்பிடுவதால் கோட்டை மல்லிகார்ச்சுனர் கோவிலானது 'மல்லிநாதர்' என்னும் பத்தொன்பதாவது சமணத் தீர்த்தங்கரர் பெயரில் சமணக் கோவிலாக இருந்து பின்னர் 'மல்லிகார்ச்சுனர்' என்ற பெயரில் சிவன் கோவிலாக மாறியது எனக் கருதுவது சரியன்று. ஏனெனில்,

1. இக்கோவிலில் காணப்படும் 3 ஆம் குலோத்துங்க சோழனது கல்வெட்டுகள் அங்கிருந்த கடவுள்களைச் சாணாயிரம் முழமாயிரம் உடையார், திருவேளாலீஸ்வரம் உடையார், ஓராயீஸ்வரம் உடையார் என்னும் பெயர்களில் தான் குறிப்பிடுகின்றனவே அல்லாமல் மல்லிநாதர், மல்லிகார்ச்சுனர் என்ற பெயர்களில் குறிப்பிடவில்லை.

2. இக்கோவில் கட்டிட அமைப்பானது நுளம்பரது கட்டிடக் கலைப் பாணியையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. நுளம்பர் சைவசமயத்தைச் சேர்ந்தவர்களே ஒழியச் சமணரில்லை.

3. இக்கோவிலில் உள்ள கலைச்சிற்பங்கள் நுளம்பரது சிற்பங்களைக் கொண்டிருப்பதுடன் இவை இந்து சமய நிகழ்சிகளை மட்டுமே தாங்கி நிற்கின்றன.

4. சிறந்த சிவபக்தனான மகேந்திர நுளம்பன், தான் சமண சமயத்தையும் ஆதரிப்பவன் என்பதைப் பிறருக்கு உணர்த்தும் பொருட்டுத் தலைநகரில் (தகடூரில்) அமைத்த அற்புதமான அக்கலைக் கோவிலின் முன் மண்டபத்தூணில் சமணக் கோவிலுக்குத் தான் கொடுத்த தானத்தைச் சாசனமாக்கிப் பெருமை கொண்டான் போலும்! தந்தை வழியைப் பின் பற்றிய மகன் அய்யப்பதேவனும் சமணக் கோவிலுக்குத் தான் செய்த தானத்தையும் தனது தந்தை அமைந்திருந்த சாசனத் தூணின் கீழ்ப் புறத்திலேயே செதுக்கினான் போலும்!

எனவே, இக்கோட்டைக் கோவில் மகேந்திர நுளம்பன் காலத்தில் கட்டப்பட்ட சிவன் கோவில் என்பதில் எவ்விதச் சந்தேகமும் இல்லை.

நுளம்பரது ஆட்சிக்காலத்தில், மூன்றாம் குலோத்துங்க சோழனது கல்வெட்டில்-(17) குறிப்பிட்டுள்ளபடி, கோட்டைச் சிவன் கோவிலில் சாணாயிரம் முழமாயிரம் உடையார். திருவேளாலீஸ்வரம் உடையார், என்று மூன்று ஆலயங்கள் அடுத்தடுத்து இருந்திருக்க வேண்டும். அவை ஏன் இவ்வாறு பெயர் பெற்றன என்பது தெரியவில்லை.

ஒரே இடத்தில் மூன்று சிவனாலயங்கள் அடுத்து அடுத்துக் கட்டப் படும் மரபு உண்மையைக் கொடும்பாளூரில் காணலாம். இரண்டாம் பராந்தகன் என்னும் சுந்தர சோழன் (956-973) காலத்தில் பூதி விக்கிரம கேசரி என்னும் கொடும்பாளூர்ச் சிற்றரசனால் கொடும்பாளூரில் கட்டப்பட்ட மூவர் கோவிலின் மூலச் சன்னதிகள் மூன்றும் சிவபெருமானுக்கு மட்டுமே உரியனவாக இருப்பது (18) ஒப்புநிலையில் இங்கு நினைவில் கொள்ளத் தக்கதாகும்.

நுளம்பரது வீழ்ச்சிக்குப் பின்னர்க் கோட்டைக் கோவில் ஆலயங்கள் செல்வாக்கு இழந்து போற்றுவார் இன்றிப் பாழ்பட்டு வழிபாடில்லாமல் போயின.

## சோழரது காலத்தில்

இந்நிலையில், சோழரது ஆதிக்கத்தின் கீழ்த் தகடூர் வந்து பல ஆண்டுகள் கழிந்து, 3 ஆம் குலோத்துங்கச் சோழனது 10 ஆம் ஆட்சி யாண்டின் போது, திருக்காளத்தியிலிருந்து தகடூருக்கு வந்த வண்ணானைக் கும்பிட்டார் என்னும் பெயருடைய ஆண்டார் (19) ஒருவர் கோட்டைச் சிவாலயங்கள் பாழ்பட்டு வழிபாடின்றி இருப்பதைக் கண்டு வருந்தி அவற்றைப் புதுப்பிக்க எண்ணினார்.

அதன் பொருட்டு, அப் பெரியவர் (ஆண்டார்) மூன்றாம் குலோத் துங்கனது சிற்றரசனும் தகடூர் நாட்டின் அதிகாரியுமான அதியமானிடம் (இராஜராஜ அதியமான்) சென்று, இம்மூன்று ஆலயங்களுக்கும் சிவப் பிராமணரைக் கொண்டு வழிபாட்டுக்கு வகைசெய்ய வேண்டும் என்று வேண்டினார். அதியமானோ தகுந்த சிவப்பிராமணரை அழைத்து வருமாறு அவரிடமே கூறினான். ஆண்டாரும் சிவப்பிராமணரை அழைத்து

வர, அதியமான் அச்சிவப்பிராமணருக்கு நீர் வார்த்து அவர்களை அவ்வாலயங்களின் பூசாரிகளாக நியமித்தான். (20)

அதன் பின்பு, அவ்வாலயங்களில் இரண்டு ஆண்டுகள் திருப்பணிகள் நடைபெற்றன. மூன்றாம் குலோத்துங்கனது 12 ஆம் ஆட்சியாண்டின் கல்வெட்டு மேற்குறிப்பிட்ட அவ்வாலயங்களில் திருப்பிரதிஷ்டையும், திருப்புதுக்குச் சாந்தும் செய்யப்பட்டதைக் குறிப்பிடுகிறது. இத்திருப் பணியை அதியமானின் நல்வாழ்வுக்காக அதியமான் அடியான் பம்மாரக்கூத்தன் புலியூர்க் கிழவன் தம்பிரானான சோழன் என்பவன் செய்தான். (21)

சாணாயிரம் முழமாயிரம் உடையார் என்றழைக்கப்பட்ட (இன்றைய மல்லிகார்ச்சுனர்) ஆலயத்தின் முன் மண்டபம், மகா மண்டபம், விமானம் போன்றவை சோழர் காலத்தில் செய்யப்பட்ட திருப்பணிகள் எனலாம். மற்றபடி, அவ்வாலயத்தின் கர்ப்பக்கிரகம், அதிஷ்டானம், அர்த்த மண்டபம், நவரங்க மண்டபத்தை அலங்கரிக்கும் தூண்கள் மேல் விதானம் நுளம்பர் காலத்தவையேயாகும்.

இத்திருப்பணி செய்யப்பட்டபோது, மூன்று சிவாலயங்களில் ஒன்றான திருவேளாலீஸ்வரம் உடையார் என்றழைக்கப்பட்ட (இன்றைய காமாட்சி அம்மன்) ஆலயத்தின் அதிஷ்டானம் சோழர் பாணியில் உயரமாக 48 முக்கோணங்களைக் கொண்டு அமைக்கப்பட்டது. (22) அவ்வாலயத்தை யானைகள் தாங்குவது போலவும், அதிஷ்டானத்தைச் சுற்றி இராமாயணக் காட்சிகளும் சிற்பமாகச் செதுக்கப்பட்டன. இதன் விமானமும், மண்டபத்தை அலங்கரிக்கும் தூண்களும் மேல் விதானமும் கூட நுளம்பர் கலைப்பாணியைப் பின்பற்றிச் சோழர் காலத்தில் செய்யப்பட்ட திருப்பணியே ஆகும்.

## அம்மனுக்குத் தனிக்கோவில்

பல்லவர் காலத்திலும், முற்காலச் சோழர் காலத்திலும் அம்மனுக்கென்று தனிக்கோவில் சிவன் கோவிலில் ஏற்படவில்லை. இறைவன் சன்னதியிலேயே அம்மன் 'போகசக்தி அம்மன்' எனத் தனி இடம் பெற்றிருந்தாள். (23) ஆனால், அம்மனுக்கென்று தனிக்கோவில்

கட்டும் பழக்கம் முதன்முதலாக முதலாம் இராஜராஜசோழன் (985-1014) காலத்தில்தான் ஏற்பட்டது. அப்போது, அம்மன் சன்னதிக்குத் திருக் காமக் கோட்டம் என்ற பெயர் வழங்குவதாயிற்று. (24)

இருப்பினும், மூன்றாம் குலோத்துங்கன், அவனுக்குப் பின் ஆட்சிக்கு வந்த மூன்றாம் இராஜராஜன், மூன்றாம் இராஜேந்திரன் ஆகியோர் காலங்களில் தான் ஏற்கனவே இருந்த கோயில்களுக்குத் திருக்காமக் கோட்டங்கள் அழகுபட நிர்மாணிக்கப்பட்டன என்பதையும் கல்வெட்டுகள் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. (25)

தருமபுரி கோட்டைக் கோவிலைப் பொறுத்தவரை, மூன்றாம் இராஜராஜன் காலத்தில் சாணாயிரம் முழமாயிரம் உடையார் (இன்றைய மல்லிகார்ச்சுனர்) ஆலயத்தை அடுத்திருந்த திருவேளாலீஸ்வரம் உடையார் ஆலயம் 'காமாட்சி அம்மன்' ஆலயமாக மாற்றப்பட்டிருக்கக் கூடும். இம்மாற்றம் விஜய நகர ஆட்சியின் போது ஏற்பட்டிருக்க வேண்டும் என்று கருதுபவரும் உண்டு. (26)

## விஜய நகர ஆட்சிக் காலம் 'மல்லிகார்ச்சுனர்' எனப் பெயர் மாற்றம் :

கி. பி. 15 ஆம் நூற்றாண்டில் ஆண்ட மல்லிகார்ச்சுனர் (1446-65) என்ற விஜய நகர மன்னனது காலத்தில் தான் அவனைச் சிறப்பிக்கும் பொருட்டுக் கோட்டை ஈசுவரனுக்கு (சாணாயிரம் முழமாயிரம் உடையாருக்கு) 'மல்லிகார்ச்சுனர்' என்ற பெயர் மாற்றம் செய்திருக்க வேண்டும். (27) அது முதற்கொண்டு அவ்விறைவன் மல்லிகார்ச்சுனர் என்றே அழைக்கப்படுகிறார்.

இக்கோட்டை ஈசுவரன் கோவிலின் திருச்சுற்றுக் கோபுரத்தை 450 ஆண்டுகளுக்கு முன்பு திம்மய்ய நாயக்கர் என்பவரது நன்மைக்காக தகடூர் நாட்டை நாயகம் செய்வானாகிய இராமநாயனார் பொன்னக் கூத்தன் என்பவன் கட்டினான். (28)

காமாட்சி அம்மன் ஆலயத்துக்கு வடக்குப்புறம் சோமேஸ்வரர் என்னும் பெயரில் அமைந்துள்ள சிறிய ஆலயம் தான் மூன்றாம் குலோத்துங்கனது கல்வெட்டுக் குறிப்பிடும் ஓராயீஸ்வரம் உடையார் ஆலயமா? என்பது ஆய்வுக்குரியதாகும்.

## விஜய நகர ஆட்சிக்குப் பின் :

விஜய நகர ஆட்சிக்குப் பின்பு தருமபுரியை ஆண்ட ஜெகதேவராயன், மைசூர் ஓடையார், மைசூர் சுல்தான்கள் காலத்தில் கோட்டை ஈசுவரன் கோவிலில் ஏற்பட்ட திருப்பணிமாற்றங்கள் பற்றி அறிவதற்குத் தெளிவான கல்வெட்டுகள் கிடைக்கவில்லை.

திப்பு சுல்தான் ஆட்சியின்போது இக்கோட்டை அம்மன்னனது பாசறை யாகச் செயல்பட்டுச் சேதமடைந்தது. (29)

திப்புவைத் தோற்கடித்துத் தருமபுரி உள்ளிட்ட சேலம் பகுதிகளின் ஆட்சி நிர்வாகத்தை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி ஏற்ற பிறகு (1792-இல்), தருமபுரியில் ஏற்பட்ட பெரும் பஞ்சத்தின் போது பாதிக்கப் பட்ட மக்களின் துயரைத் துடைக்கும் பொருட்டு ஆங்கில ஆட்சியாளர் மக்களைப் பயன்படுத்தி இடிபாடுகளுடன் காணப்பட்ட கோட்டையை இடித்துத் தரைமட்டமாக்கிக் கோட்டை இருந்த சுவடே இல்லாமல் செய்துவிட்டனர். (30) என்றாலும், இக்கோயில் பகுதி மேடாக இருப்பது இங்குக் கோட்டை இருந்தமையை இன்னும் தெளிவுபடுத்துகிறது. மதில்சுவரின் தடயங்களை இன்றும் காணலாம்.

ஆயினும், காலத்தை வென்று நிலைபெற்ற இக்கோவில்கள் கோட்டை இருந்த இடத்தினுள் இருப்பதால் இவற்றைக் கோட்டைக் கோவில்கள் என்றே மக்கள் இன்றளவும் அழைக்கின்றனர். இக்கோட்டை ஈசுவரன் கோயில் திருத்தலத்தில் அம்மையும் அப்பனும், காமாட்சி மல்லிகார்ச்சுனர் என்னும் திருநாமம் தாங்கி அருளாட்சி செய்கின்றார்கள்.

## அடிக்குறிப்பு

1. அ. மோகன்ராம், தருமபுரியை ஆண்ட அரசர்கள், தினமலர் 11-9-90, பக். 10.

2. F. J, Richards, Madras District Gazetteers-salem, Vol.I,Part II, Madras, 1918, P. 199.

3. சோமலெ, சேலம் மாவட்டம், சென்னை, 1961, பக். 126.

4. H. Le. Fanu, A Manual of the Salem District, Vol. II, Part III, Madras, 1833, P. 220.

5. F. J. Richards, OP. Cit. P. 199.

6. Ep. Ind; Vol. X, P P 54-70; A. R. E. 1910-11, P. 65; M. Arokiaswami, The Kongu Conutry, Madras, 1956, P. 173.

7. V. Balambal, Feudatories of South India, 800-1070 AID., Allahabad, 1978, P. 78.
   இரா. நாகசாமி, தகடூரில் திகழும் நுளம்பர் கோவில், கல்வி தீபாவளி மலர், 1975, பக். 63.

8. F. J Richards, Op. Cit, Vol. I, Part I, P. 53, A. R. E. No. 198 of 1910, V. Balambal, Op. Cit. P. 78.

9. A. R. E. Nos. 199 of 1901, 306 of 1910.

10. E. C., Vol. XII, Si. 38; V. Balambal, Op Cit.

11. E. C., Vol. XII, Si. 39.

12. F. J. Richards, Op. Cit, Vol. I, Part II, P. 202.

13. Ibid, Part II, P. 203; A. R. E. No. 309 of 1901.

14. மயிலை சீனி வேங்கடசாமி, சமணமும் தமிழும், சென்னை. 1980 பி. 165, இத்தூண் இன்று சென்னை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

A. Ekambaranathan and C. K. Sivaprakasam, Jaina Inscriptions in Tamil Nadu, Madras, 1987, Nos. 162, 163, PP. 105-6.

15. Ep. Ind., Vol. X, PP. 54-70; A. R. E. No. 304 of 1901; A. Ekambaranathan, and C. K. Sivaprakasam, Op. Cit. No. 162.

16. Ep. Ind. Vol. X, PP. 57-64; A. R. E. No. 305 of 1901, A. Ekambaranathan, and C. K. Sivaprakasam, Op. Cit. No. 163.

17. S. I. I., Vol. VII, Nos. 533, 534.

18. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி, சோழர்கள் - பாகம் 2, சென்னை, 1989, பக். 938.

19. கோவில் பிரகாரம் சுத்தம் செய்பவர், மெழுகுபவர், நந்தவனம் வைத்துப் பாதுகாபவர் 'ஆண்டார்' எனப்பட்டனர் மா. இராசமாணிக்கனார், சைவ சமய வளர்ச்சி, சென்னை, 1958, பக், 74, எப். எஸ். எண். 84.

20. S. I. I. Vol. VII, No. 533, A. R. E. No. 307 of 1901.

21. S. I. I. Vol. VII, No. 534; A. R. E. No. 308 of 1901; இரா. நாகசாமி, மு கு. நூ, (முன்பு குறிப்பிட்ட நூல்) பக். 64.

22. சோமலெ, மு கு. நூ, பக். 126.

23. மா. இராசமாணிக்கனார், மு. கு. நூ. பக். 182.

24. கே. எ. நீலகண்டசாஸ்திரி, மு. கு. நூ. பக். 946.

25. மே. நூ. (மேற்படி நூல்).

26. ச. கிருஷ்ணமூர்த்தி, தருமபுரி வரலாறும் பிரகலாத சரித்திரமும், 1989 பக். 95.

27. மே. நா. பக். 35.

28. இரா. நாகசாமி, தகடூர், தமிழ்நாடு, அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, 1979, பக். 15.

29. H. Le. Fanu, Op. Cit, Vol. II, Part II P. 220.

30. I bid; F. J. Richards, Op. Cit, Vol.I, Part II, P. 199.

## கல்வெட்டுகள்

மாவட்டம் :
வட்டம் : } தருமபுரி
ஊர் :

ஆட்சி ஆண்டு : சக வருஷம் 815
கி. பி. 893.

மொழி : சமஸ்கிருதம்-கன்னடம்

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை } A. R. E. எண். 304/1901

அரசு : நுளம்பர்

முன்பதிப்பு : Ep. Ind., Vol X, 1909-10 Page: 54-57

மன்னன் : மகேந்திர நுளம்பன்

இடம் : தருமபுரிக் கோட்டை ஈசுவரன் கோவில் முன் மண்டபத் தூண் ஒன்றின் நான்குபுறமும் உள்ளது (இந்நூல் தற்போது சென்னை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது)

Begins with an innovation to the Jinendras and mentions the rulers of the Nulamba-Pallava Vamsa upto Mahendra.

It records that two brothers Nidhiyanna and chandiyanna, sons of a merchant from Srimangala, built a Jaina Basti (temple) at Tegadura.

The former received from the King (Mahendra) the village Mulahalli and inturn made it over to Kana Kasena Siddhanta Bhatra, the pupil of vinayasena Siddhanta Bhatara of the pogariya-gana, for repairs, additions, worship etc., in the basti.

The witnesses of the transaction were the four sanayins, the Nadumagara-narasasana officers, etc.,

மாவட்டம்,

வட்டம், தருமபுரி.

ஊர்

மொழியும் எழுத்தும் : தமிழ்

அரசு : சோழர்

மன்னன் : 3 ஆம் குலோதுங்கன்.

ஆட்சியாண்டு : 10 வது

இந்தியக் கல்வெட்டு :

ஆண்டு அறிக்கை

முன்மதிப்பு :

இடம் : தருமபுரிக் கோட்டை மல்லிகார்ச்சுனர் கோவிலில் உள்ள காமாட்சி அம்மன் ஆலயத்துக் கருவறையின் தெற்குப்புறச் சுவர்.

''ஸ்வஸ்த ஸ்ரீ
திரிபுவனச் சக்கரவர்த்தி
கள் ஸ்ரீ குலோத்துங்க
சோழதேவற்கு யாண்
டு பத்தாவது நிகரிலி சோழமண்டலத்துக் க
ங்க நாட்டுத் தகடூர் நாட்டுத் தகடூரில் சாணாயிர
முழமாயிர முட்பட்ட கோயில் உடையார் திரு
வேளாலீஸ்வர முடையாரும் உடையாரோ
ராயீஸ்வர முடையார் கோயிலும் இக்கோயி
ல்கள் இன்ன தனைகாலம் பாழ்பட்டுக்
கிடந்ததென்று அறிவாரில்லை திருக்காளத்
தியினின்றும் ஆண்டார் வண்ணாலனை
க் கும்பிட்டாரெழுந்தருளி இக்கோயில்கள்கிட
க்கிற அனுக்கிரகத்தை
க்கண்டு அதியமா
னார் மாடலேன் வ
தேவரே சாணாயிரமு
ழ மாயிர முட்பட்ட
கோயில்கள் மூன்று
ம் சிவப்பிரமாணர்

பூஜிக்க வேணுமென்
று ஆண்டார் அதிய
மானார்க்கு சொல்ல அவருமான்டீ
ருமக்கு ஆவானொரு சிவப்பிராம
ணனைக் கொடுவாருமென்ன ஆண்டாரும்
அட......த்தில் காண உடை
ய சிவப்பிராமன்....................
யன் தேவருலகத்தே கொ
டுவந்து காட்ட சாணாயிர முழமாயிர முட்பட்ட
கோயில்கள் உன
க்கேகாணியாக தந் தோம்என்று அதிரோகதியாகி
வாசலுக்கு
ள்ளே இருந்து திருக்கையாலே நீர்வார்த்து அப்போதே
காணி பிரம்மா
னமாக எழுதி தி............றுக்கொடுத்தோமென்று திருவெ
ழுத்துபட்டு இதுக்கு அரசூருடையாளனழுத்துமிட்டு
தகடூர்த''

குறிப்பு: வண்ணானைக்கும்பிட்டான் என்பது சேரமான் நாயனரைக் குறிக்கும் என்பர்.

மாவட்டம் :
வட்டம் : } தருமபுரி
ஊர் :

மொழியும் :
எழுத்தும் : } தமிழ்

அரசு : சோழர்

மன்னன் : 3 ஆம் குலோத்துங்கன்.

ஆட்சியாண்டு : 12-வது

இந்தியக்கல்வெட்டு :
ஆண்டு அறிக்கை

முன்பதிப்பு :

இடம் : அதே கோவிலில் காமாட்சி அம்மன் ஆலயக் கருவறையின் கிழக்குப்புறச் சுவர்.

''ஸ்வஸ்த ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீகு
லோத்துங்க சோழ தேவற்கு யாண்டு ப
ன்னிரண்டாவது நிகரிலி சோழமண்ட
லத்துக் கங்க நாட்டுத் தகடூர் நாட்டுத்
தகடூரில் முழமாயிரமென்று பேர்கூவ
ப்பட்ட இக்கோயில் திருவேளா லீச்
சுரம் உடையார் கோயிலில் திருப்பருதிட்டையும் திருப்புது
க்குச் சாந்தும் சேவித்தேன் அதியமானுக்கு நன்றா
க வென்று அதியமான் அடியேன் பம்மார கூ
த்தனேன் புலியூர் கிழவன் தம்பிரானானசோ
ழனேன்''

மாவட்டம் :
வட்டம் : } தருமபுரி
ஊர் :

ஆட்சியாண்டு : சக வருஷம் 841
கி. பி. 919.

மொழி : } சமஸ்கிருதம்
கன்னடம்

இந்தியக் கல்வெட் : A R. E.
ஆண்டு அறிக்கை : No. 305/1901.

அரசு : நுளம்பர்
மன்னன் : அய்யப்பதேவன்

முன் பதிப்பு : Ep. Ind., Vol. X.
1909.-10-page 57-64

இடம் : தருமபுரிக் கோட்டை ஈசுவரன் கோவில் முன் மண்டபத் தூண் ஒன்றின் நான்கு புறமும் காணப்படும் மேற்படி மகேந்திர நுளம்பனது கல்வெட்டின் கீழ்ப்புறத்தில் உள்ளது. (இத்தூண் தற்போது சென்னை அருங்காட்சியகத்தில் வைக்கப் பட்டுள்ளது).

## கல்வெட்டுச் செய்தி :

It rewards that a certain Tokayya got from Ayyappadana, son of Mahendra Nulamba, the villoge of Budugiru and made a gift of it to the Jaina Temple built by Nidhiyanna.

# தருமபுரி கோட்டை கோயில்கள்

## (அ) மல்லிகார்ஜுனேஸ்வரர்–காமாட்சியம்மன் ஆலய அமைப்பு



# தருமபுரி கோட்டை கோயில்கள்

## (ஆ) பெருமாள் கோயில் ஆலய அமைப்பு

### மூர்த்திகள்

A வரமகாலட்சுமி சமேத பரவாசுதேவப் பெருமாள்
B ஆஞ்சநேயர்
C சூடிக்கொடுத்த நாச்சியார்— ஆண்டாள்

D பெரிய திருவடி கருடாழ்வார்
E ஸ்தல விருட்சம் – வில்வம்
F ஸ்தல விருட்சம் – ஆஷா
G ஸ்தல விருட்சம் – வேம்பு

### அமைப்புகள்

1. பிரதான கிழக்கு வாசல்
2. விளக்குத்தூண்
3. சிறிய பலிபீடம்
4. கொடிக்கம்பம்
5. பெரிய திருவடி சந்நிதி
6. பதினாறு கால் முன் மண்டபம்
7. துவார பாலகர்கள்
8. நான்கு கால் மகா மண்டபம்

9. அர்த்த மண்டபம்
10. கருவறை
11. சொர்க்க வாசல்
12. பக்த ஆஞ்சநேயர் சந்நிதி
13. கிணறும் மேல் தொட்டியும்
14. ஆண்டாள் சந்நிதி
25. இடிந்து போன மதிற்சுவர்
26. திருமடைப்பள்ளி

# தருமபுரி கோட்டை கோயில்கள்

## (ஆ) பெருமாள் கோயில் ஆலய அமைப்பு



# தருமபுரி கோட்டை கோயில்கள்

## (அ) மல்லிகார்ஜுனேஸ்வரர்–காமாட்சியம்மன் ஆலய அமைப்பு

### மூர்த்திகள்

A மல்லிகார்ஜுனேஸ்வரர்
B காமாட்சியம்மன்
C சோமேஸ்வரர்–சோமேஸ்வரி
D இராஜதுர்காம்பிகை
E சுப்பிரமணியர்
F மகா கணபதி
G நந்திகேஸ்வரர்
H வெள்ளை யானை–ஐராவதம்
I விநாயகர்
J வீரபத்திரர்
K நந்திகேஸ்வரர்
L சிம்மம்
M விநாயகர்
N வள்ளி–தேவானை–ஆறுமுகர்
O பைரவேஸ்வரர்
P நவக்கிரகங்கள்

### அமைப்புகள்

1. பிரதான கிழக்கு வாசல்
2. தெற்கு வாசல்
3. விளக்குத்தூண் – தீபஸ்தம்பம்
4. பலிபீடம்
5. கொடிமரம்
6. நந்தி மண்டபம்
7. பதினாறு கால் முன் மண்டபம்
8. பதினாறு கால் நிருத்தியமண்டபம்
9. நவரங்க மண்டபம் (சிவன் கோயில்)
10. தொங்குந்தூண்
11. நவரங்கச் சிற்பம்
12. அர்த்த மண்டபம்
13. கருவறை
14. யாக குண்டம்
15. நீராழி மண்டபம்
16. அம்மன் ஆலய 18 படிகள்
17. அம்மன் ஆலய வாயில்
18. நவரங்க மண்டபம்
19. நவரங்க சிற்பம்
20. அர்த்த மண்டபம்
21. கருவறை
22. தொங்குந் தூண்
23. வாகன மண்டபம
24. கிணறு
25. குருக்கள் வீடு



டாக்டர். எம். ராஜேந்திரன், M.A., Phd.,
விலங்கியல் துறை தலைவர்,
அரசுக் கலைக் கல்லூரி, தர்மபுரி-5.

# தகடூர்த்தல அமைப்பு

## அன்றைய தகடூர் : ஒரு கற்பனை !

மாமன்னன் அதியமான் புண்ணிய பூமியான தகடூரைச் சிறப்புடன் ஆண்ட காலம். தகடூர் நாட்டிற்குத் தலை நகரமாக ஐந்து பிரகாரங்களைக் கொண்டு, பெரிய மதில்களுடன் பெருங்கோட்டையாகத் திகழ்ந்தது தகடூர். தகடூரைச் சுற்றிப் பல சிற்றூர்கள் அமைந்திருந்தன. தகடூரிலிருந்து ஐந்து கல் தொலைவில், காஞ்சிமா நகர் செல்லும் அதியமான் நெடுஞ் சாலையில் அமைந்திருக்கும் அதியமான்கோட்டையில் மன்னனது அரண் மனையும், தேவியர் மாளிகைகளும், பெருந்தனக்காரர் இல்லங்களும் அமைந்திருந்தன. தகடூருக்கு மேற்கே அதகப்பாடியில் அதியனது பெருஞ்சேனைகளின் படைவீடுகள் அமைந்திருந்தன. நாட்டில் சுபிட்சமும், அமைதியும் நிலவியது. மன்னனும் மக்களும் தமிழ்வளர்த்த ஔவையார்

போன்ற தமிழ்ப்புலவர்களின் கவிதை மழையில் திளைத்தெழுந்தனர். தெய்வீகம், கலைகள், கலாசாரம் அனைத்தும் செழித்து வளர்ந்தன. திருக்கோவில்களில் இறைவனின் புகழைப்பாடும் பணிகள் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தன. நித்தியபூஜைகளும், திருவிழாக்களும் கோலா கலமாக நடந்தன.

அன்று தகடூர்க் கோட்டைக் கோவில் தேர்த்திருவிழா! மன்னன் அதியனே நேரில் வந்த வடம்பிடித்துத் திருத்தேர்தனை இழுத்துத் தேரோட்டத் திருவிழாவைத் தொடங்க இருக்கிறான். அரசனே நேரில் வந்து தேரிழுக்கப் போகிறான் என்றால் மக்களின் உற்சாகத்தையும் ஆனந்தத்தையும் கூறவா வேண்டும்!

பக்த கோடிகள் ஆண்கள், பெண்கள், பெரியவர்கள், சிறியவர்கள், அனைவரும் கோட்டையின் பிரதானக் கிழக்கு வாசலை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். விதவிதமான ஆடைகள் அணிந்து, கையில் பூஜைக்குரிய மலர்மாலை, தேங்காய், பழம், சந்தனம், சுண்ணப்பொடி, நறுமணப் பொருள்கள், கற்பூரம், நெய், பொங்கலிடத் தேவையான பொருட்கள் அடங்கிய கூடைகளை ஏந்திச் செல்கின்றனர். பல ஊர்களி லிருந்து, பலதிசைகளிலிருந்து, பலவிதமாக நடந்து, குதிரைமேல், தேரில், பல்லக்கில், என மக்கள் வந்த வண்ணம் இருக்கின்றனர்.

எங்கும் ஒரே குதூகலம் கோலாகலம், முழவு, பேரிகை, முரசு, வங்கியம், துந்துபி, யாழ், குழல் என எண்ணற்ற வாத்தியங்கள் முழங்கிக் கொண்டிருக்கின்றன. ஆங்காங்கே தேவகானம், பரிபாடல், வரிப்பாடல் வேதபாடங்கள் கேட்டுக் கொண்டே இருக்கின்றன. கோட்டையின் மையப் பகுதியில் அமைந்த கோயில்களின் மணியோசை கணீர், கணீர் என ஒலித்துப் பக்தர்களை ஆலய வழிபாட்டிற்கு விரைந்து வருமாறு அழைத்துக் கொண்டிருக்கிறது. அந்த ஓசை அனைவருடைய காதிலும் 'ஓம்' களை சுரக்கச் செய்கிறது. 'ஓம்' ஓம் நமசிவாய! நமோ நாராயணா!' 'ஓம்' மக்கள் கோயிலை நோக்கிச் செல்கின்றனர்.

நிகரிலி சோழமண்டலத்தில், பெரும்புகழுடன் திகழ்ந்த, தகடூர்த் திருத்தலம், 5 பிரகாரங்களும், சுற்றுச்சுவர்களும் கொண்டு, ஊரை உள்ளடக்கி அமைந்து கோட்டை ஊராகவிளங்கியது. கோட்டைக்கு வெளியே, வெளிமதிலை ஒட்டிப் புனித நதியான சனத்குமாரநதி ஓடிக் கொண்டிருந்தது. ஆங்காங்கே திருக்குணங்கள், தீர்த்தக் கிணறுகள் அமைந்திருந்தன. இந்த நீர்நிலைகள் அருகே இருந்த பசுமையான சோலைகளிலே பற்பல காவல் தெய்வங்களின் ஆலயங்கள் அமைந்திருந்தன. தகடூர்க் கோட்டையைச் சுற்றி, எட்டுப் பிரதான திசைகளிலும் பிரபலமான அம்மன் ஆலயங்களும், முனீஸ்வரன் ஆலயங்களும் இருந்தன.

கோட்டைக்குள், வெளிப்பிரகாரங்களில் மக்களின் குடியிருப்புகளும், நடுப்பிரகாரங்களில் அதிகாரிகளின் மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும், சில படைவீடுகளும் அமைந்திருந்தன. உட்பிரகாரங்களில் தகடூர்த் தலக்காவல் தெய்வம் கொற்றவையின் திருக்கோயிலும், மற்ற பரிவார தேவதைகளின் கோயில்களும், தகடூர்த் தல விருட்சமாகிய 'குடைவேலமரம்' இருந்த கோயிலும் சிறப்புறத் திகழ்ந்தன.

தமிழ் மக்களின் இருகண்களே போன்று சைவமும் வைணவமும் தழைந்தோங்கி இருந்த காலம், 'ஹரியும் சிவனும் ஒன்று' என்ற உயர்ந்த உணர்வு, மத ஒற்றுமை எங்கும் பரவியிருந்த இந்து மதத்தின் பொற்காலம். இத்திருக்கோயிலைச் சுந்தரர் வைப்புத் தலமாக வைத்துப் போற்றிய சிறப்பினை உணர்ந்தகாலம் அது.

மக்களின் இந்தப் புனித உணர்விற்கு வடிவங்களாகக் கோட்டையின் நடுப்பிரகாரத்தில், ஸ்ரீ வரமகாலட்சுமி ஸமேத பரவாசுதேவப் பெருமாள் திருக்கோயிலும், ஸ்ரீ கமாட்சியம்மன் ஸமேத மல்லிகார்ஜுனேஸ்வார் திருக்கோயிலும் விளங்கின.

அன்று சீரும் சிறப்புமாகத் திகழ்ந்த ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் ஆலயத்தை மையமாகக் கொண்டு ஏழு பிரகாரங்களுடன் திகழ்ந்த கோட்டை ஊரான திருவரங்கம், மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலை மையமாகக் கொண்டு ஐந்து பிரகாரங்களுடன் அமைந்த கோட்டை ஊரான மதுரை மாநகர், ஆகியவற்றை அமைப்பிலும், சிறப்பிலும், புகழிலும்

ஒத்திருந்தது தகடூர்க் கோட்டை. தென்னாட்டிலே சிறந்த அரசாட்சிக்கும், நிறைந்த தெய்வீகத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்கிய காஞ்சி மாநகர், தஞ்சை, உறையூர் போன்ற நகரங்களுக்கு ஈடாகத் திகழ்ந்தது அன்றைய தகடூர் நாட்டுத் தகடூர்.

## காலப்போக்கிலே மாற்றங்கள்

மன்னர்கள் வந்தார்கள்; ஆண்டார்கள்; போனார்கள். இடையே எத்தனையோ போர்கள், இயற்கையின் சீற்றங்கள்; காலத்தின் மாற்றங்கள் தகடூரின் புகழ் மங்கி வந்தது. கோட்டை கொத்தளங்கள் பழுதாயின, அழிந்து போயின, சுற்றுப்பிரகாரச் சுவர்கள் இடிந்து விழுந்தன. கடைசியாகத் ''திப்புசுல்தானைத் தோற்கடித்து, தருமபுரி உள்ளிட்ட சேலம் பகுதிகளை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கும்பினியினர் கைப்பற்றினர். 1792 இல் தருமபுரியில் ஏற்பட்ட கடும்பஞ்சத்தின் போது, பாதிக்கப்பட்ட மக்களின் துயரைத் துடைக்க, மக்களைப் பயன்படுத்தி, இடிபாடுகளுடன் காணப் பட்ட கோட்டையை இடித்துத், தரைமட்டமாக்கிக், கோட்டை இருந்தசுவடே இல்லாமல் செய்துவிட்டனர். தகடூர்க் கோட்டையின் ஒரு உன்னத சகாப்தம் முடிந்தது.

''பரம்பொருள் நிலையானது, யுகங்கள் தோறும் தொடர்வது, ஆனால் மனித வாழ்க்கை நிலையற்றது, அவரது வரலாறுகளும் முடியக் கூடியவை'' என்ற பேருண்மையை, இயற்கை நியதியை நன்கு உணர்ந்த அரசர்கள் நிலையற்ற தாங்கள் வாழ மண்ணினாலும், சுண்ணாம்பினாலும் செங்கல்லினாலும் மாளிகைகளையும், அரண்மனைகளையும் அமைத்துக் கொண்டனர். என்றுமே அழிவில்லாத இறைவனுக்கு என்றும் நிலைத் திருக்கக் கூடிய கருங்கல்லினால் கோயில்களைக் கட்டினார்கள், குளங் களையும் அமைத்தார்கள், சிற்பங்களையும் உருவாக்கினார்கள். அந்தப் பேரரசர்களின் உயரிய மாண்பு, பரந்த மனது, மாறாத இறையுணர்வு தான் இன்று நமக்கு அவர்கள் நிர்மாணித்த திருக்கோயில்களைத் தந்துள் ளது. அரசர்கள் மறைந்தார்கள், அவரது அரண்மனைகள் அழிந்து போயின. ஆயினும் அவர்கள் கட்டிய கோயில் இன்றும் நிலைத்து நின்றுள்ளது.

அவ்வாறே தகடூர் மாறித் தருமபுரி உருவாகியது. கோட்டை அழிந்தது, மாளிகைகள், அரண்மனைகள் தரைமட்டமாயின, ஆயினும் கோட்டைக் கோயில்களும் மற்றும் பல கோயில்களும் இன்றும் நிலைத்து நின்று, மக்களுக்கு அருள் பாலிக்கின்றன.

## தல அமைப்பு

உயர்ந்த மதிசுல்களுடன் கோட்டை போல் அமைந்துள்ள மல்லிகார்ஜுனர் காமாட்சியம்மன் கோயிலுக்குத் தற்போது இரண்டு நுழைவாயில்கள் உள்ளன. கிழக்குப் பிரதான வாயில் ஒரு பெரிய மண்டபத்துள் அமைந்துள்ளது. இதன் மேல் ராஜகோபுரம் இல்லை; மொட்டையாக உள்ளது. தெற்கு மதிலில் அமைந்துள்ள தென்வாசல் சமீப காலத்தில் கட்டப்பட்டதாகும். இதன் மேல் ஒரு முகப்பு மண்டபம், அதில் சிவபிரான், பார்வதி, கணபதி ஆகியோர் அமர்ந்திருக்க, அருகே ரிஷபம் படுத்துள்ள சுதை வடிவங்கள் அமைந்துள்ளன.

இப்புராதனத் திருக்கோயிலின் முன்பகுதி மக்களால் ஆக்கிரமிக்கப்பட்டு, பிரதான வாசல் எப்போதும் மூடிக்கிடக்க வேண்டிய துரதிருஷ்ட நிலை ஏற்பட்டுள்ளது. இப்போது தெற்கு வாசல் வழியாகத்தான் மக்கள் ஆலயத்திற்குள் வருகின்றனர். கோயிலைச்சுற்றி அகன்ற தேரோடும் வீதிகளை அமைத்து மகிழ்ந்தனர் அன்றைய மன்னர்களும் மக்களும், இன்றுள்ள மக்கள் அங்கே தங்களுக்கு வீடுகளைக்கட்டி மகிழ்ச்சியடைகின்றனர்! இதைக் காணும் போது நம்முன்னோர்கள் எவ்வளவு முன்ஜாக்கிரதையுடன் உயர்ந்த சுற்றுச்சுவர்களை எழுப்பிக் கோயில்களைக் காப்பாற்றி இருக்கிறார்கள் என்பதை எண்ணி நன்றிகூற வேண்டியுள்ளது.

பிரதான வாயிலைத் தாண்டியவுடன் எதிரே ஒரு மேடையின் மேல் ஒரே கல்லாலான உயரமான தீபஸ்தம்பம் அமைக்கப்பட்டுள்ளது. மேடையின் இருபக்கமும் சற்றுச் சிதிலமடைந்த சூரியர் சந்திரர் சிலைகள் (பிற்காலத்தில்) நடப்பட்டுள்ளன. எதிரே, சுற்றுப்பிரகாரத்திற்குள்ளே, மூன்று பிரதானகோயில்களும் மிகப்பல துணைக்கோயில்களும் அமைந்துள்ளன. இவை யாவும் வெவ்வேறு அமைப்பையுடையவை. வெவ்வேறு

காலகட்டத்தில் பல மன்னர்களால் கட்டப்பட்டவை. காலப்போக்கில் பராமரிப்பு இன்மையால் இவற்றின் தோற்றப் பொலிவு குன்றி, ஆங்காங்கே பழுதடைந்த நிலையில் உள்ளன. இருப்பினும் இக்கோயிலின் தெய்வீகத்தன்மையோ, கலாச்சாரப் பெருமையோ, கொஞ்சமும் குறைய வில்லை. இத்திருத்தலத்தின் இறையவரும் நாடிவரும் பக்தர்களின் குறைகளைத் தீர்த்து அருள்பாலித்து வருவதில் எந்தக் குறையுமில்லை.

# பிரதானக் கோயில்கள்

பண்டைய வரலாற்றுக் குறிப்புகளின் படி தகடூர்க்கோட்டைக் கோயில் ஆலயங்களாவன :

1. சாணாயிரம் முழமாயிரம் உடையார் கோயில்.
2. திருவேளாலீஸ்வரம் உடையார் கோயில்.
3. ஓராயீஸ்வரம் உடையார் கோயில்.

இம்மூன்று சிவாலயங்களும் வரிசையாக அமைந்திருந்தன. முற்காலத்தில் தேவிக்கென்று தனியாக ஆலயங்கள் எழுப்பப்படவில்லை. (அல்லது தேவியைக் கொற்றவை, துர்கை, நிசும்ப சுதனி, பிடாரி எனப் பலவகையான சிறு தெய்வங்களாகவே வணங்கி வந்தனர்) பிற்காலச் சோழர்கள் காலத்தில் தான் அம்பிகைக்கென்று தனியே ஆலயங்கள் அமைக்கப்பட்டன, என்று வரலாறுகள் கூறுகின்றன. அதன்படி, மேற்கூறிய தகடூர்க் கோட்டை ஆதிஈசுவரன் ஆலயங்கள் பற்பல மாற்றங்களடைந்து இன்று நாம் வழிபடும் கீழ்க்காணும் மூன்று ஆலயங்களாக முறையே மருவி இருக்கும் என்பது தெளிவு.

1. ஸ்ரீ மல்லிகார்ஜுனேஸ்வரர் (சிவன்) கோயில்.
2. ஸ்ரீ காமாட்சியம்மன் (அம்மன்) கோயில்.
3. ஸ்ரீ சோமேஸ்வரர் கோயில்.

இனி இத்திருக்கோயில்கள் ஒவ்வொன்றின் சிறப்புகளைக் காணலாம்.

(மேலே) மல்லிகார்ஜினேஸ்வரர் ஆலயம்





ஒளிமயமான மூலவர்
நந்தியம் பெருமான்
நவரங்க மண்டபம்
தொங்கும் தூண்

(கீழே) காமாட்சியம்மன் ஆலயம்

கம்பீரமான நுழைவாசலும்
பதினெட்டுப் படிகளும்






1. வீரபத்திரர்

2. ஆறுமுகனும் மயிலும்

3: வினாயகர்

4. பைரவர்

## மல்லிகஜுனேஸ்வரர் திருக்கோயில்

தகடூர்க் கோட்டைக் கோயிலுக்குள்ளே அமைந்துள்ள மூன்று ஆலயங்களுள், கிழக்கு பிரதான வாசலுக்கு நேர் எதிரே தெய்வீக ஒளி மிளிர அமைந்திருப்பது ஸ்ரீ மல்லிகார்ஜுனேஸ்வரர் திருக்கோயில் தான். இதற்கு வடக்கே, சற்று உட்புறம் கம்பீரமாக நிற்கிறது ஸ்ரீ காமாட்சியம்மன் திருக் கோயில். அதற்கும் வடக்கே, இன்னமும் உட்புறத்தில் அமைதியாக நிற்கிறது ஸ்ரீ சோமேஸ்வரரின் கோயில்.

நெடிதுயர்ந்த தீபஸ்தம்பத்தைத் தாண்டி, சிறிய பலிபீடம். சற்றுப் பழுதடைந்த பழைய துவஜஸ்தம்பம். (கொடிமரம்) அருகே சிறிய நந்தி மண்டபம், சிறுபீடம, நான்கு தூண்கள் மற்றும் சிறிய கோபுரம். இந்தத் தூண்களில் கலையம்சம் நிறைந்த சிறு சிற்பங்களைக் காண்கிறோம். அடுத்து நந்தி தேவன்.

## மகா மண்டபம்

நான்கு வரிசையில் 16 நூண்களைக் கொண்ட விசாலமான மகா மண்டபத்திற்குள்ளே சென்று ஒவ்வொரு தூணிலும் கவினுறச் செதுக்கப் பட்டிருக்கும் எளிய, அழகிய சிற்பங்களைக் கண்டு மகிழலாம். இவை சைவ, வைணவத் தெய்வங்கள், புராணக்கதைகளைக் கூறும் சிற்பங்கள், அழகான கோலங்கள் இப்படிக் கண்ணையும் கருத்தையும் கவரும் சிற்பங்கள்.

வடப்புறத் தூணிலே தெய்வமணம் கமழும் அழகிய 'சிவபக்த ஆஞ்சனேயர்' கைகூப்பிய வண்ணம் அருள்பாலிக்கிறார். அருகே மற்றொரு தூணில், தமது வருகையால் இக்கோயிலை மேலும் புனித மாக்கிய திருஞான சம்பந்தர் திருக்கையிலே பொற்றாளம் தாங்கி இறைவன் மீது பாடல்பாடித் துதிக்கிறார். அர்ஜுனன் பாசுபதாஸ்த்திரம் வேண்டித் தவமிருந்த சிற்பங்கள் என எத்தனையோ சிற்பங்கள்.

மண்டபத்தின் தென்கோடியிலே மிக அழகான, சிறந்த வேலைப் பாடுடைய, பெரிய வீரபத்திரர் சிலை. அருகே உள்ள வாசல் வழியாகச் சென்றால் நிருத்திய மண்டபம்.

பதினாறு தூண்களுடைய விசாலமான இம்மண்டபத்தின் தென்புறச் சுவரோடு சேர்ந்தபடி ஒரு அழகான வெள்ளையானையின் முன்புறத் தோற்றச்சிலை, அதைச் சுற்றி அழகிய வேலைப்பாடுடைய பிரபை, சிறு மண்டபம் ஆகியவை அமைந்துள்ளன. இதுவே பண்டைக் காலத்தில் பிரதான கோயிலுக்கு வெளியே அமைந்த ஐராவதி மண்டபம். கோயிலின் காவல் தெய்வம் (இதைப் போன்ற ஐராவத மண்டபம் இன்றும் அதியமான் கோட்டைக் கோயிலின் வெளியே காணப்படுகிறது) பின்னர் பிரதான கோயில் விரிவுப்படுத்தப்பட்டு நிருத்திய மண்டபம் கட்டப்பட்டபோது இந்த ஐராவதி மண்டபமும் கோயிலுக்குள் இணைந்து விட்டது. மக்கள் இச்சிலையை யானை வடிவ வினாயகராக வழிபடுகின்றனர். மண்டபத்தில் வடபுறம் அமைந்த மேடையில் விலை மதிப்பிட முடியாத, மிகச்சிறந்த வேலைப்பாடுகளுடன் கூடிய பஞ்சலோக உற்சவ மூர்த்திகள் கோயில் கொண்டிருக்கிறார்கள்.

## ஆதிகோவில்

மகா மண்டபமும், நிருத்திய மண்டபமும் பிற்காலச் சோழர்களால் கட்டப்பட்டவை. பின்னர் சேர்க்கப்பட்டவை. மல்லிகார்ஜுனர் கோயில் திருவுண்ணாழி (கர்பகிரகம்), அர்த்த மண்டபம், நவரங்க மண்டபம் ஆகியவை மட்டுமே நுளம்ப மன்னர்களால் கட்டப்பட்ட ஆதிகோயிலாகும். அந்தந்த அரசர்கள் காலத்திய கலைத்திறன் அவர்கள் கட்டிய மண்டபங்களிலே நிலைத்து நின்று அவரது கீர்த்தியைக் கூறுகின்றன. ஒருகாலத்தில் மரத்தாலும் சுதையாலும் இருந்தகோயில் கருங்கல்லால் ஆயின.

## நவரங்க மண்டபம்

நவரங்க மண்டப நுழை வாயில் தொடங்கி கருவறை வரை தெய்வீ கமும் கலைத்திறனும் கலாச்சாரப் பெருமையும் ஒன்றையொன்று மிஞ்சும் வண்ணம் ஒரு புதிய உலகையே படைத்துள்ளனர், நுளம்பப்பல்லவ மன்னர்களும் மஹாசிற்பிகளும். இங்குள்ள தூண்களும், விதானங்களும்

மூர்த்தங்களும் அனைத்துமே மிகச் சிறந்த, அபூர்வ சிற்ப வேலைப்பாடு களுடன் மிளிர்கின்றன. ஒரு இம்மி இடத்தைக்கூட வெற்றிடமாக விடவில்லை அந்த தேவ சிற்பிகள். இப்படைப்புகள் பல்லவர்களின் மகத்தான கலையழகையும், ஹொய்சளர்களின் நுணுக்கமான வேலைப் பாட்டையும், சளுக்கர்களின் கலைத்திறனையும் ஒருங்கே பெற்று ஒரு புதிய பாணியையே உருவாக்கி உள்ளன. இவை ஒவ்வொரு மனிதனும் கண்டு, அனுபவித்துப் பெருமிதமடைய வேண்டிய கலைக்கோயில்கள், கலைப் பொக்கிஷங்கள்.

நவரங்கமண்டப நுழைவாசல் மேல் அமைந்துள்ள 'தளக்கல்' மங்கலம் சேர்க்கும் அழகிய கஜலட்சுமி, இருபக்கமும் யானைகள் பூரணகலசம், முழவு சிங்கங்கள் சங்கநிதி பதுமநிதி அஷ்டமங்கலங்கள் அமைந்த புனிதக்கல்லாகும். பொதுவாக இவ்வமைப்புகளில் இரண்டு யானைகளும் ஒரே சமயத்தில் தங்கள் து திகையை உயர்த்தித் தேவியின் மேல் நீர் சொரிவதைப் பொல செதுக்கப்பட்டிருக்கும். ஆனால் இங்கோ ஒரு யானை நீர் சொரிய, மற்றொரு யானை துதிக்கையைக் கீழே விட்டுத் தனது பூஜைக்காகக்காத்து நிற்கிறது! இந்த யானைக்குத் தேவி மேல் நீர் சொரிந்து பூசை செய்யும் பேறு எப்போது, எங்கே கிட்டும் என நாம் ஆச்சரியப் படுகிறோம். நாம் கருவறை வாசலை நெருங்கும் போது அதற்கான விடை கிடைத்து விடுகிறது! நவரங்க வாரல் தளக்கல் அமைபைப் ஒத்த தளக்கல் கருவறைவாசல் மேல் உள்ளது. இதிலே அந்த யானை தேவி மீது நீர்சொரிய, முதலில் நீர் சொரிந்த யானை இங்கே துதிக்கையைத் கீழே தொங்கவிட்டு அடுத்த பூஜைக்காகக் காத்திருக்கிறது! என்னே! இதை அமைத்தச் சிற்பியின் கற்பனைத் திறன்! உயிரற்ற கல்லிலே உயிருள்ள, செயலாற்றுகின்ற எழிலோவியங்களைப் படைத்து விட்டானே!

நவரங்க மண்டபம் ஒரு சதுர மண்டபமாகும். தளமும் விதானமும் ஒன்பது சம சதுரங்களாக, அரங்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. நடுவாங்க நான்கு மூலைகளில் அமைக்கப்பட்டுள்ள நான்கு பெரிய, நுண்ணிய வேலைப்பாடுடைய தூண்கள் இம்மண்டபத்தைத் தாங்கி நிற்கின்றன.

## நவரங்க மண்டப விதானத் தேவர்கள்

நவரங்க மண்டப விதானத்தில் நடுவரங்கில் காணப்படும் அற்புதச் சிற்பக் கருவூலத்தை, நமது தலையை உயர்த்திக் காண்போம். விதான நடுவரங்கம் ஒன்பது சிறு சதுரங்களாக, கலையலங்காரமிக்க 'கட்டங்கள்' ஆகப்பிரிந்துள்ளன. ஒவ்வொரு சதுரத்திலும் ஒரு கலையழகு மிக்க தேவ சிற்பம் அமைக்கப்பட்டுள்ளன.

நடுச்சதுரம் இறைவனின் உறைவிடம் இதைச் சுற்றி அமைந்துள்ள எட்டு சுற்றுச் சதுரங்களும் அஷ்ட திக்பாலகர்களின் (எண்திசைத் தேவர்கள்) வீடுகளாகும். நடுச்சதுரத்தில் அஷ்டபுஜநாயகனாக சிவ பெருமான் (நடராஜர்) எட்டுக்கைகளுடன் ஆனந்த தாண்டவமாடும் அற்புதக்காட்சி, எட்டுச் சுற்றுச் சதுரங்களில் அந்தந்தத் திசைக்குரிய தேவர்கள், உரிய ஆயுதங்களை ஏந்தித் தத்தம் வாகனங்களின் மீது அமர்ந்துள்ள அரிய காட்சி.

| | திசைகள் | தேவர்கள் | வாகனங்கள் |
|---|---|---|---|
| 1. | கிழக்கு | இந்திரன் | ஐராவதம்(வெள்ளை யானை) |
| 2. | தென்கிழக்கு | அக்கினி | மேஷம் (வெள்ளாடு) |
| 3. | தெற்கு | யமதருமன் | மகிஷம் (எருமை) |
| 4. | தென்மேற்கு | நிருதி | நான் (மனிதன்) |
| 5. | மேற்கு | வருணன் | மகரமீன் |
| 6. | வடமேற்கு | வாயு | மான் |
| 7. | வடக்கு | குபேரன் | செம்மறியாடு |
| 8. | வடகிழக்கு | ஈசானியன் | ரிஷபம் |

அஷ்டதிக்பாலர்களுள் இந்திரன் மட்டும் துணைவியான இந்திராணியுடன் ஐராவதத்தின் மீது கம்பிரமாக அமர்ந்திருக்க, மற்றவர்கள் தனித்தே உள்ளனர். தேவர்களுக்கெல்லாம் தலைவனான தேவேந்திரனின் தனிச் சிறப்பை இது காட்டுகிறது. எட்டுத்திசைகளுக்கும் தலைவர்களாகத் தேவர்கள் இருந்தாலும், அவர்களும் அத்திசைகளும் அனைத்தும் இறைவனின் அங்கங்களே என்பதையே நடுச்சதுர பரமேசனின் எட்டுக் கைகள் உணர்த்துகின்றன. அனைத்தும் நானே என்று கீதாநாயகன் கூறியதையே பரமேசனின் தாண்டவம் நமக்குக் காட்டுகிறது.

தத்ரூபமாக இதை ஒத்த அழகிய, தத்துவ முக்கியத்துவம் வாய்ந்த 'நவரங்க விதான தேவர்களின்' சிற்பம் காமாட்சியம்மன் கோவிலிலும் அமைந்துள்ளது. ஆனால் அங்கே, நடுபாகத்தில் சிவபிரானுடன் பார்வதி தேவியும் சேர்ந்து ஊர்த்தவ தாண்டவம் அமைந்துள்ளது.

நவரங்க மண்டப தளத்தில், நடுவரங்கத்தில் ஒரு சதுரமான தாழ்வான மேடைஅமைந்துள்ளது. அதன் நான்கு மூலைகளிலும் கன சதுர பீடங்கள். ஒவ்வொரு பீடத்தின் மேலும் சுமார் ஏழடி உயரக் கனத்த தூண், இது சுமார் இரண்டரை டன் எடை இருக்கும் எனக் கணக்கிடப் பட்டுள்ளது. தூணிலிருந்து கல்லைக் குடைந்து கூராக்கி, அதில் வட்டக்கடிகை போன்ற போதிகையைக் கோர்த்து மேலே நான்கு முக வளைவுகளைப் பொருத்தி, சுற்றிலும் பாறைகளைப் பரப்பித் தாழ்வான கூரை அமைத்து மண்டபம் கட்டப்பட்டிருக்கிறது.

இந்த நான்கு தூண்களும் மண்டபத்தைத் தாங்கி நின்றாலும், ஒரு தூண் மட்டும் கீழே பீடத்தைத் தொடாமல், மயிரிழை அளவு இடைவெளிவிட்டு, அந்தரத்தில் நிற்கிறது. இதுவே அற்புதத் தொங்கும் தூண்! அந்தச் சிறு இடை வெளியில் ஒரு நூலையோ, காகிதத்தையோ, துணியையோ ஒரு பக்கம் விட்டு மறுபக்கம் எடுக்கலாம். ஆனால் தூணோ ஆடவும் இல்லை. அசையவும் இல்லை, மண்டபமும் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நிலையாக நிற்கிறது.

இதைப்போல் 'தொங்கும் தூண்' காமாட்சியம்மன் ஆலய நவரங்க மண்டபத்திலும் உண்டு. இதிலும் அந்த மஹாசிற்பிகள் ஒரு சிறப்பை ஏற்படுத்தியுள்ளனர். ஈசுவரன் கோயிலில் உள்ளத் தொங்கும் தூ ண் மூலவருக்கு வலது வெளித்தூணாகவும், அம்பிகையின் ஆலயத்தில் இடது வெளித்தூணாகவும் அமைத்துள்ளனர்.

நவரங்க மண்டபத்தூண்கள் ஒவ்வொன்றும் ஒரு சிற்பக் கலைக்கூடமாக இருப்பதைக் கண்டு வியப்பும் பெருமையும் அடைகிறோம். தூணின் அடிப்பகுதி ஒரு கன சதுரம், நாற்புறமும் அழகிற்சிறந்த சிற்பங்கள். அதற்கு மேல் எண்பட்டை அமைப்புடன் நீண்ட உருளைப்பகுதி. ஒவ்வொரு பட்டையிலும் வரிசையாகப் பலப்பல சதுரக்கட்டங்கள். ஒவ்வொரு கட்டத் திலும் நுண்ணிய வேலைப்பாடு மிக்க எழில் உருவங்கள். இச்சிற்பங்களில் பல புராணக்கதைகளைக் கூறுபவை, பல சைவ வைணவ தெய்வங்களின் அழகிய தோற்றங்கள். பல நாட்டிய சாஸ்த்திரத்தைப் போதிக்கும் எழில் வடிவங்கள். ஆண்கள் பற்பல வாத்தியங்களை முழக்க தேவமாதர்கள் களிநடனம் புரியும் காட்சிகள். நாட்டிய முத்திரைகள் எவ்வளவு உண்டோ அவ்வளவையும் இச்சிற்பங்களிலே காணலாம்! சற்று மிருதுவான மாவுக் கல்லினால் ஆன தூண்களாகையால் மிக நுணுக்கமான வேலைப்பாடுகளுடன் மிகச்சிறிய சிற்பங்களையும் அமைக்க முடிந்திருக்கிறது. இந்தக் கலைப் பொக்கிஷங்கள், கர்நாடகத்தில் ஹளேபிடு, பேலூர், சோமநாதபுரம் போன்ற தலங்களில் காணப்படும் ஹொய்சளர் சிற்பக்கலையை நினைவூட்டுகின்றன.

## நந்தி, மகா கணபதி, ஆறுமுகன்:

நவரங்க மண்டபத்தில், பின் இரண்டு தூண்களுக்கு முன்னே, மூல வரைப் பார்த்தவாறு, அளங்காரங்களுடன் கூடிய சிறிய நந்தியம் பெருமாள் அமர்ந்திருக்கிறார். அதற்கு வலப்பக்கம், கிழக்கு நோக்கியவாறு, மகாகணபதி, ஆறுமுக வேள் மூர்த்தங்கள். அழகுத் தெய்வமாக ஆறுமுகன் மயிலின் மீது (அய்யப்பசாமியைப் போல) குந்தலமிட்டு அமர்ந்திருக்கிறார். மயிலின் அமைப்பிலும் சிறப்பைக் காண்கிறோம். மயிலின் அலகிலே ஒரு நாகம் தொங்கிக் கொண்டிருக்க, மற்றொரு நாகம் படமெடுத்துத் தன் தலைமீது முருகனின் வலப்பாதத்தைத் தாங்கி நிற்கிறது.

## துவார பாலகர்கள்

சிவன் கோயில் மகாமண்டப நுழைவாயிலிலோ, நவரங்க மண்டப வாயிலிலோ, அர்த்த மண்டபத்திலோ துவாரபாலகர்கள் சிலைகளையே காணோம். இவை நிச்சயம் இருந்திருக்க வேண்டும். என்னவாயிற்று என்பது புதிராகவே உள்ளது. ஹொய்சன பாணிக் கோயில்களில் மிக அழகிய வேலைபாடுகளுடைய துவாரபாலகர்கள் இருப்பது பிரசித்தம்.

இங்கு நவரங்க மண்டப வாயிலுக்கெதிரே நிருத்திய மண்டபத்தில் உள்ள இரண்டு தூண்களின் அடிப்பகுதியில் செதுக்கப்பட்டுள்ள சிறிய துவாரபாலகர்கள் சிற்பங்கள் மட்டுமே உள்ளன இவர்களை 'டிண்டி தேவர், மூண்டி தேவர்' என்றழைக்கின்றனர்.

1. திரு ச. கிருஷ்ணமூர்த்தி தமது 'தருமபுரி வரலாறும் பிரகலாத சரித்திரமும்' எனும் நூலில் இத்தூண் சிற்பங்கள் ஒவ்வொன்றையும் அழகாகத் தெளிவாக விவரித்துள்ளார்.

## மல்லிகார்ஜுனேஸ்வரர்

ஈசுவரன் கோயிலின் சிறப்புகளையும், நவரங்க மண்டபப் பேரழகையும் கண்டு தேனுண்ட வண்டைப் போல மயங்கி இருக்கும் நமக்குத் திடீரென்று ஒரு பேருண்மை புலப்படுகிறது! நாம் கண்ட அனைத்தும் உண்டானது அந்தப் பரம்பொருளை இந்தக் கோயிலில் எழுந்தருளச் செய்து ஆராதிப்பதற்கே அன்றோ! தலையை உயர்த்தி எதிரே நோக்குகிறோம். கருவறையிலே, தீபங்களின் ஜோதியிலே ஒளிமயமாக, சச்சிதானந்த வடிவமாகச் சிவலிங்க ரூபத்திலே அருள்பாலிக்கும் மல்லிகார்ஜுனரைக் கண்ணாரக் கண்டு இருகைகளையும் கூப்பி 'ஓம் நமசிவாய' எனும் பஞ்சாட்சர மந்திரத்தை வாயார ஒலித்து, மனமாரத் துதிக்கிறோம்.

சுமார் நான்கு அடி உயரமுள்ள பெரிய லிங்கமூர்த்தம். கோயில் முழுவதும் பலப்பல சிறப்பான அம்சங்களை அமைத்த அந்தத் தேவ சிற்பி இவரது அமைப்பிலும் சிறப்புகளைச் செய்திருக்கிறான். ஆவுடையார் பொதுவாக வட்டவடிவில், உடுக்கையைப் போல அமைந்திருக்கும். இங்கே ஆவுடையார் பற்பலபட்டைகளாகவும், சதுரவடிவிலும் அமைந்துள்ளது.

உள்ள 'லிங்கபாணம்' மெருகோ, இரும்போ, பளிங்கோ என வியக்கும் வண்ணம், பளபளப்பாக, வழவழப்பாக, கண்ணாடி போலப் பிரதிபலிப்பைத் தரும் வகையில் பளிங்குக் கல்லால் ஆன சிறப்பான மூர்த்தமாகும்.

ஆதியில் 'சாணாயிரம் முழமாயிரம் உடையார்', என்ற நாமம் கொண்ட இவர் இன்று வேலாலீஸ்வரன், 'மல்லிகார்ஜுனர்' என்ற பெயர்களுடன் அழைக்கப்படுகிறார்.

## நவரங்க அமைப்பிலான தகடூர்க் கோட்டை

மல்லிகார்ஜுனர், காமாட்சியம்மன் கோயில்களில் உள்ள நவரங்க (ஒன்பது அரங்க) மண்டபங்களும், அந்த அமைப்பையும் தத்துவத்தையும் விளக்கும் விதான நவரங்கத் தேவர்களின் சிற்பமும் இக்கோயிலுக்கும் தலத்திற்கும் உள்ள தனிச் சிறப்பாகும்.

நவரங்க மண்டபத்தைப் போலவே திருக்கோயிலும் ஊரும், தகடூர்க் கோட்டையும் நுல்களின் விதிப்படியே அமைக்கப்பட்டிருப்பதும் தனிச்சிறப்பே யாகும். நடு அரங்கைக் குறிக்கும் உட்பிரகாரத்தில், இறைவன் பாகத்தில், இவ்வூரின் பிரதானக் கோயில்களான கோட்டைக்கோயில்கள் என வழங்கும் காமாட்சியுடன் மல்லிகார்ஜுனேஸ்வரர் ஆலயமும், வரமகாலட்சுமியுடன் பரவாசுதேவர் ஆலயமும் அமைந்துள்ளன. சுற்று அரங்கங்களைக் குறிக்கும் எட்டுத் திக்கிலும் உரிய காவல் தெய்வங்களின் ஆலயங்கள் ஊரில் மற்றப் பிரகாரங்களிலும் வெளியிலும் அமைந்திருந்தன. அவற்றுள் காலத்தால் அழிந்து மறைந்தது போக எஞ்சியுள்ளவை வருமாறு :

தகடூர்க்கோட்டையின் நவரங்க அமைப்பும் காவல் தெய்வங்களும் :

| | திசை | தேவ பாகம் | அமைந்த எல்லைக் கோயில்கள் (காவல் தெய்வங்கள்) |
|---|---|---|---|
| 1. | கிழக்கு | இந்திர பாகம் | எந்தக்கோயிலையும் காணமுடியவில்லை. |
| 2. | தென்கிழக்கு | அக்கினி பாகம் | விருந்தாடியம்மன் (மாரியம்மன்) ஆலயம்; ரேணுகாம்பாள் (பிடாரியம்மன்) ஆலயம் (திருப்பத்தூர் சாலையில் உள்ளவை) சிறிய முனியப்பன் ஆலயம் (இரண்டாவது பிரகாரத்தில் உள்ளது). |
| 3. | தெற்கு | யமதரும பாகம் | கோட்டை மாரியம்மன் கோயில் (கிருஷ்ணகிரி சாலைக்குச் செல்லும் சந்தில் உள்ளது). மூன்றாவது பிரகாரத்தில், கல்மேடையில் உள்ள தலவிருட்சமாகிய குடைவேல மரத்தின் அருகே எல்லையம்மன் கோயில் இருந்திருக்க வேண்டும். |
| 4. | தென்மேற்கு | நிருதி பாகம் | மூன்றாவது பிரகாரத்தில் கொற்றவை கோயில் இருந்ததாகக் கூறப்படுகிறது. அவ்வாலய அம்மன் தான் பிற்காலத்தில் தோண்டிஎடுக்கப்பட்டு காமாட்சியம்மன் கோயில் நவரங்க மண்டபத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள இராஜதுர்க்கை யாகும். |
| 5. | மேற்கு | வருண பாகம் | எந்தக் கோவிலையும் காண முடிய வில்லை. |
| 6. | வடமேற்கு | வாயு பாகம் | செல்லியம்மன் ஆலயம் (கிருஷ்ணகிரி சாலையில் ராமாக்காள் ஏரிக்கரையில் உள்ளது). |
| 7. | வடக்கு | குபேர பாகம் | சிறிய முனீஸ்வரன் கோயில் (இரண்டாவது பிரகாரத்தில் உள்ளது). |
| 8. | வடகிழக்கு | ஈசானிய பாகம் | பெரிய முனீஸ்வரன் ஆலயம், மாரியம்மன் ஆலயம் (திருப்பத்தூர் சாலையிலிருந்து சற்று உள்ளே அமைந்துள்ளவை). |
| 9. | உட்பிரகாரம் | இறைவன் பாகம் | கோட்டைக் கோவில்கள் என வழங்கும் சிவன் கோயிலும், பெருமாள் கோவிலும். |

## காமாட்சியம்மன் திருக்கோயில்

கோட்டைக் கோயில் உட்பிரகாரத்திற்குள் வரிசையாக அமைந்துள்ள மூன்று பிரதானக்கோயில்களும் அன்னை காமாட்சியின் திருக்கோயில் மல்லிகார்ஜுனர் கோவிலுக்கும் சோமேஸ்வரர் கோவிலுக்கும் இடையே, நடுநாயகமாக அமைந்துள்ளது. கோயில் பிரகாரத்தைப் பிரதட்சனம் செய்து அன்னையின் ஆலயத்தின் முன் வந்து கண்டால் எதிரே மேருவைப் போன்ற உயரமான மேடையின் மேல் கம்பீரமாக நிற்கிறது ஆலயம்.

## நீராழி மண்டபம்

அம்மன் ஆலயத்தின் முன்னே ஒரு அழகான நீராழி மண்டபம். நான்கு தூண்கள் கோபுரம், தொட்டிபோன்ற அமைப்பில் தளம், பெரிய திருக்குளங்கள் நடுவில்தான் நீராழி மண்டபங்கள் இருக்கும். ஆனால் இங்கே நீரும் இல்லை, குளமும் இல்லை, படிகளும் இல்லை. நீராழி மண்டபம் மட்டுமே உள்ளது.

## கோயில் அமைப்பு

அம்மன் ஆலய அமைப்பே வித்தியாசமானது. புதுமையானது, தனிப் பாணியில் அமைந்தது. தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயத்தைப் போல இங்கு எல்லாமே பெரியது, உயர்ந்தது, கம்பீரமானது! கோயில் மேடை உயரம், கோயில் உயரம், கோயில் விமானம் உயர்ந்தது! கோயில் மண்டபங்கள் பெரியவை, தூண்கள் பெரியவை, சிற்பங்கள் பெரிதானவை! கோயில் படிகள், முகப்பு, தோற்றம் அனைத்துமே கம்பீரமானவை, அழகானவை!

ஆலயம் நீள் சதுர வடிவிலே அமைந்துள்ளது. உயரமான அதிஷ்டானம், சித்திரவேலைப்பாடுகளுடன் கூடிய பல வரிசைகளை - பத்மம், குமுதம், கண்டம், கபோதம், பட்டிகை, உபானம் போன்ற அடுக்குகளைக் கொண்டது. சிம்ம வடிவச் சிற்பங்களும் அழகிய கோலங்களும் அதிஷ்டானச் சுற்றில் அமைந்துள்ளன. தாமரை மலரைப் போல 48 இதழ்கள் (மூலைகள்), 44 தளங்கள், மற்றும் 43 கோணங்கள் சீராக அமைந்துள்ளன. அதிஷ

உயரத்தில் அமைந்துள்ள கோயில் வாசலை அடையச் சாய்வாக சாரம் போல் கட்டப்பட்ட 18 படிகள் உள்ளன. இவை அழகர் கோயில் பதினெட்டாம் படியையும் சபரிமலைக்கோயிலின் புனித பதினெட்டாம் படியையும் ஒத்துள்ளன. அன்னையின் பாதார விந்தங்களை அடைய நாம் விடவேண்டிய பதினெட்டுப் பற்றுகளை

பசியும் நீர்வேட்டலும் பயமும் வெகுளியும்
உவகையும் வேண்டலும் நினைப்பும் உறக்கமும்
நரையும் நோய்ப்படுதலும் மரணமும் பிறப்பும்
மதமும் இன்பமும் அதிசயமும் வியர்த்தலும்
தேகமும் கையறவும் ஆக மென்ப
மாயாயாக்கைக்குப் பதினென் குற்றம்
இக்குற்ற நீக்கியோர் வச்சிர யாக்கையோர்

என்று சேந்தன்திவாகாரம் கூறுகிறது. இப்படிக்கட்டுகள் பாபங்களை குறிக்கும் வகையில் அமைந்துள்ளன. இப்படிகள் சமீபத்தில் கட்டப்பட்ட வையாயினும், ஆதியிலும் இதுபோன்ற அமைப்பு இருந்திருக்க வேண்டும். இக்கோயிலைச் சார்ந்த திருக்கோயில் குளமூன்றனுள் ஏதேனும் ஒன்றில் மூழ்கி பதினெட்டாம்படியில் வந்து ஒருவர் சத்தியம் செய்தால் அதனை மக்கள் ஏற்றனர். இன்றும் அந்த நம்பிக்கையும் பழக்கமும் இருக்கிறது. எவரும் பதினெட்டாம் படியில் நின்று பொய்கூற இன்றும் தயாராக இல்லை. இப்பதினெட்டாம்படி பற்றிய சிந்தனை நம்மை அழகர் கோயிலுக்கு இட்டுச் செல்கிறது.

வாசல் முகப்பு மண்டபத்தில் மீனாட்சி திருக்கல்யாணக் காட்சியை அழகுறக் காட்டும் சுதை வடிவங்கள் உள்ளன.

## சைவக்கோயிலிலே இராமயணச் சிற்பங்கள் :

சைவத்தையும் வைணவத்தையும் தமது இருகண்ணே போலப் போற்றி வளர்த்த பண்டைய மன்னர்களும் மூதாதையர்களும், பெரும்பாலான புனிதத் தலங்களில் சிவன் கோயிலையும் பெருமாள் கோயிலையும் அருகருகே அமைத்து மத ஒற்றுமையைப் பேணிக்காத்தனர். இதற்குத் தகடூர்

கோட்டைக் கோயில்களான சிவன் கோயிலும் பெருமாள் கோயிலும் கோட்டையின் மையப்பகுதியில் பக்கம்பக்கம் அமைந்திருப்பதே சான்றாகும்.

அதோடு அப்பெருமக்கள் வைணவ ஆலயங்களில் சிவன் திருவிளை யாடலை விளக்கும் சிற்பங்களையும், சைவ ஆலயங்களில் இராமாயண, மகாபாரதக் காட்சிகளைக் காட்டும் சிற்பங்களையும் அமைத்து, ஹரியும் சிவனும் ஒன்று என்ற உயர்ந்த தத்துவத்தைச் செயல்படுத்தினர். கோட்டைக் கோயில்கள் இரண்டிலுமே இத்தகு சிற்பங்கள் நிறைய உள்ளன.

காமாட்சியம்மன் ஆலய அதிஷ்டானத்தின் அடிவரிசையில், (இன்று பூமியின் மட்டத்தில்) கோயிலைச்சுற்றியும் பல நீள்சதுரக் கட்டங்கள் (பேனல்கள்) உள்ளன. இவை சுமார் ஓரடி உயரமும், ஒன்று ஒன்றரை இரண்டு அடி நீளமும் உடையவை. இவை ஒவ்வொன்றிலும் மிக நுண்ணிய வேலைப்பாடுடன் கூடிய மிக நேர்த்தியான சிற்பங்கள் செதுக் கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் வால்மீகி இராமயணக் காட்சிகளைத் தத்ரூபமாகக் காட்டுகின்றன. இராமகாதையின் முக்கிய காட்சிகள் இங்கே வரிசையாக - அதிஷ்டானத்தில் இடப்புறம் தொடங்கி அப்பிரதட் சணமாகக் கோயிலைச் சுற்றி வந்து வலப்புறம் முடிவடையும் வண்ணம் வரிசையாகச் சினிமாப்படச் சுருளில் படங்கள் அமைந்திருப்பதைப் போல், சித்தரிக்கப் பட்டிருக்கின்றன. இச்சிற்பங்கள் ராமாயண நிகழ்ச்சிகளை எவரும், எளிதில் புரிந்து கொள்ளும்படியாக, அற்புதமாக அமைக்கப் பட்டுள்ளன. இந்த இராமாயணச் சிற்பக்காட்சிகளின் விளக்கம் தனியே இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

காமாட்சியம்மன் கோயிலுக்கும், தருமபுரிக்கும், நமக்கும் பெருமை தேடித்தரும் இவ்வற்புதச் சிற்பங்கள் இன்று மண்மூடி, நீரினால் அரிப்புண்டு, சிறிது சிறிதாக அழிந்து வருகின்றன.

## நவரங்க, அர்த்த மண்டபங்கள்

கோயிலின் 18 படிகள் ஏறி வாசலை அடைந்து மேலே பார்த்தால், தளக்கல், சிவன் கோயிலில் பார்த்ததைப் போலவே கஜலட்சுமி, நீர் சொரியும் யானைகள், அனைத்தையும் கொண்டுள்ளதைக் காண்கிறோம்.

இதைப் போலவே அம்மன் கருவறையின் மேலும் மங்கலச் சிற்பம் உண்டு, இவை இரண்டிலும் யானைகள் மாறி மாறி நீர் சொரிவதைப் போலவே அமைக்கப்பட்டுள்ளது அதிசயமே.

நவரங்க மண்டபத்துக்குள்ளே செல்கிறோம். இங்கும் சிவன் கோயில் நவரங்க மண்டப அமைப்பு அப்படியே, ஒரே அச்சில் வார்த்தவை போலவே இருக்கிறது. விதான நவரங்கத் தேவர்கள் சிற்ப அமைப்பும் அப்படியே! நடுக்கட்டத்தில் மட்டும் சிவபிரானோடு பார்வதியும் இருக்கிறார்.

இங்கும் ஒரு தொங்கும் தூண் ஆனால் இது மூலவரின் இடப்பக்கம் உள்ள முதல் தூண். (இப்போது இத்தூணின் அடியில் இருந்த இடை வெளி மண்ணால் அடைப்பட்டுள்ளது).

சிவன் கோயிலில் சிற்பங்கள் சிறியவை, நுண்வேலைப்பாடுடையவை. இங்கோ கோயிலைப் போலவே சிற்பங்களும் பெரியவை, நேர்த்தியானவை. இத்தூணின் இடைவெளியில் மங்கலநாணை ஒருபக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்கு எடுத்துச் சென்று இறைவனையும் தேவியையும் வழிபட்டால் திருமணமாகும் என மக்கள் இன்றும் நம்புகிறார்கள்.

வெளிபுறத் தோற்றத்திலும் கட்டுமானத்திலும் சிவன் கோயிலும் அம்மன் கோயிலும் தெளிவாக வேறுபட்டிருந்தாலும், உள் அமைப்பு, தூண்கள், சிற்பங்கள் வேலைப்பாடுகள் ஒன்றாகவே இருப்பது உறுதியா கிறது என்றாலும் இரண்டும் சமகாலத்தவையா ? என்னென்ன வரலாற்றுக் காலங்களுக்கு உரியவை? என்பது ஆராய்சிக்குரிய அருமையான கேள்விகள்!

அர்த்த மண்டபமும், பெரியது, அழகிய சிற்பங்களைக் கொண்டது. பெரிய தூண்கள் இங்கும் உள்ளன. நடுவில் அம்மனை நோக்கி நந்தி கருவறை வாசலின் இருபுறமும் அழகான, யோகினி போகினி எனும் துவார சக்திகள் நிற்கின்றனர். கருவறை வாசல் தளக்கல்லில் முன்பே பார்த்ததைப்போல, அழகிய கஜலட்சுமி' நீர் சொரியும் யானைகள் கூடிய அழகான சிற்பம்.

## அதியமானின் பொக்கிஷ நிலவறை

காமாட்சியம்மன் ஆலய அமைப்பு, உயரமான அதிர்ஷ்ட்டானத்தின் மேல் கட்டமைப்பு, திடபான 8 அடி அகலமுள்ள, கோட்டைப் மதிலைப் போன்ற பெருஞ்சுவர்கள், அனைத்துமே ஒரு முழு பாதுகாப்பான பலமுள்ள சிறு கோட்டைபோல் உள்ளது. இந்த ஆலயத்தின் கீழ் பெரிய நில வறையும் இது மிகவும் பாதுகாப்பான நிலவறை.

காமாட்சியம்மன் கோயில் நவரங்க மண்டபத்தின் தென்புறம் இந்நிலவறையின் நுழைவு வழி இருந்திருக்கிறது. இவ்வழி சமீபகாலம் வரை ஒரு பெரிய நீள் சதுரக் கல்லினால் மூடப்பட்டிருந்தது. சில ஆண்டுகளுக்கு முன் கோயில் தளம் புதுப்பிக்கப்பட்டபோது இந்தக்கல் நீக்கப்பட்டு, தளம் முழுவதும் மொசைக் தரையாக மாற்றப்பட்டுவிட்டது சுரங்க வழி இருந்த இடத்தைக் குறிக்க ஒரு சதுர வடிவம் போடப்பட்டுள்ளது. இங்கிருந்து அகற்றப்பட்ட நீள்கருங்கல் இப்போது வெளியே நீராழி மண்டபத்தின் அருகே வைக்கப்பட்டுள்ளது.

## ஆலய விமானம்

காமாட்சியம்மன் ஆலய விமானம் சுமார் 60 அடி உயரமிருக்கும். சிவன் கோயில் விமானத்தை விஞ்சி நிற்கிறது. இருப்பிலும் கருவறையின் பெருத்த மதில் போன்ற, திடமான சுவர்களைப் பார்க்கும்போது, இந்த அமைப்பின் கம்பீரத்திற்கு பொருத்தமாகவே இல்லை, இந்த 60 அடி விமானம். கோயிலைக் கட்டியவர்கள் இதைவிடப் பெரிய விமானத்தையே கட்டத் திட்டமிட்டிருப்பார்கள். ஏனோ, அந்தத் திட்டம் நிறைவேறவில்லை. பின்னால் வந்தவர்களால் இந்த ‘சிறிய’ கோபுரத்தைக் தான் கட்ட முடிந்திருக்கிறது. இல்லையேல் இன்று தருமபுரி வானளாவிய, நூறடிக்கும் உயரயான காமாட்சியம்மன் விமானத்தைக் கொண்டிருக்கும்.

## காமாட்சியம்மன்

அகன்ற கருவறையிலே, அறுபதடி விமானத்தின் கீழே, அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகி, அன்னை காமாட்சி நம்மைப் பார்த்துப் புன்னகை பூத்த வண்ணம் அருள்பாலிப்பதைக் காண்கிறோம். நெஞ்சம் கசிந்துருக, கண்ணீர் மல்க, இருகை கூப்பித்தொழுது, 'அம்மா' என்று வாயார, மனமுருக அழைக்கின்றோம். அவள் அருளை வேண்டி வணங்கித் துதிக்கிறோம். ஆனந்தப் பரவசமடைகிறோம்.

''தையல் நல்லாளை தவத்தின் தலைவியை
மையலை நோக்கும் மனோன்மணி மங்கையை
பைய நின்றேத்திப் பணியின் பணிந்த பின்
வெய்ய பவமினி மேவகிலாவே!''

திருமூலர் உணர்ந்து பாடிய திருமந்திரப் பொருளை நாமும் முழுதும் உணர்ந்து அவளது கருணைப் பார்வையிலேயே லயித்து நிற்கிறோம்.

ஒரு எடுப்பான பெரிய பீடம். அதன் மேல் உயர்ந்த. மிக அழகிய யாளிகளின் வடிவங்களுடன் அமைந்த பெரிய பிரபை. அதன் எதிரே அன்னையின் எழிலார்ந்த திருமூர்த்தம். சுமார் நான்கடி உயரமிருக்கும் நின்ற திருக்கோலம். அன்னை காமாட்சி கருணை வடிவாக, சாந்த சொரூபியாகக் காண்போர் மயங்கும் எழிலோடு, நேரில் காட்சி தருகிறாள்.

மோகனப்புன்னகை சதா தவழ்ந்திருக்கும் தாமரை மலர் போன்ற தன்முகம் - சிரசிலே பொன்மணிக்கிரீடம் - ஜொலிக்கும் நெற்றிப்பட்டயம்- மிளிரும் மங்கலக் குங்குமம் கருணை பொழியும் கயல்விழிகள் காதிலே பெரிய தாடகங்கள் கழுத்திலே மாங்கல்யம் மணியாரம் முத்து வடம் மலர் மாலை எலுமிச்சபழ மாலை கைகளிலே பாசாங்குசங்கள் அபய ஹஸ்தம் கைகளிலும் கால்களிலும் பொன்மணியாரங்கள் இடுப்பிலே ஒட்டியானம் பாதங்களிலே தண்டை பூரித்திருக்கும் இவ்வழகைக் காண இருகண்கள் போதாது. அபிராமிபட்டரைப்போல அவள் எழிலை உணர்ந்து வருணிக்க வாழ்நாளும் போதாது.

பக்தர்களுக்கு அருளை வாரி வழங்குபவள். வள்ளல் அதியனின் தகடூர் வாழ் காமாட்சி, அவள் மகத்துவம் மாளாதது. அம்மா என்று ஒருமுறை அன்புடன் கூவியழைத்தால் போதும். உடன் ஓடிவருவாள். கண்ணீரைத்துடைத்து காத்தருள்வாள் அந்தக் கருணாம்பிகை.

## இராஜதுர்காம்பிகை

அன்னை காமாட்சி ஆலய நவரங்க மண்டபத்தில் வடபால் ஒரு சிறுமேடைமேல் அமைந்த மண்டபத்தில், மகிஷாசூர மர்த்தனியாக, இராஜதுர்காம்பிகை எனும் நாமம் கொண்டு அருள்பாலிக்கிறாள், மகாசக்தி வாய்ந்த இராஜதுர்க்காம்பிகை.

ஆதியில் தகடூர்க்கோட்டையின் மூன்றாவது பிரகாரத்தில், தென் மேற்கில் நிருதிபாகத்தில், கோட்டைக் காவல் தெய்வமாக, வீரவழிபாட்டுக் களபலி தெய்வமாக, 'கொற்றவை' (ரௌத்திர மகிஷாசுரமர்த்தனி) ஆலயம் கொண்டிருந்தாள். கருவறையில் இந்தத் தேவிக்கு சூரிய சந்திரர் கள் சாமரம் வீசுவதைப் போன்ற சிலைகளும் இருந்தன: பிற்காலச் சோழர்களின் ஆராதனை தெய்வமாகிய 'நிசும்சுதனி' யும் இந்தத் தேவியே எனவும் கூறுவர். காலப்போக்கிலே, இக்கோட்டையிலே நடந்த போர்களின் காரணமாகக் கொற்றவை ஆலயமும், கோட்டைப்பிரகாரங்களும் இடிபட்டு அழிந்து போயின. கொற்றவையின் சிலையும் எங்கோ புதைந்து போயிற்று.

இத்தல விருட்சமான 'கொடை வேல மரம்' இருக்கும் மேட்டுப் பகுதிக்கருகிலே, ஏதோ வேலையாகத் தோண்டியபொழுது, இந்த அற்பு தச்சிலாரூபம் கிடைத்தது. அதைக் காமாட்சியம்மன் ஆலயத்தில் சுமார் நூறாண்டுகளுக்கு முன்னால் பிரதிஷ்ட்டை செய்து, இராஜதுர்க்காம்பிகை யாக மக்கள் வழிபட்டு வருகின்றனர்.

இந்தத்தேவி வேறு எங்குமே காணுதற்குரிய அற்புதமான வடிவுடை யவள். அம்பிகை சதுர்புஜங்களுடன் மகிஷனைக் கொல்லும் தோற்றத்தில் ஆக்ரோஷமாகக் காட்சியளிக்கிறாள். பெரிய கொம்புகளுடன் மகிஷன் கேடயத்துடன் முழு மனித உருவில் அடிபட்டு சாய்ந்துக் கிடப்பது ஒரு

அற்புதமான அரிய வடிவமாகும் அன்னையின் மேற்கைகள் சங்கும் சக்கரமும் ஏந்தியுள்ளன. கீழ் இடது கையால் மகிஷனின் கொம்பை உறுதியாகப்பிடித்துக் கொண்டு, வலது கையில் பிடித்து பெரிய சூலத்தால் அவனது தோளில் குத்துகிறாள். அன்னை வலது காலைக் கீழே ஊன்றி இடதுகாலால் மகிஷனின் தோளை மிதித்திருக்கிறாள். இத்தகைய காட்சியும், அற்புதவேலைப்பாடும் அமைந்து மகிஷாசுரன் அம்மன் திருவடிகளை வேண்டுவது போன்ற அமைந்த இவ்வமைப்பைத் தமிழகத்தில் வேறு எங்கும் காண்பது அரிது.

ஆயிரம் ஆண்டுகளாக மன்னர்களும் மக்களும் தொழுது வணங்கிய இந்த இராஜதுர்க்காம்பிகை, கோபமாகக் காட்சித்தந்த போதிலும், கருணை மிக்கவள். நாடி வந்த பக்தர்களுக்கு நலமெலாம் தருபவள். செவ்வாய் தோஷமுடைய ஆண், பெண் இருபாலரும் இந்த அன்னையை வழிபட்டால் தோஷம் நீங்கப் பெறுவர்.

## சுற்றுப் பிரகாரக் கோயில்கள்

கோயில் பிரகாரத்தில் தென்கிழக்கில் வாகன மண்டபம் அமைந்துள்ளது திருவிழாக்காலங்களில் உற்சவமூர்த்தியைச் சுமந்து செல்லும் ரிஷபம் முதலான வாகனங்கள் இங்கே வைக்கப்பட்டுள்ளன. இதையடுத்து தெற்கு வாசல் அமைந்துள்ளது.

## வினாயகர் கோயில்

தெற்கு வாசலுக்கு மேற்புறம், கோயிலின் தென்மேற்குப் பகுதியில் ஒரு மேடை மீது, சமீபத்தில் கட்டிய வினாயகர் கோயில் அமைந்துள்ளது சுவாமிக்குச் செல்வ கணபதி என்று பெயர்.

## சுப்ரமணியர் கோயில்

சிவன் கோவில் கருவறையை ஒட்டி, பின்புறம் அமைக்கப்பட்ட பழமையான மண்டபத்தில் கிழக்கு நோக்கியபடி முருகன் இஷ்டசித்தி ஷண்முகநாதர் என்ற நாமம் தரித்து எழுந்தருளியுள்ளார். மிக உயர்ந்த காமாட்சியம்மன் விமானமும், அதை அடுத்து உயரமான சிவன் விமானமும்

அதனினும் சிறிய சுப்ரமணியர் விமானமும் ஏறத்தாழ ஒரே விதமான அமைப்புடன், கூட்டமாக அமைந்துள்ளன, சமகாலத்தவையாக இருக்கலாம் சிவன் கோவில் கருவறையோடு இணைக்கும் மண்டபம் பின்னால் கட்டப்பட்டிருக்க வேண்டும். முருகன் சந்நதிக்கெதிரே, சிவன் கோவில் கருவறையின் பின்புறம் (பெரும்பாலும் லிங்கோத்பவர் எழுந்தருளியுள்ள இடத்தில்) பெருமாள் மூர்த்தம் அருள்பாலிக்கிறது.

## சண்டிகேஸ்வரர் கோயில்

சிவன் கருவறையின் வடபுறம் சிறுகோவிலில் சண்டிகேஸ்வரர் எழுந்தருளியுள்ளார்.

## திருக்கோஷ்டத் தெய்வங்கள்

ஆகமசாஸ்த்திர விதிகளின் படி சிவன் கோயிலைச் சுற்றிக் கோட்டத்தில் ஐந்து தெய்வங்கள் அருள்பாலிக்க வேண்டும். அதன்படிக் கருவறையின் தென்பக்கச் சுவர் மாடங்களில் எழிழ்மிகு நர்த்தன வினாயகரும், அருளே வடிவான தட்சிணாமூர்த்தியும் எழுந்தருளியுள்ளனர். ஆல் அமர் கடவுளுக்கு ஒரு மண்டபமும் கட்டப்பட்டுள்ளது. மேற்கில், முருகன் சந்நதிக்கெதிரே முன்பே கூறப்பட்ட, பெருமாள் அழகுறக்காட்சி தருகிறார். வடபுறம் படைப்புத் தெய்வம் பிரம்மாவும், அருள்வடிவான துர்க்கை அம்மையும் எழுந்தருளியுள்ளனர்.

## சோமேஸ்வரர் கோயில் :

கோட்டைக் கோயில் பிரகாரத்துள் ஒரே வரிசையில் கிழக்கு நோக்கி அமைந்துள்ள மூன்று கோயில்களில், வடபுறம் அமைந்துள்ள புராதனமான சிறிய கோயில் சோமேஸ்வரர் கோயிலாகும். பண்டைய வரலாறு கூறும் ‘ஓராயீஸ்வரம் உடையார்’ இவராகத்தான் இருக்க வேண்டும்.

இச்சிறிய கோயில் முழுவதும் காரையால் கட்டப்பட்டது. தடித்த சுவர்களையும் தட்டையான கூரையையும் உடையது. சுதைகளோ, மற்ற வேலைப்பாடுகளோ ஏதும் இல்லை. முன்னே சிறிய அர்த்த மண்டபம், அதிலே இடப்பக்கம் அழகான அம்மன் – சோமநாயகியின் திருஉருவச்சிலை உள்ளே கருவறையில் பெரிய லிங்கமூர்த்தமாகச் சோமேஸ்வரர். சதுர

வடிவான ஆவுடையாரின் அடிப்பகுதி கமல மலர் இதழ்கள் வடிவில் அமைந்துள்ளது. வேறு எந்த லிங்கத்திலும் இத்தகு அழகிய அமைப்பைக் காண முடியாது எனக் கூறுகின்றனர். ஸ்ரீ மல்லிகார்ஜுன சுவாமி லிங்கத்தின் சதுர ஆவுடையார் பல பட்டைகளால் அமைந்துள்ளது என்பதை நினைவு கூறலாம்.

இத்தலத்தில் ஆதியில் அமைந்த கோயில் சோமேஸ்வரர் கோயிலாக இருக்கலாம். மற்ற இருகோயில்களும் பின்னர் கட்டப்பட்டவையாக இருக்கக் கூடும்.

## பைரவர் கோயில்

சோமேஸ்வரர் கோயிலுக்குச் சற்று முன்புறம், தெற்கு நோக்கி அமைந்துள்ளது ஒரு சிறிய கோயில். இங்கு அபூர்வமான சக்கரவடிவக் கல்லில் செதுக்கப்பட்டுள்ள அழகிய பைரவர் சிலை அமைந்துள்ளது. அமைப்பிலும் காலத்திலும் இக்கோயிலும் சோமேஸ்வரர் கோயிலையே ஒத்துள்ளது.

## நாக கன்னியர், ரேணுகா தேவி மூர்த்தங்கள்

பைரவர் கோயிலை அடுத்து அந்நாளில் மிகப்பெரிய அரசமரம் இருந்தது. அதன் கீழே வினாயகர், திரிசூலம், ரேணுகா தேவி முதலானோர் திருவுருவங்களும், எதிரே பல நாககன்னியர் சிலைகளும் அனுமன் சிலையும் உள்ளன. அரசமரம் பட்டுப்போக, அவ்விடத்தில் இப்போது ஒரு வில்வ மரம் வளர்ந்து வருகிறது.

## நவக்கிரக ஆலயம்

நாக கன்னியர் அமைப்பை அடுத்து, சில ஆண்டுகளுக்கு முன் கட்டப் பட்ட புதிய மண்டபத்தில், நவக்கிரகங்கள் பிரதிஷ்டைச் செய்யப்பட்டுள் ளன. முன்பு சிவன் கோயில் நர்த்தன மண்டபத்தில் இருந்த நவக்கிரகங் கள்தான் இங்கு மாற்றப்பட்டுள்ளன.

கோயிலின் ஈசானிய மூலையில் பெருங்கிணறு உள்ளது. இதன் சுற்றுச்சுவர் கூட எண்பட்டை வடிவில், நவரங்க அமைப்பைப் போலவே உள்ளது !

## தல விருட்சம்

அக்காலத்து மக்கள் அரிய இயற்கைச் செல்வங்களை நீர்நிலைகள், அபூர்வமரங்கள், போன்றவற்றைப் பேணிக்காக்கவும் கோயில்களைப் பயன்படுத்திக் கொண்டார்கள். பல கோயில்களில் சுனைகள், ஊற்றுகள், குளங்கள், புனிதத் தீர்த்தங்களாகக் கருதப்பட்டு, மக்களின், பொறுப்பற்ற செயல்களிலிருந்து பாதுகாக்கப்படுகின்றன. பல அரிய, அபூர்வமான மரங்கள் கோயில்களில் தலவிருட்சங்களாக காப்பாற்றப்பட்டுள்ளன, அவை வெளியே எங்கும் காணப்படுவதில்லை. சில கோயில்களில் அப்பகுதியில் மிகவும் பரவலாக, சாதாரணமாகக் காணப்படும் மரங்களே தல விருட்சங்களாயின.

அவ்வாறே தகடூர்க்கோட்டைக் கோயிலின் தல விருட்சம் சாதாரண மாகக் காணப்படும் 'குடை வேல மரம்' அடிமரத்தின் மேல் வளர்ந்த கிளைகள் அனைத்தும் வட்டமாக, தட்டையாக ஒரு குடையைப் போல் வளர்ந்திருப்பதால் இது குடைவேல மரம் எனப்படுகிறது. ஆனால் இது கோயிலின் உட்பிரகாரத்திற்குள் இல்லை. மாறாக, திருப்புத்தூர் சாலை யிலிருந்து கோயிலுக்கும் வரும் பாதையில், மேல்நிலைத்தண்ணீர் தொட் டியின் பக்கம், பாதைகள் கூடுமிடத்தில் ஒரு கல் மேடை நடுவே இந்தத் தலவிருட்சமாகிய குடைவேமரம் இருக்கிறது. பண்டைய காலத் தகடூர்க் கோட்டை ஐந்து பிரகாரங்களுடன் சிறப்புற்றிருந்தது. அவற்றுள் மூன்றாவது பிரகாரத்தில் இத்தல விருட்சம் இருந்தது. இன்று பிரகாரங்கள்இல்லை. தலவிருட்சம் மட்டும் தனித்து நிற்கிறது. பொதுவாக நேராக வளரும் அடிமரம் காலப்போக்கில் முதிர்ந்து, சிதைந்து போக, பக்கக்கிளைகள் தோன்றி வளர்ந்த இன்றுள்ள பல கோணல்களுடன் கூடிய மரமாக இன்று காட்சித் தருவதே அதன் தொன்மைக்குச் சான்றாகும். இப்புனிதமரத்தை இனியாவது கவனித்துப் பராமரிக்க வேண்டியது நமது கடமையாகும்.

## தலத் தீர்த்தங்கள்

ஐந்து பிரகாரங்களைக் கொண்ட தகடூர்க்கோட்டையின் கிழக்கே, வெளிச் சுவரை ஒட்டி, இத்தலத்தின் 'புனிதநதியான சனத்குமார நதி, சலனமின்றித் தெளிந்த நீருடன் ஓடியது. ஆங்காங்கே மக்கள் புனித தீர்த்தமாட வசதியாக படித்துறைகள் அமைந்திருந்தன. பக்தர்கள் இங்கு நீராடிவிட்டுக் கோட்டை நடுப்பிரகாரத்தில் அமைந்திருந்த கோயில்களை நோக்கிக் கூட்டமாகச் செல்வர்.

பிற்காலத்தில் தகடூர்க்கோட்டைப் பிரகாரச்சுவர்கள் இடிந்து விழுந்து மறைந்து போயின. அன்று வெளிப்பிரகாரம் அமைந்திருந்த திருப்பத்தூர் சாலையில், மொரப்பூர் செல்லும் பாதை பிரியுமிடத்தில், பழைய சிறப்பை யெல்லாம் இழந்து, ஒரு சிற்றாராக இன்று சனத்குமாரநதி இருக்கிறது.

வெளிப்பிரகாரச் சுவரை ஒட்டி அன்று மூன்று அழகிய திருக்குளங்கள், அகலமான படிகளுடன் அமைந்திருந்ததாகத் தெரிகிறது. இப்புஷ்கரணி களின் அருகே காவல் தெய்வங்களான மாரியம்மன், அங்காளம்மன், பிடாரியம்மன் போன்றோரின் திருக்கோயில்களும் அமைந்திருந்தன. கோட்டைக்கோயில்களைத் தரிசிக்க வரும் பக்தர்கள் இத்திருக்குளங்களில் நீராடி, புத்தாடை உடுத்தி கோயிலை நோக்கிச் செல்வர்.

அந்நாட்களில் இருவரிடையே சச்சரவு, சண்டை ஏற்பட்டால் அவர்கள் இத்தலத்தீர்த்தங்களில் நீராடிவிட்டு, கோவிலுக்குச் சென்று காமாட்சியம்மன் ஆலயப்படிகள் ஏறி அம்பிகையின் முன் கற்பூரம் ஏற்றிச்சத்தியம் செய்து, பிரச்சனையைத் தீர்த்துக் கொள்வார்களாம். எத்தகைய வன்னெஞ்சம் உடையோரும் இவ்வாறு சென்று பொய்ச் சத்தியம் செய்யமாட்டார்கள் என்பது மரபுவழி வரும் உண்மை இன்றும் இப்பழக்கமும் நம்பிக்கையும் இருந்து வருகிறது.

அன்று அழகுற அமைந்திருந்த திருக்குளங்களில் ஒன்று மட்டுமே இன்றும் உள்ளது. அதுதான் மன்றோதூண் எதிரே ஒரு சந்தில் இருக்கும் 'மீர்சாயுபு குளம்'. மற்ற ஏனையகுளங்களும் இவ்வாறே தன்சிறப்பை இழந்துள்ளன.

எக்காலத்திற்கும் மக்கள் இறைவழிபாட்டிற்கு உதவப் பரந்த மனத்தோடு மூதாதையர்கள் அமைத்த பெறற்கரிய செல்வங்களான கோயில்களையும் குளங்களையும், இன்றைய மக்கள் தங்கள் சுயநலத்திற்காக அழித்து ஒழித்து விட்டார்களே என்பதை எண்ணும் போது மனம் வெட்கி வேதனைப் படுகிறது. இறைவா ! என்று இந்த நிலை மாறும் ?



# ஸ்ரீ பரவாசு தேவப் பெருமாள் திருக்கோயில்

நாகத் தணையானை நாடோறும் ஞானத்தால்
ஆகத் தணைப்பார்க்கு அருள்-செய்யும் அம்மானை
மாகத்து இளமதியம் சேரும் சடையானைப்
பாகத்து வைத்தான் - தன் பாதம் பணிந்தேனே !

## காலத்தால் அழியாத கோயில்கள்

கோட்டையின் உட்பிரகாரத்தில் உள்ள மற்றொரு பெரியகோயில் அருள்மிகு வரமகாலட்சுமி சமேத ஸ்ரீ பரவாசுதேவப் பெருமாள் திருக்கோயில் மிகவும் புராதனமான, புனிதமான கோயிலாகும். இப்பெருமாள் பிரமதேவரால் பிரதிஷ்டை செய்யப்பட்டுத் தேவர்கள், முனிவர்கள், பஞ்ச பாண்டவர்களில் ஒருவனான அருச்சுனன் ஆகியோரால் பூஜை செய்யப் பட்ட மிகவும் சிரேஷ்டமான இறைவன் எனப் பரம்பரையாகக் கூறப்படுகிறது.

## ஆலய அமைப்பு

கிழக்கே பார்த்த நுழைவாயில், மேலே ராஜகோபுரம் இல்லை. ஒரு முகப்பு மண்டபம், அதில் திருப்பாற்கடலின் மேல் திருமால் சயனித்திருக்க தேவி அவரது பாதத்தருகே அமர்ந்திருக்க, திருமாலின் நாடியில் உதய மாகும் தாமரையில் பிரமதேவர் வீற்றிருக்க, வைகுந்தமாகிய பரமபதத் தைக் காட்டும் சுதைக்கோலம். அக்காட்சியைக் கண்டு கைகூப்பிய வண்ணம் ஆலயத்திற்குள் பிரவேசிக்கிறோம்.

உயர்ந்த தீபஸ்தம்பம். அதன் அடிப்பகுதியிலே சிறிய திருவடியாகிய ஆஞ்சநேயரின் அருள் வடிவம். ஒரு சிறிய பலிபீடம், தொடர்ந்து மிகவும் சிதிலமடைந்த, எளிய துவஜஸ்தம்பம். அடுத்துச் சிறிதான ஆழ்வார் மண்டபம். அதிலே பெரியதிருவடியாகிய கருடாழ்வார் எம்பெருமானை வணங்கியபடி நின்றிருக்கிறார்.

எதிரில் மகா மண்டபம், முகப்பில், தொடையில் தேவியை அமர்த்திய பரவாசுதேவரின் - மூலவரின் சுதை வடிவம். பல எளிய சிற்பங்களைத் தாங்கிய தூண்கள் கொண்ட விசாலமான மண்டபம். எதிரே, வேதமண்டப வாசல். இருபுறமும் அழகிய துவாரபாலகர்கள். வலது பக்கம் பரமபதம் சேர்க்கும் சொர்க்கவாசல், கதவு மூடியிருக்கிறது. மிகப்புனிதமான வைகுந்த ஏகாதசி நாளன்று பக்தர்கள் இவ்வாசல் வழியாக வைகுந்த நாயகனின் அருளைப் பெற உள்ளே செல்வார்கள்.

அடுத்தது நான்கு தூண்களை நடுவில் கொண்ட வேத மண்டபம். நான்கு தூண்களும் நான்கு வேதங்களைக் குறிப்பவையாகும். எதிரே இரு துவார பாலகர்கள் அர்த்தமண்டப வாயிலைக் காத்து நிற்கின்றனர். பக்கச் சுவர் அருகே நான்கு ஆழ்வார்களின் மூர்த்தங்கள், சேனமுதலி ஆழ்வார், உடையவர் (இராமானுஜர்), நம்மாழ்வார், மதுரகவியாழ்வார் அனைவரும் இத்தல மூர்த்தியைச் சேவித்து நிற்கின்றனர்.

## மூலவர் திருக்கோலம்

அர்த்த மண்டபத்திற்குள்ளே நுழைந்து, எதிரே உயரமான கருவறையில் வீற்றிருக்கும் மூலவரின் பேரழகில், புதுப்பொலிவில், தேஜசில் லயித்து, இருகையும் கூப்பி, கண்ணிறைந்து, மனம் நிறைந்து, ஆனந்த வெள்ளமாகப் பாயும் அருளைப் பெருகியவாறு, வேறு செயலிழந்து நிற்கிறோம். திருஅலங்காரம் செய்வதற்கு முன் மூலவரின் அழகிய திருமேனியைக் கண்ணாரக் காணும் பேறு பெற்றமைக்காகப் பெரிதும் உவந்து நிற்கிறோம்.

''தோள் கண்டார் தோளே கண்டார் தொடுகழல்
தாள் கண்டார் தாளே கண்டார், தடக்கைக் கண்டாரும் அஃதே''

என்ற கம்பன் கூற்றிற்கேற்ப, அவன் அருள்வடிவை வாழ்நாள் எல்லாம் கண்டபடியே இருக்கமாட்டோமா என அனைவரையும் ஏங்க வைக்கும் தெய்வத்திருக்கோலத்தை வார்த்தையில் வடிக்க இயலுமோ?

அருள் வடிவான அன்னையைத் தனது இடது தொடை மீது அமர்த்திக் கொண்ட பூரிப்போடு, ஆதிசேஷன் மேல் குந்து காலிட்டு ஓய்வாக அமர்ந்து, பக்தர்களுக்கு ஆர அமரத்தரிசனம் தருகிறார் ஸ்ரீ பரவாசுதேவர்.

ஆதிசேஷன் ஏழுதலைகளும் குடையாகப் படமெடுத்து, நீண்ட உடலை மூன்று சுற்றுகளாக மண்டலமிட்டு ஸர்ப்பாசனம் அமைத்திருக்கிறர் திருப்பாற்கடலிலே, அடுக்கடுக்காகச் சிறந்த அலங்காரங்களுடன் கூடிய, சாய்ந்த நிலையில் இருக்கும் சிங்கங்கள் தாங்கி நிற்கும் அரியாசனமாகிய பீடத்தின் மேல் அமைந்திருக்கிறது இந்த ஸர்ப்பாசனம். இந்த உயர்ந்த ஆசனத்தில் பெருமாள் அமர்ந்திருக்க, அவரது இடது தொடை மேல் தாயார் நளினமாக வீற்றிருக்கிறார்.

அன்னையின் எழில் பொங்கும் திருஉருவம் கருணை ததும்பும் மோகனத் திருமுகம், சிரசிலே நவரத்தினக் கிரீடம், நெற்றிப்பட்டமும் திலகமும் மிளிரும் பரந்த நெற்றி, காதிலே குண்டலங்கள், தோளிலே வாகுவளையம், கழுத்திலே மங்கலநாண், முத்து மணியாரங்கள், மார்பிலே

கச்சு, இடையிலே 32 வடக்கோவை முத்து மணிக்கலன்கள், காலிலே தண்டை, சிலம்பு, காலாழிகள், இரண்டு கால்களும் சேர்ந்த வண்ணம் கீழிருக்க, இருதிருவடிகளையும் பாற்கடலிலிருந்து தோன்றிய தாமரை மலர் தாங்கியிருக்கிறது. வலது கையில் பதுமம் இடது கை கீழ்நோக்கி இருக்கிறது.

இப்படிக் கண்டவர் மயங்கும் வண்ணம் சர்வலங்கார பூஷிதையாக, இறைவன் தொடைமேல் பெருமையோடு வீற்றிருந்து வருகின்ற பக்தர் களுக்கெல்லாம் அருறை வரத்தை வாரி வழங்குகிறாள் தேவி. அதனால் தான் அவளுக்கு 'வர மகாலட்சுமி' என்ற திருநாமம் வழங்குகிறது.

பக்தர்களுக்குப் பரமபதம் தரும் பரம்பொருளான 'பரவாசுதேவப் பெருமாள்' சதுர்புஜ மூர்த்தி. ஆஜானுபாவான இளமை பொங்கும் திருமேனி, அன்பையும் அருளையும் காட்டும் மோகனத்திருமுகம். வலது மேல் கையில் சக்கரம் கீழ்க்கை கதையை ஆதிசேஷப்பள்ளியின் மேல் ஊன்றிப் பிடித்திருக்கிறது. இடது மேல் கையில் சங்கு, அத்திருக்கை, இறைவனின் இடது தொடை மேல் அமர்ந்திருக்கும் தாயாரின் சிரசிற்குப் பின்னே கிரீடத்தோடு சேர்ந்திருக்கிறது. இடது கீழ்க்கை ஆதிசேஷன் பள்ளியின் மேல் சாய்வாக ஊன்றியிருக்கிறது. சுவாமி வலது பாதம் மடித்து, குந்துகாலிட்டு ஸர்ப்ப மண்டலத்தின் மேல் வைத்திருக்க, இடது பாதம் கீழே தொங்கியவாறு உள்ளது. வலது திருப்பாதத்தின் அருகே பெரிய திருவடி கைகூப்பி நிற்கிறார். இடது திருப்பாதத்தின் பக்கத்தில் சிறியதிருவடி தொழுதவண்ணம் நிற்கிறார்.

வைகுந்த வாசனின் அலங்காரங்களைச் சொல்லி முடியாது. சிரசிலே மாணிக்கக் கிரீடம் நெற்றியில் நேர்த்தியான பட்டம், காதிலே மகரக்குண்டலங்கள் கழுத்திலே முப்பட்டை அட்டிகை, மணி மாலை, முத்துச் சரங்கள், கண்டிகை, முப்புரிநூல் மார்பில் இலங்க, கௌஸ்துப மணிமாலை நெஞ்சில் மதாணியாய் விளங்க, பீதாம்பரம், அதிலே யாளி அலங்காரம் பொலியும் கச்சு, இடையே அலங்கரிக்கும் முத்துமாலைகள், பூமாலைகள் தோளிலே நெடுவங்கியம், வாகுவளையம், கைகளில் நான்கு சுற்றுச்

சங்கிலி வளையங்கள், காரை காப்பு, மூன்று விரல்களிலே மோதிரங்கள், கால்களிலே வஸ்திரம், யாளிமுகம் பதித்து காரை, கட்டை விரலிலே காலாழி. அப்பப்பா ! எத்தகைய குபேர சம்பத்து !

## மூலவரின் கலையழகும் சிறப்புகளும் :

ஆதிசேஷன், பெருமாள், தாயார், ஸர்ப்பாசனம், அரியாசன பீடம், தாமரை மலர், பெரிய திருவடி, சிறிய திருவடி ஆகிய அனைத்தும் சேர்ந்த மூலவர் திருவடிவம் ஒரே பிம்பத்தில் ஒரே கல்லில் உருவாக்கப் பட்டுள்ளது இந்தத் திருவுருவைப் படைத்த தேவ சிற்பி தெய்வாம்சம் பொருந்திய மகானாய் இருக்கவேண்டும்.

''சென்றால் குடையாம் இருந்தால் சிங்கசனமாம்
நின்றால் மரவடியாம் நீள்கடவுள் — என்றும்
புணையாம் மணி விளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாம் திருமாலுக்கு அரவு''

என்று பொய்கையாழ்வார் அருளிச் செய்தபடி இங்கு ஆதிசேஷன், மூன்று காலங்களையும் உணர்த்தும் வண்ணம் மூன்று சுற்று மண்டலங்களுடன் கூடிய ஸர்ப்பாசனத்தைப் பாற்கடலில் அமைந்திருக்க, அந்த ஆசனத்தில் இறைவன் குந்துகாலிட்டு அமர்ந்திருக்க, அவரது இடது தொடையில் அன்னை பாங்காய் வீற்றிருக்கும் திருமூர்த்தம் வேறு எந்தத் தலத்திலும் காண இயலாத கொள்ளை அழகு ! தருமபுரித் தலத்தின் தவமே தவம் !

வடக்கே திருவேங்கடத்தில் நின்ற திருக்கோலத்தில் கோடானுகோடி பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் வெங்கடேசப் பெருமாள், தகடூரில் அமர்ந்த திருக்கோலத்தில் ஸ்ரீ பரவாசுதேவப் பெருமாளாகப் பக்தர்களுக்கு அனுக் கிரகித்துப் பின்பு தெற்கே திருவரங்கத்தில் திருவரங்கன் சயனத் திருக் கோலத்தில் அருள் பாலிக்கிறார் என்பது ஐதீகம். திருப்பதி-தகடூர்-திருவரங்கம் ஆகிய முப்பெரும் வைணவத்தலங்களுக்கிடையேயான புராணத் தொடர்பை இதன் மூலம் அறியலாம். அதுவுமன்றி, வேங்கடத்திற்கும் அரங்கத்திற்கும் உள்ள புனிதத்தன்மையும், சிறப்பும், பெருமையும் தகடூர்த்தலத்திற்கும் உண்டு என்பது உயர்ந்தோர் வாக்காகும்.

மோகன முத்த முறுவல் பதித்துத் திருமாலும், மகா லட்சுமியும் தன் மீது வீற்றிருக்கும் பெருமையோடு ஆதிசேஷன், தனது ஏழு தலைகளையும் வளைத்துக் குனிந்து, அவர்களின் பேரழகையும் அருள்வடிவையும் ஆனந்தப் பரவசத்துடன் கண்டு களிப்பது போல் ஆதிசேஷனுடைய சிலா வடிவம் தத்ரூபமாக அமைந்திருப்பது பெரும் சிறப்பாகும்.

இறைவனும் இறைவியும் உலகத்தாரை நோக்கிய வண்ணம் அருள் பாலிக்கின்றனர். அதே போலக்கருடாழ்வாரும் நோக்குகிறார். ஆனால் சிறிய திருவடியான ஆஞ்சநேயர் மட்டும், எனக்கு நீ ஒருவனே போதும், மற்றொன்றும் வேண்டேன்' என்று கூறுவது போல, இறைவனைப் பார்த்த வண்ணம் தொழுது நிற்பது விசேஷமாகும். ''எனக்குக் கண்ணன் கூட வேண்டாம், இராமபிரான் மட்டுமே வேண்டும்'' எனச்சதா சர்வ காலமும் இராம நாமத்தையே ஜபிக்கும் சிரஞ்சீவியல்லவா அனுமன்!

## தலவிருட்சங்கள்

கோயில் சுற்றுப் பிரகாரத்தில் வடப்பக்கத்தில் சூடிக்கொடுத்த நாச்சியார் ஆண்டாள் அழகுற இருக்கும் சந்நதி உள்ளது. தென்பக்கம் சமீபத்தில் கட்டப்பட்ட சிறு கோயிலில் கம்பீரமான, பக்திததும்பும் ஆஞ்சநேயர் நின்ற கோலத்தில் அருள் பாலிக்கிறார். திருக்கோயில் கருவறை மீது பழுதுபட்ட விமானம் காணப்படுகிறது.

இக்கோயிலில் மூன்று தலவிருட்சங்கள் அமைந்திருப்பது தனிச்சிறப் பாகும். ஆஷாமரம் பிரதான தலவிருட்சம். வில்வமும் வேம்பும் உபதல விருட்சங்களாகும். திருமாலுக்குரிய ஆஷா மரமும், சிவபெருமானுக்குரிய வில்வமரமும், மாரியமமனுக்குரிய வேப்பமரமும் இக்கோயிலில் ஒருங்கே அமைந்திருப்பது, இத்திருத்தலத்தில் இம்மூவரும் எழுந்தருளி அருள் பாலித்து வருகின்றனர் என்பதை அறிவுறுத்துகிறது.

இந்தத்தல விருட்சங்களை இன்றும் மக்கள் வழிபாடு செய்து வருகின்ற னர். ஒவ்வொருவரும் தமது மண்ணிற்குரிய மரங்களைப் போற்றி வழிபாடு செய்தல் வேண்டும் என்பதே நமது முன்னோர் நமக்குக் காட்டும் மரபு. இம்மரபைப் போற்றினால், நமக்கும் நல்லது, அனைத்து உயிர்களுக்கும் நல்லது.

## ஹரியும் சிவனும் ஒன்று :

நம் மக்களின் உயர்ந்த சமய ஒருமைப் பாட்டினைத் தெளிவாக, மிக அழகாகக் காட்டுகின்றன, இவ்வாலய மகா மண்டபத்தூண் சிற்பங்கள். இம்மண்டபத்தின் நடுவிலே அமைந்த நான்கு தூண்களிலும் சிவலிங்கத் தோற்றங்களும், வரலாறுகளும் மாண்புறச் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சில ரிஷபாரூடர், நாகலிங்கேஸ்வரர், வீரபத்திரர், நடராஜர், சிவன் களிறு உரித்த காட்சி, காமதேனு சிவலிங்கப் பூஜை செய்தல், ரிஷபமும் லிங்கமும், கண்ணப்பர் சிவலிங்கத்திற்குத் தமது கண்ணைப் பொருத்துதல், மகிஷா சூரமர்த்தனி, வனதுர்க்கை, விநாயகர் முதலானவையாகும், கருடாழ்வார் மண்டபத்தூணிலே பால தண்டாயுதபாணி (முருகன்) சிற்பக் கலையழகைக் காணலாம்.

'பார்ப்பனகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்பாரு மின்றி வெறிகொண்டு திரிவன
மேய்ப்பாரும் கொண்டு வெறியு மடங்கினால்
பார்ப்பான் பசுவைந்தும் பாலாய்ச் சொரியுமே'

என்ற திருமூலர் நினைவுறுத்துவது போலப் பசு லிங்கத்தின் மேல் பால் சொரியும் காட்சியைச் சித்திரிக்கிறது ஒரு சிற்பம். இங்ஙனம் இங்குள்ள சிற்பங்களைக் கண்டு அதன் சமய நுட்பத்தை அறிந்து இறைவனாகிய ஸ்ரீ பரவாசுதேவரை வழிபட்டால், பரமபதம் கிட்டும், இஃது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை.

## கோயிலின் பராமரிப்பு

இந்தப் புராதனக்கோயில் போதிய பராமரிப்பின்றி, வசதிகளின்றி, பழுதாகிச் சிதைவுற்றுக் காணப்படுகிறது. துவஜஸ்தம்பம் மிகவும் பழுதடைந்துள்ளது. கோயில் தளம் சிதைந்துள்ளது. வடக்குச் சுற்றுச் சுவர் முழுவதுமாக சிதைந்து விழுந்து கிடப்பது மிகவும் வேதனையைத் தருகிறது. இந்தக் கோவிலின் குடமுழுக்கு நடந்து பலப்பல ஆண்டுகள் ஆகிவிட்டன, என்பதைக் கேட்டு துடிதுடிக்காத பக்தர்கள் இருக்க முடியாது. எப்போது,

எந்தப் புண்ணியவான் இந்தக் கைங்கரியத்தைச் செய்து கோயில் புத்துயிர்ப்பெறச் செய்யப் போகிறானோ என்ற ஏக்கமும், எதிர் பார்ப்பும் பக்தர்கள் மனதில் பாரமாய் இருப்பதில் ஆச்சரியமில்லை. இதனை எழுதும் காலத்தில் திருப்பணிக்கு உரிய முயற்சிகள் நடைபெறுவதை அறிந்து மகிழ்ச்சி பெறுவோம். விரைவில் திருப்பணி நிறைவுறுமாக.

இன்று நம் நாடும் மக்களும் உள்ள பரிதாப நிலைக்கு, நாம் நமது புராதனச் செல்வங்களான திருக்கோயில்களைக் கவனியாமல், இறைவழி பாட்டையும் அருட்செல்வத்தையும் நினையாமல் பொருட்செல்வத்திலேயே நாட்டம் கொண்டிருப்பதும் ஒரு காரணமாகும். இனியாவது, நமது முன்னோர்கள் விட்டுச் சென்றுள்ள அருட்செல்வங்களும், கலைக்கூடங்களுமான இத்திருக்கோயில்களைச் சரிவரப் பராமரிப்பதையும், காலா காலத்தில் செய்யவேண்டிய பூஜைகளையும், விழாக்களையும் செய்வதையும் கடமையாகக் கொள்வோமாக! கோயில்களைப் பராமரிக்க நம்மாள் இயன்ற பணிகளைச் செய்வோமாக! இறையருளைப் பெற்று இனிதே வாழ்வோமாக!



# பழைய தருமபுரிக் கோயில்கள்

வரலாறு, நாகரிகம், கலாச்சாரம், கலை ஆகியவை பரிணமித்து வளர்ந்தது ஆற்றங்கரையிலேதான். சிற்றாறுகளும், ஓடைகளும் நிறைந்த பகுதிகளில் பெரிய ஏரிகளைக் கட்டி நீரைத்தேக்கிப் பாசனத்திற்குப் பயன் படுத்தினர் நமது முன்னோர். ஏரிகளின் கீழ்ப்பகுதியில் விளைச்சல் நிலங்கள். அவற்றை அடுத்து மக்கள் வாழும் குடியிருப்புகள்-கிராமங்கள் ஊர்கள் அமைந்திருந்தன. இதுபோலவே அன்றைய தகடூர்-இன்றைய பழைய தருமபுரி சனத்குமார நதி, மண்டியாறு (பாண்டியாறு) கல்லாறு போன்ற சிற்றாறுகள் உள்ள ஊராயினும், ஊரைச் சுற்றி அன்னசாகர ஏரி, சோகத்தூர் ஏரி, இராமக்கா ஏரி, பிடமனேரி, இலளிக ஏரி, அதிகமான் கோட்டை ஏரி போன்ற ஏரிகளாலும் சூழப்பட்டிருந்தது. இத்தகைய ரம்மியமான சூழலில், இராமக்கா ஏரியை அடுத்து வடபகுதியில் ஹளே தருமபுரி எனும் பழைய தருமபுரி அமைந்துள்ளது.

## கோயிலை மையமாகக் கொண்ட ஊர் :

பழைய காலத்தில் ஊரின் நடுவே மையமாகப் பெருமாள் கோயிலும், 'ஈசானிய' மூலையில் சிவன் கோயிலும் மற்ற திசைகளில் தேவதைகள் கோயிலும் அமைக்கப்படுவது மரபு. அவ்வாறே ஹளே தருமபுரியின் மையமாக அமைந்திருப்பது நரசிம்ம சுவாமி ஆலயமாகும்.

தொன்மையான லஷ்மி நரசிம்ம சுவாமி ஆலயத்தை அடுத்து, தெற்கே ஒரு அம்மன் கோயில் உள்ளது. இது இன்று திரௌபதி அம்மன் - பஞ்சபாண்டவர் ஆலயமாக உள்ளது. கிழக்கு நோக்கி அமைந்துள்ள இக் கோயில்களின் எதிரே அகன்ற மைதானம் இருக்கிறது. அம்மன் கோயிலின் எதிரே மிகப்பழைய அரசமரம், சுற்றிலும் பெரிய மேடை, அதனடியில் நாகப்பிரதிஷ்டைகள் உள்ளன. நரசிம்ம சுவாமி ஆலயத்தின் எதிரே உயர்ந்த வேலைப்பாடுடைய தீபஸ்தம்பம் (கல்தூண்) ஒன்றும் உள்ளது. ஒரு சிறிய கோயில் குளம்-அதனை அணைத்தவாறு மண்டியாறு ஓடுகிறது. இராமக்கா ஏரியிலிருந்து ஓடும் இச் சிற்றாறு சனத்குமார நதியுடன் இணைந்து பெண்ணையாற்றில் கலக்கிறது.

## நரசிம்ம சுவாமி திருக்கோயில் :

கர்நாடக மாநிலத்தில் நரசிம்ம சுவாமி, ஆஞ்சநேயர் பெரிதும் போற்றப் படும் தெய்வங்கள். அவர்களுக்கு மிக அதிகமான கோயில்கள் அங்குள்ளன. பூகோளம் மற்றும் கலாச்சார ரீதியில் அண்டையில் இருப்பதால், தருமபுரி மாவட்டத்திலும் நரசிம்ம சுவாமி மற்றும் ஆஞ்சநேயர் ஆலயங்கள் மிகுதி யாக உள்ளன. பென்னாகரம், இண்டூர், கிருஷ்ணகிரி, மொரப்பூர் ஆகிய இடங்களுக்கு அருகில் உள்ள நரசிம்ம சுவாமி கோயில் இன்றும் வழிபாட்டிற்குப் பக்தர்கள் மிகுதியாகச் செல்லும் தலங்களாகும்.

பழைய தருமபுரி நரசிம்ம சுவாமி மூலஸ்தானத்தில் சாந்த நரசிம்மசுவாமி ஸ்ரீ தேவி, பூதேவியுடன் உயர்ந்த மேடையில் நின்ற திருக்கோலத்தில் அருள் பாலிக்கின்றார். எதிரே தாழ்வான, பலதூண்களைக் கொண்ட

ஒரு நீண்ட மகாமண்டபம், சிற்ப வேலைப்பாடுகள் அதிகம் இல்லாத பெரிய மண்டபம் பின்னர் சேர்க்கப் பட்டிருத்தல் வேண்டும். ஒருபக்கம் பெரியபாறை. அதிலே கம்பீரமான வீர ஆஞ்சநேயர் திருவுருவம். மறுபக்கம் பன்னிரு ஆழ்வார்களின் அழகான படிவங்கள் உள்ளன. கோயில் சுற்றுப்பிரகாரத்தில் விநாயகப் பெருமான், முருகன், நவக்கிரஹ சந்நிதிகள், இவற்றை நோக்க அருகிலேயே சிவனாலயமும் இருந்திருக்க வாய்ப்புண்டு என்று தெரிகிறது எதிரே தீபஸ்தம்பம் எனக்கோயில் விளங்குகிறது.

## கோயிலின் நிலையும் மக்கள் நிலையும்

ஒருகாலத்தில் மிகச்சிறந்த உன்னதமான நிலையில் இருந்த இந்தக் கோயில் ஆறுகால பூஜை, விழாக்கள் எனச்சிறப்புற்று விளங்கியது. மக்கள் செல்வச் செழிப்புடன் வளமாக வாழ்ந்தனர்.

காலப்போக்கில் மக்களின் எண்ணங்கள் மாறின, கோயில்கள் போற்று வாரின்றிப் பொலிவிழந்தன, அழிக்கப்பட்டன. ஊரும் குறுகிக் குக்கிராம மாயிற்று.

இன்றைய நரசிம்மசுவாமி திருக்கோயில் இருக்கும் நிலையைப் பார்த்தால் கண்ணீர் வடிக்காமல் இருக்கமுடியாது. எங்கும் புழுதி-வௌவால் - இருட்டு - ஒருவிதநெடி. மூலவருக்கு ஒரு தீபம் ஏற்றிவைக்கக் கூட வசதியில்லை. இந்த அவல நிலை மாறினால் தான் நல்லது. அப்பொழுது மக்களும் மகிழ்ச்சியாக, ஒளியொடு இருக்க முடியும்.

## ஒரு வேண்டுகோள்

இத்திருக்கோயில் இராஜகோபுரத் திருப்பணி தொடங்கப் பெற்று முற்றுப்பெறாமல் நிற்கிறது. அறநிலையத்துறையினர் இனியும் காலந் தாழ்த்தாது திருப்பணியை விரைந்து முற்று விக்கவேண்டும்.

பழைய தருமபுரி மக்கள் கோயில் வாழ்ந்தால்- வளர்ந்தால்- மக்கள் வாழ்வர்; ஊர் செழிக்கும் என உணர்ந்து கோயிலைப் பராமரிக்க முன்வரல் வேண்டும். இத்தகைய அருள் உணர்வு செழித்து, விரைவிலேயே நரசிம்மசுவாமி திருக்கோயில் குடமுழுக்கு நிகழ-திருவிழா-நாள் வழிபாடு-

சிறப்பு வழிபாடு நடைபெற மக்கள் பாடுபட வேண்டும். அரசும் ஆவன செய்யவேண்டும். இதனால் இவ்வூர் வளம் பெற்று, ஊர்மக்கள் செல்வச் செழிப்போடு வாழ வழிதோன்றும்.

## திரௌபதி அம்மன் திருக்கோயில்

நரசிம்ம சுவாமி ஆலயத்தை அடுத்துத் தெற்கே உள்ளது திரௌபதி அம்மன் ஆலயம். இது சுமார் 200 ஆண்டுகட்கு முற்பட்டதாக கூடும். கோட்டைக் களஞ்சியம் போலக் காரையினால் கட்டப்பட்ட கருவறையும், விசாலமான பெரிய மகாமண்டபமும் உள்ளன. இங்கு அன்னை திரௌபதி அம்மன் சிறிய படிவத்தில் இருந்தாலும் பெருங்கருணையொடு அருள் பாலிக்கிறாள். மிக அழகான சுதைவடிவ உற்சவ மூர்த்திகளும் கருவறையில் எழுந்தருளியுள்ளனர். பாரதக்கதை பெரிய விழாவாக இங்கு நடைபெறுவதுண்டு என்று கூறுகின்றார்கள். இந்தப் பழைமையான கிராமியக் கலையையும், கலைஞர்களையும் பாதுகாக்க வேண்டும், போற்ற வேண்டும், ஊக்குவிக்க வேண்டும். இது ஊர்ப்பொறுப்பு, மக்கள் பொறுப்பு ஆகும்.

பழைய தருமபுரியில் உள்ள மண்டபங்கள் வழிபாடு மாறிய மடங்கள் கோவில் கூட இல்லாது உள்ள இலிங்கம் எனப் பல பண்பாட்டுத் தடையங்கள் நிறைய உள்ளன. இவையும் பாதுகாக்கவிட்டால் மறையக்கூடும்.

எனவே, இனியேனும் ஊர்ப்பெரியோர்களும், இளைஞர்களும் நமது முன்னோர் நமக்கு வைத்துச் சென்றுள்ள நமது பண்பாட்டுச் சின்னங்களைப் போற்றி பாதுகாத்து வருவார்களாக! அது நமக்கும் நமது வருங் காலத் தலைமுறையினர்க்கும் நல்லது.





பழைய தருமபுரி

(மேலே) பூதேவி ஸ்ரீதேவி சமேத நரசிம்மப் பெருமாள்

(கீழே) மாரியம்மன் மற்றும் பஞ்ச பாண்டவர்கள்

39



40



41



42



# தருமபுரிக் கோட்டைக் கோயில் சிற்ப ராமாயணம்

தருமபுரிக் கோட்டைக் கோயில் அருள்மிகு காமாட்சி அம்மன் அதிஷ்டானத்தைச் சுற்றி இராமகதை சிற்பங்களாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. இது புத்திர காமேஷ்டியாகம் முதல் அசுவ மேதயாகம் வரையான கதைப் பகுதியை உடையது.

இந்த இராமாயணச் சிற்பங்களைப் பற்றித் தனது 'தருமபுரி வரலாறும் பிரகாலாத சரித்திரமும்' என்ற நூலில் திரு. கிருஷ்ணமூர்த்தி, எம்.ஏ., அவர்கள் விளக்கியுள்ளார்கள். அதனைத்தழுவித் தருமபுரி அரசு கலைக் கல்லூரி விலங்கியல் துறைப் பேராசிரியர் டாக்டர். எம். ராஜேந்தின், எம்.ஏ. அவர்கள் இந்நூலை எழுதியுள்ளார்கள். இந்த இராமகாதையாகிய பொற் சரட்டில், பாசுரப்படி இராமயணத் தொடர்கள் மணிகளாக ஒளிர்கின்றன, இந்த நூலில் உள்ள புகைப்படங்களையும் நூலாசிரியரே எடுத்துள்ளார். இராமகாதயைப் புரிந்து கொள்ளும் முயற்சி மாறுபட்டமையால், கதையைத் தழுவிய படங்களின் வரிசை எண் பிறழ்ந்துள்ளது. எனவே, கதையில் அடைப்புக் குறிக்களுக்குள் புகைப்பட வரிசை எண் குறிக்கப் பட்டுள்ளது. பயில்வோர் சிரமம் கருதாது படங்களோடு ஒத்து நோக்கிப் பயில்வார்களாக !

இச் சிற்பங்கள் கலைஞனின் கலைத்திறத்தையும் கற்பனை வளத்தையும் உணர்த்தும் சிறந்த சான்றுகளாகும். ஒவ்வொரு சதுரத்தையும் தனித் தனியே அச்சிட்டு, விளக்கமாக எழுதினால், இதுவே ஒரு பெரிய நூலாகும் உங்கள் ஆர்வம் அத்தகைய பணியை நாங்கள் மேற்கொள்ளத்தூண்டும் என நம்புகிறேன்.

இந்தச் சிற்பங்கள் தரைமட்டத்திலிருந்து சுமார் ஒரு அடி உயரத்தில் உள்ளன. அமர்ந்து பார்க்கும் படியே அமைக்கப்பட்டுள்ளன. முழங்காலிட்டுச் அமர்ந்திருக்கும் யானைகள் காட்டும் குறிப்பும் இதுவே போலும். இந்த யானைகள், ராமகாதை அமைக்கப்பட்டுள்ள கற்பலகையின் கீழ் அஸ்தி வாரம் ஏதுமில்லை. ஒரே பலகைக்கல் மட்டுமே உள்ளது.

அதிஷ்டானத்தில் அடித்தளத்தில் இராமகாதை சித்தரிக்கப்பட்டாலும் மேற் பகுதியில் சிற்பங்கள் மிகக் குறைவாகவே உள்ளன. அதிஷ்டானத்தில் கருங்கற்பகுதி ஒரு காலத்திலும் அதன் மேற்புறப் பகுதி பிறிதொரு காலத்திலும் உருவாக்கப்பட்டிருத்தல் வேண்டும். அம்மனுக்குத் தனிக் கோயில் அமைக்கும் வழக்கம் காலத்தால் பிற்பட்டது. எனவே அம்மன் கோயிலுக்கு என அடித்தளம் உருவாக்கப்படவில்லை என்றும் பிறிதொரு காரணத்திற்காக உருவாக்கப்பட்ட அடித்தளத்தின் மேல், பின்னாளில் அம்மன் கோயில் அமைக்கப்பட்டது எனவும் கொள்வது சரியாகும்.

ஆயின், அடித்தளம் எதற்காகத் திட்டமிடப்பட்டது என்பதற்கான விளக்கம் ஏதும் எங்கும் கிடைக்கவில்லை. இரண்டு யாகங்களைக் சித்தரிப்பதால், அது ஏதேனும் யாகத்தொடு தொடர்புடையதாக இருக் கக்கூடும். அடித்தளக் கட்டுமானப்பணி மிகப்பெரிய உருவ அமைப்பிற்குத் திட்டமிடப்படவில்லை என்ற கருத்தையே தந்து நிற்கிறது.

ஸ்ரீ சக்ர மாகிய தேரின் அமைப்பில், அடித்தளம் அமைக்கப் பட்டிருத்தல் கூடும். இன்றைய மேல் தளப்பரப்பின் அமைப்பினைக் கொண்டு கிழ்த்தளத் தைக் கருதினால் கீழே பெரியகூடம் இருக்கும் என்ற யூகம் மிகச் சரியா னதொன்றாகும். அத்தகைய ஒருகூடத்தை இன்று உருவாக்கச் சுமார் 3 லட்ச ரூபாய் ஆகக்கூடும். சுமார் மூன்றாயிர ரூபாய் செலவு செய்து அடித்தளத்தில் பெரிய கூடம் இருப்பதை உறுதி செய்ய முடியும். அவ்வாறு கூடமொன்று இருப்பதை உறுதிசெய்தால், சில ஆயிர ரூபாய் களில் ஒருபெரிய கூடத்தைப் பெற வாய்ப்புண்டு. இந்து அறநிலையத் துறையினரும், பொதுமக்களும் இதில் ஆர்வம் காட்டவேண்டுகிறேன். அரசு இந்த முயற்சிக்கு உதவியும் ஒத்துழைப்பும் நல்க வேண்டுகின்றேன்.

முழு அளவினதாகிய சிற்ப ராமாயண நூலும், அருள்மிகு காமாட்சி அம்மன் நிலவறைக்கூடமும் விரைவில் உருவாக அன்னை அருள்புரிவாளாக!

இந்த நூலை எழுதிய பேராசிரியர் Dr. எம். ராஜேந்திரன், M.A.,Ph.D., அவர்களுக்கு அன்னை எந்நாளும் இன்னருள் புரியவேண்டுகின்றேன்.

இந்த நூலை அச்சிடப் பொருளுதவி நல்கிய சேலம் ராமகிருஷ்ணா மேக்னசைட் சுரங்க உரிமையாளர் திரு. K. M. காசிவிஸ்வநாதன் அவர்களின் பண்பாட்டு நேயத்திற்கும் கொடைநலத்திற்கும் இறை அன்பிற்கும் யான் என்றும் கடப்பாடுடையேன். அன்னை அவர்க்கும் அவர்தம் குடும்பத்தார்க்கும் எல்லா வளமும் அருள அன்னையைப் போற்றி வழிபடுகின்றேன்.

இந்தப் பணியில் எங்களுக்கு ஆர்வமூட்டி உதவிய வாமதேவ சிவம் சண்முகசுந்தர சிவாச்சாரியார் அவர்கட்கும் பிற நன்கொடையாளர்க்கும் என் நன்றி என்றும் உரிய. இந்நூலின் வழிக்கிடைக்கும் சிறுதொகை அறக்கட்டளையின் அறப்பணிகளுக்குப் பெருந்துணை புரியுமாதலின், அன்பர்கள் பேரளவில் இந்நூலை வாங்கி எங்கள் முயற்சி மேலும், மேலும் தொடரத் துணைபுரிய வேண்டுகின்றோம்.

நன்றி, வணக்கம்.

அன்பன்,
தி. கோவிந்தன்.



டாக்டர் எம். ராஜேந்திரன், M.A.,Ph.D.,
விலங்கியல் துறைத் தலைவர்,
அரசு கலைக் கல்லூரி, தருமபுரி.

# தருமபுரிக் கோட்டைக் கோயில் சிற்ப ராமாயணம்

## இராமாயணச் சிற்பங்கள் :

காமாட்சியம்மன் கோயிலின் பல அடுக்கு அதிஷ்டானத்தைச் சுற்றி அடிப்பகுதியில் பூமி மட்டத்தில் இராமாயணக் காட்சிகள் மிக அழகான பேனல்களாகச் சதுரங்களில் செதுக்கப்பட்டிருக்கின்றன (படங்கள் 39, 40). உயரமான அதிஷ்டானமும் (படம் 40), கோயிலுமே 18 மூலைகளைக் கொண்டதாகும். ஒவ்வொரு மூலையிலும் அலங்கரிக்கப்பட்ட முழங்காலிட்டு அமர்ந்துள்ள யானை (படங்கள் 41, 42) கொண்டதாகவும் அமைக்கப் பட்டுள்ளன. அன்னை காமாட்சியின் கோயிலே 18 யானைகளால் தாங்கப்படும் 18 கோணங்களுடைய ஒரு தெய்வீகச் சக்கர அமைப்பில் கட்டப்பட்டிருக்கிறது. இந்த யானைகளுக்கிடையே அமைந்துள்ள ராமாயணச் சிற்பங்கள் அன்றைய நாடக வழக்காற்றுப் பாணியிலே அமைக்கப்பட்டுள்ளன.

இராம காதை கோயிலின் மேற்குப்புறம், கருவறையின் பின்னே, (படம் 39) உள்ள இரண்டாவது யானையின் பக்கம் ஆரம்பமாகிறது. வலப்புறம் அப்பிரதட்சணமாகச் சென்று தென்மேற்கு மூலையைச் சுற்றித் தெற்கே சென்று, கோயிலின் முன்புறம் (கிழக்கு) வந்து, வடக்கே திரும்பி மீண்டும் மேற்கே சென்று, ஆரம்பித்த இடத்திலேயே முடிவுறுகிறது. சிற்பங்களின் வரிசையில் இல்லாமல் நிழற்படங்கள் வரிசை மாறியுள்ளன.

## இராமனின் அவதாரம் :

அயோத்தி மன்னன் தசரதனுக்கு, கோசலை, கையேயி, சுமித்திரை ஆகிய மூன்று தேவியருக்கும் நீண்ட காலமாக மகப்பேறு இல்லை. வயதாகிவிட்ட தசரதன் குலகுரு வசிஷ்டரின் ஆலோசனைப்படி புத்திர காமேஷ்டி யாகம் செய்கிறான். மாமுனிவர் ரிஷிய சிருங்கர் யாகத்தை நடத்த, யாக குண்டத்திலிருந்து யக்ஷன் தோன்றி அமுத கலத்தைத் தருகிறான். மன்னன் தசரதன் அரியாசனத்தில் அமர்ந்தவாறு, மூன்று தேவியருக்கும் அமுதத்தைப் பகிர்ந்து தர, அவர்கள் உண்கின்றனர். (படம் 1, 2) மூவரும் கர்பமாகின்றனர் (படம் 3). மூவருக்கும் குழந்தைகள் பிறக்கின்றன. தேவியர் படுத்தபடி தமது குழந்தைகளுக்குப் பாலூட்டி மகிழ்கின்றனர். பணிப்பெண்கள் கண்ணுங் கருத்துமாகக் குழந்தைகளையும், தேவியரையும் பராமரிக்கின்றனர். கோசலை தன் குலமதலையாய் இராமன் அவதரித்தான் (படம் 4). பரதன் கையேயியின் மகனாவும் (படம் 4), இரட்டைக் குழந்தைகள் லட்சுமணனும், சத்ருக்கனனும் சுமித்திரையின் செல்வங்களாகவும் (படம் 5) தோன்றினர்.

## குருகுல வாசம் :

மகரிஷி வசிஷ்டரிடம் சிறுவர்கள் இராமனும் லட்சுமணனும் கல்வி பயில்கின்றனர். பணிமாது பரதனையும், சத்ருக்கனனையும் குருகுலத்துக்கு அழைத்து வருகிறாள் (படம் 5). ஆசிரியர் இராமனை அருகே அணைத்தபடி வில்வித்தை கற்றுத்தர, உதவியாளர் லட்சுமணனுக்கு வில்வித்தை பயிற்றுவிக்கிறார். அருகே வில்லேந்திய மற்றொரு உதவியாளர் நிற்கிறார் (படம் 6).

## விசுவாமித்திரர் விஜயம் :

இராஜரிஷி விசுவாமித்திரர் சடாமுடியுடன், ஒரு குடையை ஏந்தியபடி தசரதன் அவைக்கு வருகிறார். இளவல் பரதனுடன் அமர்ந்திருக்கும் அரசனிடம் தான் செய்யும் வேள்விக்கு அரக்கர்கள் இடையூறு செய்கின்றனர். அவர்களை அழித்து யாகத்தைக் காக்க இராமனை அனுப்பி வைப்பாயாக என்று வேண்டுகிறார் (படம் 7). ''சிறுவனாயிற்றே, நானே வருகிறேனே'' எனக்கூறும் மன்னனைச் சமாதானப்படுத்தி'' அனுப்பி வை மன்னா'' என வசிஷ்டர் கூறுகிறார். என்றுமே இணைபிரியாத இராமலட்சுமணர் வில்லேந்தி முனிவருடன் நிற்கின்றனர் (படம் 7). பணிப்பெண் அழைத்து வந்த இளவல்கள் பரத சத்ருக்கனனுடன் கொஞ்சிவிட்டுத் தசரதன் இராமலட்சுமணர்களை அணைத்து அறிவுரைகூறி விடை தருகிறான்.

## தாடகை வதம் :

வில்லேந்திய இராமனும் லட்சுமணனும் விசுவாமித்திரர் பின் செல்கின்றனர் (படம் 10, 11). வழியில் அரக்கி தாடகை சூலம் ஏந்திப் போரிடுகிறாள்; இராமன் அம்புபட்டு, சாபம் நீங்கி அழகிய பெண்ணாக மாறி, மகிழ்ச்சியில் ஆடுகிறாள் (படம் 9). முனிபுங்கவர் நீர்வார்த்து இராமனுக்கு மந்திர உபதேசம் செய்ய, லட்சுமணன் கை கட்டி நிற்கிறான் (படம் 9, 10). இராமனும் லட்சுமணனும் வேள்வி காக்கின்றனர் (படம் 8). வேள்வி முடிந்து, மற்றொரு முனிவர் உடன் வர, விசுவாமித்திரர் புறப்படுகிறார்.

## சீதா கல்யாணம் :

முனிவர்களும் இராமலட்சுமணனும் மிதிலை நகர் அடைகின்றனர். அங்கு இரு பெண்கள் வாத்தியம் முழங்க, இரு பெண்கள் பரிசில்களைச் சுமந்துவர, (கோயில் போல் அமைந்துள்ள) அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். இக்கோலாகலக் காட்சியை இளவரசி சீதை கவரி ஏந்திய இருபணிமாதரிடையே அரண்மனை உப்பரிகையில் அமர்ந்த வண்ணம் காண்கிறாள் (படம் 12). சிவதனுசை முறித்த இராமனுக்குத் தன் மகள் சீதையைத் தாரை வார்த்து ஜனகரும் அவரது பட்டத்தரசியும்

மணமுடிக்கின்றனர். கல்யாண மண்டபத்தில் இளவல்கள் பரத சத்ருக்கனரும் வந்துள்ளனர் (படம் 36). அனைவரையும் தசரதனும் தேவியரும் வாழ்த்துகின்றனர். தசரதன் இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்து விட்டுத்தான் ஓய்வு எடுத்துக் கொள்ளப்போவதாகக் கூறுகிறார். அருகே அரியாசனத்தில் அன்னை கோசலை இதைக் கேட்டு மகிழ்ந்தவாறு அமர்ந்திருக்கிறாள் (படம் 14).

## கையேயி வரம் பெறுதல் :

ராமனும் சீதையும் லட்சுமணனும் அன்னையர் அன்பில் திளைத்து வாழ்கின்றனர். தாயர் அரியாசனத்தில் அமர்ந்திருக்கின்றனர். கூன் முதுகுடைய கூனி கையேயியிடம் ''இராமன் அரியணை ஏறுவதா? உன் மகன் பரதன் அல்லவா அதற்குகந்தவன். இன்னும் வாளாவிருக்கிறாயே'' எனக்கூறிவஞ்சனை புரிகிறாள் (படம் 14). அதைக்கேட்டு மனம்மாறிய கையேயி தசரதனிடம் சென்று கைகட்டி நின்று பணிவுடன் வரம் கேட்கிறாள். கையேயி மஞ்சத்தில் அமர்ந்திருக்க ''குலக்குமரா! காடுறையப்போ! என ஆணையிட்ட மன்னன், சோகத்தில் தலையில் கைவைத்த வண்ணம் அமர்ந்து விடுகிறான் (படம் 15). இராமன் இனிய முகத்தோடு தந்தையின் ஆணையை ஏற்று நிற்க, லட்சுமணன் சோகமாக நிற்க, சீதை கையேயியைக் கைக்கூப்பி வணங்குகிறாள் (படம் 15).

## குகன் சேவை :

சீதையும், இலக்குவனும் தொடர இராமன் காட்டிற்குச் செல்கிறான். வழியில் வேடர்குலத் தோன்றல் குகன் இவர்களை இருகரம் கூப்பி வரவேற்று உபசரிக்கிறான் (படம் 32). 'பக்தியுடை குகன் கடத்தக் கங்கை தன்னைக் கடந்து, வனம் போய்ப்புக்குச் சித்திரக்கூடம் அடைந்து' பர்ணசாலை அமைத்து மூவரும் வாழ்கின்றனர் (படம் 18).

## சூர்ப்பனகை மானபங்கம் - காதூஷவதம் :

'புலர்ந்தெழுந்த காமத்தால் தானும் சீதைக்கு நேராவனென்ற பொன்னிறங் கொண்ட சுடுசினத்த சூர்ப்பனகி கொடு மூக்கும் காதிரண்டும் கூரார்ந்த வாளால் ஈராவிடுத்தனன்' * (படம் 20) இலக்குவன். அதைக்

கண்ட அரக்கர்கள் கரன், தூஷன் போரிட, இராமன் அம்பு அவர்களை வதைக்க, இருவரும் தலைக்குப்புற விழுந்து மடிகின்றனர். இதைக்கண்ட சூர்ப்பனகை 'கதறித் தலையில் அங்கை வைத்து மலை இலங்கை ஓடிப்புகுந்தனள்'.

## இராவணன் ஆலோசனை :

சூர்ப்பனகைக்கு ஏற்பட்ட அவமானம் பற்றி இலங்கேஸ்வரன் மனைவி மண்டோதரி, தம்பிகள் கும்பகர்ணன், விபீடனன் ஆகியோருடன் கலந்தாலோசிக்கிறான். அருகே அவனது வாகனமான அன்னப்பறவை பூட்டிய ரதம் நிற்கிறது. இராவணனுக்கு இங்கே பத்துத் தலைகள் இல்லை. விபீடனன் குறுந்தாடியுடன் காணப்படுகிறான் (படம் 21).

## மாயமான் மாரீசன் :

இலங்கேஸ்வரன் திட்டப்படி, அரக்கன் மாரீசன் பொன் நிற மான் வடிவில் சீதையின் அருகே உலவ, சீதை அந்த மான் வேண்டும் எனக் கேட்கிறாள். இராமன் மானைத் துரத்திக் கொண்டு வில்லேந்தி ஓட, அதைப் பிடிக்க முடியாமல் அம்பு எய்ய, மாய மாரீசன் தலைகுப்புற விழுந்து மடிகிறான். இராம லட்சுமணர் பார்த்திருக்க இரண்டு அரக்கர்கள் இராவணனிடம் செய்தியைக் கூறப் பயந்து ஓடுகின்றனர் (படம் 22). இராம லட்சுமணர்கள் சீதையைத் தேடிக் கொண்டு செல்கின்றனர்.

## சுக்ரீவனின் நட்பு :

இராமர், இலக்குவன் இருவரும் கிஷ்கிந்தா வனம் வந்து சேர்கின்றனர். அங்கு வானரர் தலைமகன் சுக்ரீவனைச் சந்திக்கின்றனர். அண்ணன் வாலி செய்யும் அநியாயங்களைச் சுக்ரீவன் கூறக்கேட்ட இராமன் 'மராமரம் ஏழு எய்து, உருத்தெழ வாலி மார்பில் ஒரு கணை உருவவோட்டி'* வாலியை வதைத்தனன் (படம் 23). அக்கினி சாட்சியாக இராமனும் சுக்ரீவனும் நட்புக் கொள்கின்றனர் (படம் 23). இராமன் 'கருத்துடைத் தம்பிக்கு இன்பக்கதிர்முடி அரசளித்து' * சுக்ரீவனைக் கிஷ்கிந்தை அரசனாக்கினான். வல்லமை மிக்க மாருதி மன்னனின் மதி மந்திரியானான். சீதையைத் தேடுவதில் வானரசேனை உதவுவது உறுதியானது.

## அனுமனின் சாகசங்கள் :

வானர சேனை சுற்றியிருக்க, சீதையைத் தேடிச் செல்லும் அனுமனிடம், இராமன் தனது கணையாழியைத் தருகிறான் (படம் 24). அனுமன் தென் திசையில் இலங்கையை நோக்கிச் செல்கிறான். அனுமன் கடலைத் தாவிச் செல்கையில், எதிர்த்த மூன்று அரக்கியரை வென்று மேலே செல்கிறான் (படம் 24). பின்னர் இலங்காபுரியின் காவல் தேவதை இலங்கினி குறுக் கிடுகிறாள். அனுமன் வேண்டிப் பார்த்தும் இலங்கினி வழிவிடாததால், அவளையும் அழித்து விட்டு, இலங்காபுரிக் கோட்டையின் மேல் அமர்ந்து, சீதையை எங்கே தேடுவது எனத் திட்டமிடுகிறான் (படம் 25).

'சீராருந் திறலனுமன் மா கடலைக் கடந்தேறி மும்மதிள் நீளிலங்கை புகுந்து,* வில்லும், வாளும், கதையும் ஏந்திய இராவண சேனையுடன் போர்புரிகிறான்; பலர் மடிகின்றனர், சிலர் இராவணனிடம் சேதி சொல்ல ஓடுகின்றனர் (படம் 32, 26). இராமன், லட்சுமணன், சுக்ரீவன் ஆகியோர் இலங்கை நோக்கிப் பயணமாயினர். வானர சேனை 'ராமநாமம்' எழுதிய பெருங்கற்களைக் கொண்டு வந்து தர, தேவ தச்சனாகிய மயன் அலைகடலில் பாலம் கட்டுகிறான் (படம் 26)..

## இலங்கைப் போர் :

இலங்கையை அடைந்த இராமன், லட்சுமணர், சுக்ரீவன், அனுமன் மற்றும் விபீடணன் ஆகியோர் கலந்தாலோசிக்கின்றனர். இராவணனுடைய படைகள் இராமனை எதிர்க்கின்றன. ஒரு அரக்கன் தலைகுப்புற விழுந்து மடிய, மற்றவர்கள் ஓடுகின்றனர் (படம் 27). சீதையை விடுவிக்கக் கோரி இராவணனிடம் அங்கதன் தூது செல்கிறான். அன்னம்பூட்டிய தேரில் அமர்ந்து இராவணன் மறுக்கிறான். இலங்கைப் போர் மூண்டது படம் 27).

## இந்திர சித்துவின் மாயப்போர் :

மகாத்திறமைசாலியான இந்திர சித்து மேகமண்டலத்திலிருந்த வண்ணம், அம்புமழை பொழிகிறான். வானரர் மடிந்து விழுகின்றனர். இலக்குவன் மாருதியின் தோளில் அமர்ந்தபடி மேகநாதனை எதிர்க்கிறான்

(படம் 28). இந்திர சித்து நாகாஸ்திரத்தைப் பிரயோகிக்க இலக்குவன் மூர்ச்சையாகி விழுகிறான். அனுமன் இலக்குவனைத் தாங்கிப்பிடித்துக் கொள்கிறான் (படம் 29). இளவலின் நிலை கண்டு துயரமடைந்த இராமன், சஞ்சீவி மூலிகையைக் கொணருமாறு அனுமனைப்பணிக்கிறார். கைகூப்பி வணங்கி விடைபெறும் ஆஞ்சயேன், விரைந்து சென்று சஞ்சீவி மலையையே தலைமீது தூக்கி வருகிறான். மூர்ச்சை தெளிந்த இலக்குவன் எழ, இராம லட்சுமணர்கள் அடுத்த போர்த் திட்டத்தை ஆலோசிக்கின்றனர் (படம் 29).

## கும்பகருண வதம்

மேருவை ஒத்த உருவமும் வலிமையும் உடைய கும்பகருணன் வாளும் கேடயமும் ஏந்திப் போர்ப் புரிகிறான் (படம் 30). இராமனின் அம்புகள் அவன் கைகளைத் துணிக்க, அந்த மாவீரன் வேரறுந்த மரம்போல் வீழ்ந்து மடிகிறான்.

## இராவண வதம்

மாமேதையும், மாவீரனுமான இலங்கேஸ்வரன் பெருங்கதை ஏந்திப் போரிட்டுப் போரிலே தோற்றுத் தனது தலைகளையும் கைகளையும் இழந்து இறுதியில், ஒரு தலை, ஆறு கைகளுடன் பெருங்களிறு போல் சாய்ந்து கிடக்கிறான் (படம் 17). இராம லட்சுமணர்களும் கதையேந்தி நிற்கின்றனர். அனுமன், விபீடணர் அருகில் நிற்கின்றனர். இராவணப் படைகள் சரணடைகின்றன. (படம் 17).

## விபீடணன் பட்டாபிஷேகம்

இராம, இலக்குமண, சீதையிரிடம் விபீடணன் பணிந்து வணங்கி அரசு வேண்டுகிறான். இலங்கை வேந்தனாக விபீடணனுக்குப் பட்டாபிஷேகம் நடைபெறுகிறது. தனது மனைவியுடன் அரியாசனத்தில் விபீடணன் அமர்ந்திருக்கிறான். எங்கும் விழாக்கோலம் (படம் 13). சுக்ரீவன், அனுமன், இராமன், லட்சுமணன், சீதை ஆகியோர் விடை பெற்று அயோத்தி மாநகருக்குத் திரும்புகின்றனர் (படம் 13).

## இராமர் பட்டாபிஷேகம்

இராம பிரான் சீதாராமனாக முடிசூடி அவையில் வீற்றிருக்க இசை, நாட்டியக் கலை நிகழ்ச்சிகள் கோலாகலமாக நடக்கின்றன (படம் 33,34,16.) ஆங்காங்கே மக்கள் கூடிப்பேசுகின்றனர் ஒரு குடம் ஏந்திய பெண்ணும், துணியைப் பிடித்த பெண்ணும் பேசுகின்றனர் (படம் 19). அரியாசனத்தில் அமர்ந்த இராமன் இதைப் பற்றிக் கேள்விப்படுகிறார். மனமுடைந்து வேதனைப்படுகிறார் (படம் 19). வண்ணானையும், வண்ணாத்தியையும் அழைத்து விசாரிக்கிறார். அருகே சீதாபிராட்டியும் நிற்கிறார் (படம் 37). மாமன்னன் இராமன் ஒரு முடிவு எடுக்கிறான்.

இராமன் சீதையை அணைத்த வண்ணம், இலக்குவனிடம் சீதையைக் கானகத்திலே விட்டு வருமாறு பணிக்கிறார்.

அயோத்தியில் மன்னர் அஸ்வமேதயாகம் செய்கிறார். மக்கள் கோலாகலத்துடன் ஆடல் பாடல் நிகழ்ச்சிகள் நடத்துகின்றனர். சீதையின் தங்கப்பிரதிமையை அருகில் வைத்து இராமன் யாகம் செய்கிறான். வில்லேந்திய அழகிய சிறுவர்கள் இருவர்- லவ குசர் யாகத்திற்கு வருகின்றனர் (படம் 35).

சிற்ப இராமகாதை முற்றுப்பெற்றது.

# ஸ்ரீ வித்யையும் ஸ்ரீ சக்கரமும்

டாக்டர். S. சுப்பராயன், B.Sc., B.L. L.L.D.,
தருமபுரி.

ஸ்ரீ வித்யை என்னும் வழிபாடு, ஹிந்து மதத்தின் முதலாய ஆறு தெய்வங்களை வழிபடும் ஷண் மதங்களில் ஒரு தெய்வமான அம்பாளைப் போற்றும் மதமாக — அதாவது சக்தி வழிபாடாகப் பொதுவில் கருதப் படுகிறது. ஆயினும் ஆழ்ந்த சக்தி உபாஸகர்கள் இதைக் குணம், குறி கடந்த பரம்பொருளின் உபாஸனையாகவேதான் கருதுகிறார்கள்.

இந்த வழிபாட்டிற்கு மிகவும் முக்கியமான ஒரு இடுகுறியாக ஸ்ரீ சக்கரம் முக்கியத்துவம் பெறுகிறது. ஸ்ரீ சக்கரம் என்றால் என்ன? அதன் அமைப்பு யாது? அதில் குடி கொண்டுள்ள தெய்வங்கள் யாவர்? வழிபாட்டு முறை என்ன? என்ற வினாக்களையெல்லாம் தந்திர சாஸ்திரம் ஆழ்ந்து ஆராய்கிறது.

தந்திர சாஸ்திரம் என்பது மந்திரசாஸ்திரத்திற்கு மற்றொரு பெயர் ஆகும். ஹிந்து மதத்தில் சைவம், வைணவம், சாக்தம் என்னும் மூன்று முக்கியமான பிரிவுகள் இருப்பதை யாவரும் அறிவர். இவை ஒவ்வொன்றின் வழிபாட்டு முறையை விளக்கமாகவும், வழிபாடு செய்வோர் அநுஷ்டிக்க வேண்டிய முறைகளைக் கூறுவதற்காகவும் ஏற்பட்டவையே தந்திர சாஸ்திரங்கள். சாக்த வழிபாட்டைப் பொறுத்த வரையில் 64 தந்திர சாஸ்திரங்கள் இருப்பதாக அறிந்தோர் கூறுவர். இந்தத் தந்திரங்களின் சாரம்சத்தை ஆராய்ந்து அவைகளின் மிக முக்கியமான விஷயங்களை எடுத்துக் கூறுவதே ஸௌந்தர்ய லகரி என்னும் நூலாகும், இது ஆசார்ய சங்கரரால் உருவாக்கப்பட்டது. இதில் ஸ்ரீ சக்ரத்தைக் குறித்து விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

ஸ்ரீ சக்கரத்தில் ஒன்றையொன்று ஊடாடிச் செல்லும் ஒன்பது முக்கோண களைக் காணலாம். இவைகளில் ஐந்து முக்கோணங்கள் கீழ்நோக்கியவை இவை சக்தி முக்கோணங்கள். இவை சக்தியின் அம்சத்தைப் பிரதிபலிப்பன மீதி நான்கும் மேல் நோக்கியவை, இவைகளுக்குச் சிவ முக்கோணம் என்று பெயர். சிவாம்சத்தைப் பிரதிபலிப்பன. இவ்வொன்பது முக்கோணங்களும் ஒன்றோடொன்று ஊடாடுவதால் ஏற்படும் கூட்டுக் கோணங்கள் 43. இந்த முக்கோணங்களின் மையத்தில் உள்ள இடத்திற்குப் பிந்து ஸ்தானம் அல்லது பைந்தவ ஸ்தானம் என்று பெயர் சொல்வர். இதனையும் ஒரு முக் கோணமாகவே கருதுவார்கள். ஆக மொத்தம் 44 ஸ்தானங்கள் அல்லது முக்கோணங்களைத்தான் ஆச்சார்ய ஸ்ரீ சங்கரர் ஸௌந்தர்யலகரியில் சதுஸ்ச்சத் வாரிம்சத் (44 முக்கோணங்கள்) என்று உரைப்பர். இந்த 44 முக்கோணங்களும் நான்காவது ஆவரணம் முதல் ஒன்பதாவது ஆவரணம் வரை உள்ளவை. இந்த 43 முக்கோணங்களைச் சுற்றி எட்டிதழ்ப் பத்மமும், பதினாறிதழ்ப் பத்மமும் உள்ளன. இவைகள் மூன்றாவதும் இரண்டாவதுமான ஆவரணங்கள், இப்பதினாறிதழ்ப் பத்மத்தைச் சுற்றி மூன்று வட்டங்களும் அதைச்சுற்றி மூன்று சதுரங்களும் உண்டு. இந்த மூன்று சதுரங்களே முதல் ஆவரணம். ஆகவே, ஸ்ரீ சக்கர மானது இந்த முச்சதுரமாகிய கோட்டைச் சுவர்களுக்கு உள்ளே இருக்கக்

கூடிய கமலங்கள், முக்கோணங்கள் ஆகிய ஒன்பது ஆவரணங்களைக் கொண்ட ஒரு அமைப்பு. ஆவரணம் என்ற சொல்லுகே கோட்டை என்ற பொருள் உண்டு. இதில் ஒவ்வொரு ஆவரணத்திலும் பல தேவதைகள் குடி கொண்டுள்ளனர்.

முதல் ஆவரணம் :- இதற்குத் திரைலோக்கிய மோஹனம் என்று பெயர். முதல் ஆவரணத்தில் மூன்று சதுரங்கள் உள்ளன என்று குறிப் பிட்டோம். இந்த மூன்றிலும், வெளியில் உள்ள சதுரத்திற்குப் பிரதம ரேகை (முதல் ரேகை) என்றுபெயர். இதில் குடிகொண்டுள்ள தேவதைகள் 10 ஸித்திகள். உலக வழக்கில் உள்ளவை அஷ்டமாஸித்திகளே. அவற்றுடன் ப்ராப்தி, ஸர்வகாம ஸித்தி என்ற ஸித்திகளைச் சேர்த்து ஸ்ரீ சக்கரத்தில் 10 ஸித்திகள் உள்ளன. அன்னையை வழிபடுவோர் இந்த ஸித்திகளைத் துச்சமாகக் கருதினால் தான் உள்ளே போக முடியும். நடுவில் உள்ளது மத்ய ரேகை. இங்கே குடிகொண்டுள்ளவர் 8 மாத்ரிகா தேவதைகள், மூன்றாவதான உள் ரேகையில் குடி கொண்டுள்ளவர் 10 முத்ரா சக்தி தேவதைகள். இவர்களை லலிதா ஸகஸ்ரநாமம் அம்பாளை ஆராதிக்கும் தேவதைகளாகக் குறிப்பிடும் தசமுத்ரா ஸமாராத்யா என்று கூறும். இவ்வாறு முதல் ஆவரணத்தில் 28 தேவதைகள் உள்ளனர்.

இரண்டாவது ஆவரணம் : பதினாறு இதழ்ப் பத்மம், இதற்கு ஸர்வா சாபரிபூரகம் என்றுபெயர், இந்த யோகினி தேவதைகளை ஞானேந்த்ரியங்கள் 5, கர்மேந்திரியங்கள் 5, பஞ்ச பிராணங்கள் -5, மனது-1, ஆக 16 என்று யோகினி ஹ்ருதய சாஸ்திரம் சொல்லுகிறது. அன்னையை வழி படுபவன் புலன்களை வென்று, மனதைக் கட்டுப்படுத்தி அதன் பின்னரே உள்ளே புக முடியும் என்பதையே இத்தேவதைகள் காட்டுகின்றன.

மூன்றாவது ஆவரணம் : எட்டிதழ்ப் பத்மம், இதற்கு ஸர்வஸம்க்ஷோபனம் என்றுபெயர். இதில் குடிகொண்டுள்ள 8 யோகினிகளும் புர்யஷ்டகத்தைக் குறிப்பிடுபவை.

நகன்காவது ஆவரணம் : 14 முக்கோணங்களை உடையது. இதற்கு ஸர்வ ஸௌபாக்கிய தாயகம் என்றுபெயர். இதில் குடி கொண்டிருப்பவர் 14 சக்தி தேவதைகள். இவர்கள் ஸம்பிரதாய யோகினிகள் என்று சொல்லப் படுவர்.

ஐந்தாவது ஆவரணம் : பத்து முக்கோணங்களை உடையது. இதற்கு வெளிப்பத்து என்றுபெயர்.

ஆறாவது ஆவரணம் : பத்து முக்கோணங்களை உடையது. இதற்கு 'உட்பத்து' என்றுபெயர். இவற்றில் ஒவ்வொரு ஆவரணத்திலும் பதின்மராக 20 தேவதைகள் குடி கொண்டுள்ளனர். ஐந்தாவது ஆவரணம் 'ஸர்வார்த்த ஸாதக சக்ரம்' எனப்படும். ஆறாவது ஆவரணம் 'ஸர்வ ரக்ஷாகர 'சக்ரம்' எனப்பெயர் பெறும்.

ஏழாவது ஆவரணம் : எட்டு முக்கோணங்களைக் கொண்டது. இதற்கு 'ஸர்வரோகஹரசக்ரம்' என்று பெயர். உடலைப் பற்றுவது வியாதி. உலகியலில் இதனையே ரோகம் என்று கூறுகிறோம். ஆனால் இங்குக் குறிக்கப்படும் ரோகமோ ஜீவனை அநாதியாகப்பற்றித் தொல்லைப்படுத்தி வரும் அஞ்ஞானம் என்னும் ரோகம். இதுதான் மாறிமாறிப் பிறப்புக்கும் இறப்புக்கும் காரணமான வித்து. இதனைக்காட்டிலும் பெரிய ரோகமில்லை. இந்த அஞ்ஞானம் எனும் ரோகத்தைப் போக்கும் விலிமையுடைய தேவ தைகள் இங்கே குடிகொண்டுள்ளனர். இந்த ஆவரணத்தில் நுழைந்ததுமே அஞ்ஞானம் அகல அன்னையின் அருகில் வந்துவிட்டோம்.

எட்டாவது ஆவரணம் : மூன்று கோணங்களைக் கொண்ட முக்கோணம். இதைச் சுற்றிலும் 16 திதிநித்யா தேவதைகள் குடிகொண்டுள்ளனர். இவர்களை வணங்கி, இவர்கள் அநுமதியுடனே தான் அன்னை இருக்கும் பிந்துஸ்தானத்தை அடையமுடியும். இந்தச்சக்ரத்திற்கு 'ஸர்வஸித்திப் பிரதம்' என்று பெயர். இங்கே குறிப்பிடப்படும் ஸித்தி முதல் ஆவரணத்தில் உள்ள அஷ்டமாஸித்திகளோ தச ஸித்திகளோ அல்ல. அஞ்ஞானம் நீங்கி, மனம் ஒழிந்து, மனவாக்குக்கு எட்டாத பரம்பொருளை ஸாக்ஷாத்காரமாக அநுபவிக்கும் ஸமாதி நிலையே இங்கு ஸர்வஸித்தி எனப்பட்டது. ஆழ்ந்து, பாவனையோடு அன்னையை வழிபடுவோர்க்கு இந்த ஆவரணத்தில் ஸமாதிஸித்திக்கும்.

ஒன்பதாவது ஆவரணம் : பிந்து ஸ்தானம். இதற்குத் ஸர்வானந்தமய சக்ரம் என்று பெயர். இதுவே அன்னையின் இருப்பிடம் இதுவே மௌன அநுபூதி அருளுமிடம். பரம்பொருளோடொன்றி, அவித்தை நீங்கித் ''தன்னந் தனிநின்றது தானறிய இன்னம் ஒருவர்க்கு இசைவிப்பதுவோ'' என்று அருணகிரிநாதர் சொன்ன மனோவாக்குக்கு எட்டாத அநுபவம்.

மேலே சொன்னவை அனைத்தும் மனிதன் வாழ்க்கையில் முன்னேறி இறைவனுடன் ஒன்றுவதற்கு உண்டான வழிபாட்டு முறை. இதுவே ஸ்ரீ வித்யை

ஐந்து சக்தி முக்கோணங்களும் ஊடாடுவதால் ஏற்படும் அமைப்பு ஸ்ரீ சக்ரம் என்று சொன்னோம். ஆகவே ஸ்ரீ சகரம் என்பது அம்மை, அப்பன் இருவரையும் உட்கொண்ட அமைப்பு; சிவசக்தி சொரூபம் என்று சொல்லுவார்கள்.

இந்த ஸ்ரீ சக்ர வழிபாட்டினால் லௌகீகமாகக் கிடைக்கும் பயன்களும் நிறைய உண்டு. தந்திர சாஸ்திரம்

''யா போ4 க3 தா3 யினி தே3 வி ! ஜீவன் முக்தி பிர தா3 நஸா !
மோக்ஷ தா3 து ந போ4 கா3 ய லலிதா து உப4 யப்பிரதா3 !!''

என்று கூறுகிறது.

போகத்தைக் கொடுக்கும் தெய்வங்கள் மோக்ஷத்தைக் கொடுப்பனவல்ல; மோக்ஷத்தைக் கொடுக்கும் தெய்வங்கள் போகத்தைக் கொடுப்பனவல்ல. ஆனால் ஸ்ரீ லலிதா மகா திரிபுரஸுந்தரியோ இரண்டையும் அருள வல்லவள். ஆகவே ஸ்ரீ சக்ர வழிபாடு உலகியல் சுகத்தையும் தரும்; பரமனொடு இணைக்கவும் செய்யும்.

ஸ்ரீ வித்யையை வழிபட ஆதிகுருவாகிய ஸாக்ஷாத் சிவனிடமிருந்து பின்னர்த் தோன்றிய பல குருமார்கள், குருபரம்பரைகள் அறிந்து பல வழிமுறைகளை ஏற்படுத்தி உள்ளார்கள். பல குருபரம்பரைகளில் பல முறைகள் அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. இவைகளுக்கு 'ஸம்பிரதாயங் கள்' என்று பெயர். பெரும்பான்மையினர் வழிபட்டு வரும் முறை பரசு ராம கல்ப சூத்திரத்தில் உரைக்கப்பட்டு, நித்யோத்ஸவ பத்ததியில் தொகுக்கப்பட்டுள்ளது. மேலும் வழிபாட்டில் சமய முறை, கௌல முறை என்னும் இரண்டு பெரிய வழிகள் உண்டு. இவைகளை எல்லாம் ஸ்ரீ வித்யையில் ஆழ்ந்த அறிவும் அநுபவமும் உள்ள குருமார்கள் மூலம் தீக்ஷைபெற்று அநுஷ்டிக்க வேண்டும் எழுத்தில் மேலும் விளக்கமாகக் கூற இயலாது.




ஸ்ரீ சக்கரம்

## ஸ்ரீ சக்ர விளக்கம் ஆவரண பூஜைக்கு உகந்தது.

| சக்ரம் | எண் | வருத்திகள் | ஆவரணம் | ஸ்ரீ சக்ர இடங்கள் | சரீர ஸ்தானம் | ஆதாரங்கள் | முத்ரைகள் | சக்ரேஸ்வரி |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | நிர்விகல்ப ஸமாதி | ஐக்யம் | ப்ரம்ம ரந்த்ரம் | (உச்சிதலை) | ஸஹஸ்ராரம் | ஸர்வ த்ரிகண்டா முத்ரை | |
| ஸர்வானந்தமய சக்ரம் | 9 | ஸவிகல்வ ஸமாதி | ஒன்பதாவது ஆவரணம் | பிந்து | புருவ மத்தி | இருதள ஆக்ஞா | ஸர்வ யோனி | மகாத்ரிபுர ஸுந்தரி |
| ஸர்வஸித்திப்ரத சக்ரம் | 8 | நிதித்யா ஸனம் | எட்டாவது ஆவரணம் | த்ரி கோணம் | உள் நாக்கு | த்ரிகோண தேவிகள் | ஸர்வ பீஜம் | த்ரிபு ராம்ப |
| ஸர்வரோகஹர சக்ரம் | 7 | மனன வ்ருத்தி | ஏழாவது ஆவரணம் | அஷ்டாரம் | கண்டம் | ஷோடச தள விசுத்தி | ஸர்வ ஸகசரீ | த்ரிபு ராஸித்தா |
| ஸர்வரக்ஷிகர சக்ரம் | 6 | உபதேசம் | ஆருவது ஆவரணம் | அந்தர் தசாரம் | இதயம் | த்வாதச தளம் அனுஹதம் | ஸர்வமாதா அங்குசம் | த்ரிபு ரமாலினீ |
| ஸர்வார்த்த ஸாதக சக்ரம் | 5 | ஸகுருபஸ தனம் | ஐந்தாவது ஆவரணம் | பஹிர் தசாரம் | வயிறு | தசதள மணிபூரகம் | ஸர்வ உன் மாதினீ | த்ரிபுராஸ்ரீ |
| ஸர்வஸௌ பாக்யதாயக சக்ரம் | 4 | ஈசுவர விசாரம் | நான்காவது ஆவரணம் | சூர் தசாரம | தொப்புள் | ஷட்தள ஸ்வாதிஷ் டானம் | ஸர்வ வசங்கரீ | திரிபு ரவாஸினீ |
| ஸர்வஸம் க்ஷோபண சக்ரம் | 3 | சுஷுருப்தி | மூன்ருவது ஆவரணம் | அஷ்ட தளம் | ஆண்குறி | சூர்தள முலாதாரம் | ஸர்வ ஆகர்ஷினி | திரிபு ரஸுந்தரி |
| ஸர்வாசாபரிபூரக சக்ரம் | 2 | ஸ்வப்னம் | இரண்டாவது ஆவரணம் | ஷோடச தளம் | ஆண்குறிக் குக்கீழே | ஷட்தள விஷுவம் | ஸர்வ வித்ராவினி | த்ரிபுரேசி |
| த்ரைலோக்ய மோஹன சக்ரம் | 1 | ஜாக்ரத் | முதல் ஆவரணம் | பூபுரம் | ஆண்குறிக் கும்குதத்துக் கும் நடுவில் | அகுல ஸஹஸ்ராரம் | ஸர்வ ஸம்க்ஷோ பிணி | த்ரிபுரா |

உ

சிவமயம்

ஸ்ரீ காமாக்ஷி சமேத மல்லிகார்ஜ்ஜுன சுவாமிக்கு சாயங்கால பூஜை நைவேத்தியத்திற்காக நிலம் எழுதிவைத்த மெய்யன்பர்கள்.

தருமபுரி ஷராப் கடை ஸ்ரீ சூரா. ரங்கைய செட்டியார் அவர்களால் அன்னசாகரம் மஜரா 208 நெ. பட்டா 72 நெ. சர்வை நஞ்சை ஏக்கர் 0.95

தருமபுரி ம. ர. ராமலிங்கம் செட்டியார் மனைவி ஸ்ரீமதி காளியம்மாள் அவர்களால் ஷை தாலுக்கா மல்லிகுட்டை கிராமத்தில் 37 நெ. பட்டா சர்வை நெ. 105 நஞ்சை ஏக்கர் 0.93 இதுவும் 106 நெ. நஞ்சை ஏக்கர் 0.18 [ஆக. 1.11].

ஸ்ரீ D. K. வேட்றாய செட்டியார் மனைவி சௌபாக்கியம்மாள் அவர்களால் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு சாயங்கால பூஜை நைவேத்தியமும் ஷை உற்சவங்கள் நடத்திவரவும் தருமபுரி தாலுக்கா வெள்ளே கவுண்டன் பாளையம் சாலைவிநாயகர் வீதிக்கு கிழக்கிலும் ஷை யாருடைய காபி கிளப்பிற்கு வடபுரத்தில் தென்வடல் அடி 26 கீழ்மேல் அடி 45½ காலிஜாகாவும் கூரை கொட்டாய் (2).

அம்பாள் காமாட்சி தெரு முனுசாமி கவுண்டரால் மடம்கட்டவும் நந்தவனத்திற்கும் ஸ்ரீ மல்லிகார்ஜுன சுவாமி கோயிலுக்கு கிழக்கில் கீழ்மேல் அடி 50 தென்வடல் 120 அடி விடப்பட்டது.

17–3–1957

கோட்டை தருமபுரி.

குறிப்பு : இது ஸ்ரீ மல்லிகார்ஜ்ஜுனர் கோயில் தெற்குப் பிரகாரத்தில் கோயில் உட்புறவாசலின் வடபுறத்தில் தனிக்கல்லில் எழுதி நடப்பட்டுள்ள கல்வெட்டுக் கூறும் செய்தியாகும்.

# ஸ்ரீ காமாட்சி அம்மன் ஸமேத மல்லிகார்ச்சுன ஈசுவரன் கோயில் திருவிழா

| | | |
|---|---|---|
| சித்திரை | — | வருடப் பிறப்பு அம்மனுக்கும் நடராஜருக்கும் பால் அபிஷேகம், அப்பர் திருநக்ஷத்திரம் |
| வைகாசி | — | விசாகத் திருநாள் சுப்பிரமணிய சுவாமி திருவீதி உலா, சம்பந்தர் திருநக்ஷத்திரம் |
| ஆனி | — | ஆனித் திருமஞ்சனம்—நடராஜர் அபிஷேகம் திருவீதி உலா, மாணிக்க வாசகர் திருநக்ஷத்திரம் |
| ஆடி | — | வெள்ளிக்கிழமை தோறும் அம்பாளுக்கு மஞ்சள் காப்பு<br>மூன்றாம் செவ்வாய்க்கிழமை துர்க்கைக்கு மஞ்சள் காப்பு<br>கார்த்திகை நக்ஷத்திரம் – சுப்பிரமணிய சுவாமி திருவீதி உலா சுந்தர மூர்த்திகள் திருநக்ஷத்திரம் |
| ஆவணி | — | விநாயக சதுர்த்தி – நடராஜர் அபிஷேகம் |
| புரட்டாசி | — | நவராத்திரி விழா விஜயதசமி, நடராஜர் அபிஷேகம் |
| ஐப்பசி | — | தீபாவளி<br>திருவேலாலீஸ்வரர்க்கு அன்னாபிஷேகம் |
| கார்த்திகை | — | கார்த்திகை தீபம்<br>திங்கட்கிழமை தோறும் அபிஷேகம்<br>கடைசித் திங்களன்று சங்காபிஷேகம் |
| மார்கழி | — | தனுர் பூஜை – ஏகாதசி – ஆருத்ராதரிசனம் |
| தை | — | வெள்ளிக்கிழமை தோறும் மஞ்சள் காப்பு<br>செவ்வாய்க்கிழமை தோறும் துர்க்கைக்கு லக்ஷார்ச்சனை<br>ஸப்தசதி பாராயணம் ஆரம்பம்<br>மூன்றாம் வெள்ளி திருவிளக்கு பூஜை—மகா சண்டிஹோமம் |
| மாசி | — | மகாமகம் – மகாசிவராத்திரி திருவீதி உலா |
| பங்குனி | — | ஸ்ரீ ராமநவமி – 10 நாள் அபிஷேகம் – விழா<br>பங்குனி உத்திரம்<br>வெள்ளி தோறும் அம்மனுக்கு மஞ்சள் காப்பு |

# விசேடத் திருவிழாக்கள்

| | | |
|---|---|---|
| வைகாசி | — | விசாகம் |
| ஆனி | — | திருமஞ்சனம் |
| ஆடி | — | வெள்ளிக்கிழமை, மூன்றாம் செவ்வாய்க்கிழமை |
| புரட்டாசி | — | நவராத்திரி |
| கார்த்திகை | — | தீபம் |
| மார்கழி | — | ஏகாதசி, ஆருத்ரா தரிசனம் |
| தை | — | வெள்ளி – சண்டிஹோமம் |
| மாசி | — | சிவராத்திரி |
| பங்குனி | — | உத்திரம் |

மற்றும் செவ்வாய்க்கிழமை தோறும் ராகுகால பூஜை.

# ஸ்ரீ மகாலக்ஷ்மி ஸமேத பரவாசுதேவர் திருக்கோயில் திருவிழா

| | | |
|---|---|---|
| சித்திரை | — | தமிழ் வருடப் பிறப்பு – சித்ரா பௌர்ணமி |
| வைகாசி | — | திருத்தேர் விழா – பிரம்மோத்சவம் |
| ஆனி | — | ஸ்ரீ மகாலஷ்மி திருநக்ஷத்திரம் |
| ஆடி | — | திரு ஆடிப்பூரம் – தக்ஷிணாயன புண்யகாலம் |
| ஆவணி | — | வரலக்ஷ்மி விரதம், ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி உறியடி |
| புரட்டாசி | — | நவராத்திரி விழா<br>சனிக்கிழமை தோறும் திருமஞ்சனம்,<br>பிரகார உத்சவம் |
| ஐப்பசி | — | விஜயதசமி, தீபாவளி |
| கார்த்திகை | — | விஷ்ணு தீபம் |
| மார்கழி | — | தனுர்மாத பூஜைகள்,<br>கூடாரை வெல்லும்சீர்,<br>வைகுண்ட ஏகாதசி, சொர்க்க வாசல் திறப்பு |
| தை | — | உத்தராயண புண்யகாலம்<br>அமாவாசை<br>வெள்ளிக்கிழமை தோறும் சிறப்பு பூஜை |
| மாசி | — | ஸ்ரீ வேதவல்லி திருநக்ஷத்திரம் |
| பங்குனி | — | ஸ்ரீ ராவநவமி, 10 நாள் உத்சவம்<br>தெலுங்கு வருடப் பிறப்பு<br>இராமயண சொற்பொழிவு.. |

# சிறப்பு வழிபாடு

பிரதி மாதம் அமாவாசை, பௌர்ணமி, ஏகாதசி, திருவோணம் பூரம் வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை ஆகிய நாட்களில் விசேஷ பூஜை, ஸகஸ்ர நாம அர்ச்சனை. சூரிய கிரஹணம், சந்திரகிரஹணம், நாகபஞ்சமி, கருட பஞ்சமி, ஹநுமத் ஜெயந்தி ஆகிய நாட்களில் விசேட பூஜைகள், அர்ச்சனைகள் நடைபெறும்.

இத்திருக்கோயில்களில் சிறப்பு வழிபாடு அனைத்தும் உபயதாரர்களால் நிகழ்கிறது. எனவே, உபயம் செய்ய விரும்பும் மெய்யன்பர்கள் நேரடியாக அர்ச்சகர் அல்லது சிவாச்சாரியாரொடு தொடர்பு கொண்டும். திருப்பணிகளை அறநிலையத்துறை ஆணையர் வழியும் மேற்கொள்வார்களாக.



# அருள்மிகு ராஜ துர்க்காம்பிகை

## பௌர்ணமி மற்றும் வார வழிபாட்டுப் பேரவை, தருமபுரி.

தருமபுரிக் கோட்டைக் கோயில் அருள்மிகு ராஜ துர்க்காம்பிகையின் வழிபாட்டினை சிறப்பாகச் செய்யவும், அம்பிகையின் அருள் நோக்கிற்கு உரியவராகி மக்கள் நலம் பெறவும் வாய்ப்பாகத் தோற்றுவிக்கப்பட்ட பக்தர்கள் குழுவின் அமைப்பே, அருள்மிகு ராஜ துர்க்காம்பிகை பௌர்ணமி மற்றும் வார வழிபாட்டுச் சங்கமாகும். இதில் பக்தர்கள் அனைவரும் உறுப்பினர்களாவார்கள். அருள்மிகு அம்பிகைக்குச் செலுத்தும் பக்தியும் சேவையுமே இச்சங்கத்திற்கு உரிய உறுப்பினர் காணிக்கையாம். பக்தி புகழ் வேண்டாதது; தன்முனைப்பு இல்லாதது; அருளில் முகிழ்ப்பது; தன்னலம் அற்றது. இறை உணர்விற் பிறப்பது. பக்தர்கள் ஒன்றுகூடி இளைவழிபாடு செய்யும்போது இறைவன் அவர்களோடு இரண்டறக் கலந்து உறைகிறார் என்பதே பாரதம் காட்டும் பக்தி நெறி. அதற்கு எடுத்துக்காட்டாக விளங்குவது இப்பேரவை. பத்தாண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றி வரும் இப்பேரவை பௌர்ணமி தோறும் ஸ்ரீ வித்யா நவாரண பூஜை, ஹோமம் மற்றும் பூரணமகா மேரு சிறப்பு வழிபாடு ஆகியவற்றைச் செய்து வருகிறது. இச்சிறப்பு வழிபாட்டிற்கு வரும் பக்தர்கள் காணிக்கைப் பொருளாகக் கற்கண்டு, எலுமிச்சம்பழம், பூ முதலிய மங்கலப் பொருள்களை எடுத்து வந்து வழிபாட்டில் பங்கேற்கலாம்.

பேரவை ஆண்டுதோறும் நவசன்டிஹோமத்தைச் சிறப்பாகச் செய்து வருகிறது. ஆண்டுதோறும் லக்ஷார்ச்சனை, திருவிளக்கு வழிபாடு செய்து வரும் இப்பேரவையின் பணியே இத்திருக்கோயிலில் பக்தர்கள் குழுமிப் பணியாற்றப் பெருந்துணையாகிறது.

இப்பேரவை எதிர்காலத்தில் இத்திருக்கோயில் கலைநயமும் பக்தி நலமும் வாய்ந்த பணிகளைச் செய்யும் என்பதற்கு முன்னுதாரணமாகவே இத்திருக்கோயில் வளர்ச்சிப் பணிகள் விளங்குகின்றன. நவக்கிரஹத்திற் காகச் சிறு கோயில் ஒன்றினை அமைத்திருப்பதும், இத்திருக்கோயிலைத் தூய்மையாக வைத்திருப்பதும் இப்பேரவையின் சாதனைகளாகும்.

இளைஞர்களும், மகளிரும், இப்பேரவைப் பணிகளில் பங்கேற்று இத்திருக்கோயில் வளர்ச்சியில் நாட்டம் செலுத்துவதும், நாள்தோறும் நிகழும் வழிபாடு மற்றும் சிறப்பு வழிபாடுகளில் மிகுதியானோர் பங்கேற் பதும் தருமபுரிக்கு நல்லது; தமிழ்நாட்டுக்கு நல்லது; தரணிக்கு நல்லது. இப்பேரவை பற்றிய முழு விபரமும் தெரிய இத்திருக்கோயில் குருக்கள் அவர்களை நேரிலோ, அஞ்சல் வழியோ தொடர்பு கொள்ளலாம்.

இத்தகைய பேரவை ஒவ்வொரு திருக்கோயிலிலும் தோன்றி அப்பர் பெருமாள் காட்டிய தொண்டு நெறியில் சிறப்புற வேண்டும் என்பதே பக்தர்களின் பேரவா வாகும்.

## ஸ்ரீ மதே ராமானுஜாய நம

ஸ்ரீ மத் பரமஹம் ஸேத்யாதி
ஸ்ரீ வரதராஜ மடாதிபதி யதிராஜ ஜீயர்,
எதிராஜ ஜீயர் மடம் மற்றும்
பரம்பரை தர்ம, கேள்வி முத்திரை கர்த்தா
ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாள் ஸ்ரீ பாஷ்யகார ஸ்வாமி சன்னதி,
26, சன்னதி வீதி,
ஸ்ரீ பெரும்புதூர்-602 105.

நாள் 19—2—1992.

ஆழ்வார்களையும் அருளிச் செயல்களையும்
தாழ்வாக நினைப்பவர்கள் தாம் நரகில் வீழ்வார்க
ளென்று நினைத்து நெஞ்சே—எப்பொழுதும் நீ யவர்பால்
சென்ற ணுகக் கூசித் திரி.

## மங்களாசாசனம்

'கடல் சூழ்ந்த மண்ணுலகம் வாழ' என்றார் ஒரு பெருமகனார். 'வையத்து வாழ்வீர்காள்' என்றாள் ஸ்ரீ ஆண்டாள். 'சூழ்ந்திருந்து ஏத்துவர் பல்லாண்டே' என்றார் பெரியாழ்வார். இதில் ஜாதி, சமய வேறுபாடு இல்லாத சமுதாயம் ஒளிவீசும் இலக்கிற்கு ஆழ்வார்கள் வழியில் அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக இன்புருகு சிந்தை இடுதிரியா' என்று ஞானத் தமிழில் பக்திக்கே முதலிடம் அளித்து ஆன்மீயத்தை முழுமுதலாகக் கொண்டனர் வரலாறு கண்ட ஆசார்யப் பெருந்தகையாளர்.

அன்பென்ற பக்தி ஒளிவெள்ளத்தைக் கோயில்களில் தாம்காணமுடியும் என்பது கண்கூடான தத்துவம், உலக வரைபடத்திலே—பாரதத்திலே—குறிப்பாகத் தொன்னாட்டில்தான் ஆன்மீயம் என்ற நந்தாவிளக்கு, முக்கடல் முத்தமிழ், மூவேந்தர், மூன்று தளபதிகள், முக்கனி போன்று ஸ்ரீ சங்கர ஸ்ரீ ராமானுஜ, ஸ்ரீ மத்வ சமயாச்சாரியார்களால் அறம், பொருள், இன்பம் என்ற முறையில் மூன்று தட்டுகள் முத்தமிடுவது போல் மூன்று தத்துவங்களாகச் சமைக்கப்பட்டு, உலகிற்கே விடிவெள்ளியாக வெளியிடப்பட்டது.

மூன்று ஆசார்யர்களில் ஸ்ரீ பகவத் இராமாநுஜர் மற்ற இருவரின் கொள்கைகளுக்குத் தன்னைப் பாலமாக்கிச் சமயப்புரட்சியுடன், தனது சரீர சரீரி தத்துவத்துடன், ஜாதி, மத பேதமில்லாது தமிழுக்கு முதலிடம் கொடுத்து உலகமும், அதில் உள்ள உயிர், உயிரற்ற பொருள்களுடன் மற்ற எல்லாத் தெய்வங்களும் ஸ்ரீ மந் நாராயணனின் உடலின் அங்கங்கள் என்றும் அவனே அவைகளில் நிறைந்துள்ளான் என்றும் கூறினார். ஸ்ரீமந் நாராயணனே கூடாரை வெல்லும் கோவிந்தன் என அன்பைக் கொண்டே புரட்சிகரமான சமுதாயத் தொண்டினை, இடர்களைக் கருதாது 'எம் பெருமானார் தரிசனம்' கண்டார் என்பது வரலாறு. கீழேயும் மேலேயும் கிளைகள் கொண்ட தனது விசிஷ்டாத்வைதத்தை அடிமரமாகக் கொண்டு, செயலில், தனது கொள்கையை நடு நாயகமாகக் காட்டி, வேற்றுமையிலும் ஒற்றுமைகண்டு தேச ஒற்றுமைக்காக 'நாராயணனே நமக்கே பறை தருவான்' என்று 'ஒரே தேவன் கேசவன் தமர்கள் ஒரே குலம்' என அறுதியிட்டார்.

இங்ஙனமே, நாயன்மார்களும் முக்கண்ணன் புகழ்பாடிச் சமயத்தொண்டு செய்தனர் ஆழ்வார்களைப் போல். இத்தகைய தன்னலம் கருதாத பெருந்தகையர்களின் பெருமுயற்சியால் விண்ணைமுட்டும் விஷ்ணு, சைவ சமயங்கள், தென்னக மெல்லாம் கோபுரத்துடன் பக்திப் பெருக்கின் அழிவிலா அடையாளங்களாகச் சேர, சோழ, பாண்டிய, ஹொய்சள, விஜய நகர அரசர்களால் தலவரலாற்றுடன் அமைக்கப்பட்டு வடிவமைக்கப் பட்டன. 108 திவ்விய தேசங்கள் என்று கொண்டாடப்படும் வைணவக் கோயில்களில் சைவ சமயக் கோயில்கள் போல சுமார் எண்பதுக்கும் மேல் தென்னாடு கொண்டது. இவைகளைப் பராமரிக்க மடங்கள் தோன்றி, மடாதிபதிகள் செங்கோல் கொண்டு பராமரித்து, இளைஞர் சமுதாயத்திற்கு வற்றாத தடாகமாகச் செயற்பட்டு, மலராத மலர்கள் போன்ற இளைஞர் கட்கு ஞானப்பால் ஊட்டி வந்தனர்; வருகின்றனர்.

அந்தோ ! இடையே காலத்தின் கோலத்தால் மேற்சுட்டிய கோயில்கள் பராமரிப்பு இல்லாது, பொலிவிழந்து. சொத்துக்களையும் இழந்து இன்று நிற்கும் நிலைக்கும், மடங்களில் பல செயல் இழந்து வருவதற்கும் காரணம் யாவரும் அறிந்தபேருண்மை, இளைஞர் சமுதாயம் திக்குத்

தெரியாத காட்டில் திசை திருப்பப்பட்டு, ஆன்மீயம், இறையுணர்வு, சமுதாயம் என்று அறிந்தும் செயற்பட முடியாதவாறு தவிப்பது இன்று தேசம் சேதமாய் வருவதிலிருந்து அறிய எளிதாம்,

ஆயினும் நூலாசிரியர் திரு. கோவிந்தனார் மேற்படிக் கோயில்களின் வரலாற்றைப் புதுப்பித்துக் குறிப்பாக இளைஞர் சமுதாயத்திற்குத் தென்றலாகச் சாதகப்பக்ஷிகள் போன்ற அவர்கட்கு, ஆழிமழைக் கண்ணனாகத் தன்னலம் கருதாது, 'It is he (Sri Ramanuja) who preached spirituality from Pariah to Brahmin'
என்று ஸ்வாமி விவேகானந்தர் பணித்தபடி சமய வேறுபாடின்றி உலகிற்கு அளிக்க இருப்பதைத் தமிழ் கூறும் நல்லுலகம் ஏற்றுப் பெருமையடைய இவண்டும்.

'மலர் வேண்டுமென்ற மனம் முள் என்றால் மயங்குவது எளிதா!' என்று மண் போன்ற பலர் இடர்களில் இருக்க, மணத்தைக் கொண்டே மேம்முயற்சியில் அவர் ஈடுபட்டு இருப்பது காலம் திரும்புவதற்குக் கனையிருள் அகற்றிடும் குணதிசைக் கதிரவனின் செயலை நினைவூட்டுவதாகும்.

இத்தகைய பணிக்குப் பொருள் வேண்டுவது தவிர்க்க வேண்டியதே எனக்கருதாது, அவரவர்களின் ஒருநாள் கேளிக்கைச் செலவையாது ஈந்து, மாணிக்கங்கட்டி, வைரமணிகட்டி, ஆணிப்பொன்னால் செய்த வண்ணச் சிறு தொட்டில் ஆகிய ஸ்தல வரலாறு படைக்கத்தொண்டாகவும், பொருளாகவும், இறையுணர்வு மேலிட அனைவரும் ஜாதி, மத பேதமில்லாது வழங்கி இந்நூல் வெளிவரவும், அவரது குறிக்கோளுக்கு ஆக்க பூர்வமான ஊக்கம் அளிக்கவும் இச்செய்தி மூலம் தெரிவிக்கிறோம்.

தீயிற்பொலிகின்ற செஞ்சுடராழி போன்ற இப்பெருந்தகையாருக்கு, அவரின் இத்தகைய சீரிய பணி தொடர் சங்கிலியாக மேலும் வளர்ந்து, அத்தகைய பணிகள் மேலும் வளர வித்தாக அமைய அவருக்கும் அவரின் துணைவர்கட்கும் பல்லாண்டு பல்லாண்டு என்று நற்செல்வனுடையவும், அவன் தங்கியினுடையவுமாக இன்னருளுடன் நமது மங்களா சாசனத்துடன் பல மந்த்ராக்ஷதையும் மங்களகரமாயளித்து மகிழ்கிறோமாயிற்று.

நித்யஸ்ரீ

## சேலம் ஓம் ஸ்ரீ ஸ்கந்தாஸ்ரமம் ஸ்ரீமத் ஸத் குரு சாந்தானந்த ஸ்வாமிகளின் ஸ்ரீ முகம்

''மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய் வணங்கினோர்க்கு வார்த்தை சொல்ல சத்குருவும் வாய்க்கும் பராபரமே'' என்பதற்கேற்ப மூவகையிலும் சிறப்புற்று க்ஷேத்திர மகிமை பெற்றது தகடூர் எனும் இந்நாளைய தருமபுரி.

புராண வரலாற்றுடன் கூடச் சரித்திர வரலாறும் கொண்ட தகடூர் தமிழ் இலக்கியப் புகழ் கடையெழுவள்ளல் அதிகமான், ஔவைக்கு நெல்லிக்கனி ஈந்து அழியாப் புகழ் பெற்றுள்ளது யாவரும் அறிந்ததே.

தக்ஷிண பினாகினி எனும் பெண்ணையாறும், காவிரி நதியும் இருபுறம் பாய்ந்தோடி வளம் கொழிக்கும் தகடூர்: தருமபுரி கோட்டைக் கோயிலில் 9-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. நுளம்பர். சோழர் ஆட்சிக்கால கல்வெட்டுக்களும் காணப்படும் புராதனச் சிறப்பு வாய்ந்த இக்கோயிலில் ஸ்ரீ மல்லிகார்ஜுனர் காமாக்ஷி தேவியுடன் காட்சி தருகிறார். சமயபேத மற்று ஸ்ரீ மஹா விஷ்ணு கூட இடம் பெற்றிருக்கிறார் மேலும் ராஜ துர்கை, விநாயகர், முருகன் சந்நதிகளும் உள. ஓர் கால கட்டத்தில் சமணர் பரந்து வாழ்ந்த பூமி என்பதைச் சாஸனங்கள் தெரிவிக்கின்றன. அதிசய சிற்பகலை நுணுக்கங்கள் காண்போரைப்பிரமிக்க வைப்பவை.

கல்தூண் ஒன்று தரையைத் தொடாமலேயே மண்டபத்தைத் தாங்கி நிற்கும் அதிசயம் பொறியியல் வல்லுநர்களையும் வியப்புடைய வைக்கும். தகடூரை மையமாகக் கொண்டு கோலோச்சிய மன்னர்கள் சிற்பக்கலைப் பொக்கிஷங்களை ஆலயங்களுள் சேர்த்துக்குவித்து மகிழ்ந்துள்ளனர் என்பதற்குத் தர்மபுரி கோட்டைக் கோயிலே சான்று. கோவில்களுக்கு வழி படச்செல்வோரும் உண்டு. கலையழகு காணப்போவோரும் உண்டு. அந்த வகையில் யாவரும் கண்டு வரவேண்டிய பெருமையுடையது தர்மபுரி கோட்டைக் கோவில் என்பதில் ஐயமில்லை.

இவ்வளவு சிறப்புக்கள் படைத்து, பல நூற்றாண்டுகளாக நிலைத்து நிற்கும் தர்மபுரி கோட்டைக் கோயில்கள் தலப்பெருமைகளை முன்னோர் செயல் திறனை அறிந்து நாம் அனைவரும் கண்டு இன்புற வேண்டும். யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் எனும் பரந்த மனோபாவத்தில் கடினமாக உழைத்து ஆராய்ந்து சிரத்தையுடன் பல்லாண்டு பாடுபட்டு இந்நூல் ஆசிரியர்கள், பேராசிரியர்கள்

பேராசிரியர் புலவர் தி. கோவிந்தன், M.A.,

பேராசிரியர் டாக்டர் எம். ராஜேந்திரன், M.A.,Ph.D.,

பேராசிரியர் எ. மோகன்ராம், M.A.,

பேராசிரியர் எ. கண்ணப்பன், M.Sc.

ஆகியோர் அசாத்திய சாதனை புரிந்துள்ளனர் என்பதில் ஐயமில்லை.

அவர்களைப் பாராட்டிப் பெருமைப் படுத்த மக்கள் கடமைப்பட்டுள்ளனர்.

இந்நூல் வெளிவரப் பெரிதும் விஷயதானத்துடன் ஊக்குவித்து ஒத்துழைப்பு நல்கிப்பணியைத் தொய்வின்றி நிறைவேற உதவியவர்—இன்று தெய்வ சாந்நித்யம் ஏற்படப் பாடுபட்டவர் சிவ ஸ்ரீசண்முக சுந்தர குருக்கள் என்பதறியக் கூடுதல் மகிழ்ச்சி அளிக்கிறது.

அனைவரின் தொண்டும் வளர வாழ்த்துகிறோம்.

(ஸ்ரீமத் ஸத்குரு சாந்தானந்த
ஸ்வாமிகளவர்கள் ஆக்ஞைப்படி)

இந்நூல் வெளிவரத்துணை புரிந்த அனைவரும் பாராட்டிற்கும் போற்றுதலுக்கும் உரியவராவர். இத்தகைய நல்ல பணியில் ஈடுபட்டுள்ள ஸ்ரீ விவேகானந்தர் கொடை மற்றும் அறக்கட்டளைப் பொறுப்பாளர்கள், தொடர்ந்து மேலும் மேலும் நல்ல பணியாற்ற வாழ்த்துகிறோம்.

செயலாளர்,
ஸ்கந்த ஆசிரமம்.

# தருமபுரி கோட்டை அருள்மிகு
# ஸ்ரீ காமாட்சியம்மன் பதிகம்

காப்பு

**நேரிசை வெண்பா**

தரும புரித்தலத்தின் சக்திகா மாட்சி
ஒருமை யுரத்தாலே உய்த்தெம் - அருமைவினை
தீர்த்தளிக்கும் நீதித் திருவுருவைப் பாடநெஞ்சே
பார்த்திருப்பாய் வேழப் பதம்.

நூல்

பன்னிருசீர் விருத்தம்

அளத்தற்(கு) ஆகா அற்புதமாய்
அணியாய் நுணுக்கக் கலைவிந்தை
ஆன சிற்பம் விளங்குதல
ஆல யத்தில் முதன்மையளே !
களத்தில் தேராய்க் கயமிழுக்கக்
காணும் மேருக் கருவறையில்
கல்லால் அமைந்து பதினெட்டாய்க்
கருதும் படியில் உயர்ந்தடைய
முளைத்துப் பவளந் தனில்விதமாய் !
மூழ்கு விக்கும் புன்னகையாய் !
முன்னம் அதிய மான்ஆண்ட
மூதூர்க் கோட்டைக் கற்றளியாய்
தளத்தில் தனியே நிற்பித்தாய்;
தகடூர் என்னுந் தலைநகராம்
தரும புரியில் நின்றருளும்
சக்தி ! காமாட் சித்தாயே ! 1

கோளைக் கெடுக்கும் பைரவி,யுட்
குலவும் உமை,கா மக்கண்ணி,
குற்றம் பொறுக்கும் ஆனந்தி,
குறையை மறைக்கும் காளி,சண்டி,
ஆளும் பஞ்ச மலர்ப்பாணி,
அருட்பே றளிக்கும் ருத்ராம்ச
அரச துர்க்கை, கோலஞ்செய்
அருந்த லத்தில் அனை,முருக
வேளை ஆனை முகனைநல்
விளக்காய் அளிக்கும் கலாபமயில்,
வியக்கும் குமரித் தோற்றங்கொள்
வித்யா, காலாந் தகி,யம்மை,
தாளைக் கண்ணி எனச்சூடும்
சங்க ரன்செம் பங்குடையாய் !
தரும புரியில் நின்றருளும்
சக்தி ! காமாட் சித்தாயே ! 2

அண்ணா மலையுண் ணாமுலையாய்
ஆல வாயில் தாடகையாய்
அவிமுக் தத்தில் தடங்கண்ணி
அணிநா கைநீ லாவதியாய்க்
கண்ணார் காட்சி தருவாளே !
காமக் கண்கொண் டருள்வாளே !
கருத்தாய் உருக்கத் தமிழ்பாடக்
கணத்தில் உணர்த்தும் கற்பகமே !
உண்ணா நஞ்சை உண்டவன்தான்
உலயா வண்ணங் காத்தவளே !
ஓதும் பாசாங் குசத்துடனே
உறுநல் வரதம் அபயத்தாய் !
தண்ணார் தலத்தில் தங்கியருள்
தையல் ! நின்றாள் தான்சரணம் !
தரும புரியில் நின்றருளும்
சக்தி ! காமாட் சித்தாயே ! 3

பலவாய் மன்னர் பணியேற்றுப்
    பார்க்கும் துணைநீ; முற்றும் நீ;
பரம சிவன்மெய் குழைத்தாய்நீ;
    பகர்கா மாக்னி அழித்தாய்நீ;
மலர்மேல் அயன்மால் போற்றுஞ்சீர்
    மல்லி கார்ஜீ னேசுவரன்
மனையுந் தாயும் மகளும்நீ;
    வண்சோ மேசன் எண்ணமுநீ;
அலையார் கடலும் மலையும்நீ;
    ஆவிக்(கு) அழியா முத்தியுநீ;
அமரர்க்(கு) அமரர் அகண்டமுநீ;
    அரும்பொன் மணிநீ பிணியும்நீ;
சலநன் மகள்நீ; சுந்தரர்சொல்
    தகடூர்த் தலத்துச் சங்கரிநீ;
தரும புரியில் நின்றருளும்
    சக்தி! காமாட் சித்தாயே! 4

பொருளே பொன்னே போதுருவே
    பொலிவே மெலிவே போதகமே
புகலே அகமே போதனமே
    பொற்பே வெற்பே புராதனியே
அருளே தெருளே அவரவர்தம்
    அறிவால் அறியும் உருவேற்கும்
அருமா மணியே ஆரமுதே!
    அகலாச் செல்வந் தருபவளே!
இருளே மதியே இன்னவுரு
    இன்ன நிறமென்(று) இயம்பவொண்ணா(து)
இனிக்குஞ் ஞானச் செழுந்தேனே!
    இலங்கு மூர்த்தி! குலங்காக்கும்
தருவே படைத்து விளையாடும்
    தலைவீ! தொங்குந் தூண்மெலியும்
தரும புரியில் நின்றருளும்
    சக்தி! காமாட் சித்தாயே! 5

அண்டங் கடந்தாய் மகாதேவி
அஷ்ட மூர்த்தி சிவதூதி
அன்ன தாராஜ் யதாயினியே
அநாதி ராஜ்ய வல்லபையே
பண்டந் தோற்றும் சுபகரியே
பக்தி மத்கல் பலதிகையே
பசுவின் பாச விமோசனியே
பச்யந் திமத்ய மாலலிதா
தொண்டர் சூழும் மஹாசத்வா
ஸூதாஸ்ரு தி,கல்ப ஞ,ரஹிதா
சுவர்க்க அபவர் கதா,ஸாத்வீ,
சுத்தா, பாக்யாப் திசந்திரிகா
தண்ட நீதிஸ் தா!விருத்தா!
தக்ஷ யக்ஞ விநாசினியே!
தரும புரியில் நின்றருளும்
சக்தி! காமாட் சித்தாயே! 6

நெஞ்சம் நிறைப்பாள் காமாட்சி;
நிகரில் அகத்தாள் காமாட்சி;
நிசவாழ் வளிப்பாள் காமாட்சி;
நிலைக்கச் செய்வாள் காமாட்சி;
விஞ்சுங் குணத்தாள் காமாட்சி;
விதஞ்செய் நலத்தாள் காமாட்சி;
விதிவிட் டெடுப்பாள் காமாட்சி;
வேதத்(து) அனைத்தும் காமாட்சி;
கெஞ்சக் கொடுப்பாள் காமாட்சி;
கீர்த்தி வளர்ப்பாள் காமாட்சி;
கிளையும் விளைவுங் காமாட்சி;
கெடுவோட் டிடுவாள் காமாட்சி;
தஞ்சம் அளிப்பாள் காமாட்சி;
சரண்என்(று) உற்றேன் தனைக்காண்பாய்;
தரும புரியில் நின்றருளும்
சக்தி! காமாட் சித்தாயே! 7

தருமபுரிவாழ் காமாட்சி
 தாழ்வைத் தடுப்பாள் யாழ்வளிப்பாள்;
தருமபுரிவாழ் காமாட்சி
 தஞ்சம் அளிப்பாள் ஊழ்எரிப்பாள்;
தருமபுரிவாழ் காமாட்சி
 தவிரா(து) ஆசை வேர்அறுப்பாள்;
தருமபுரிவாழ் காமாட்சி
 தவஞா னியராய் மாற்றிடுவாள்;
தருமபுரிவாழ் காமாட்சி
 தாமே வலியத் தந்தளிப்பாள்;
தருமபுரிவாழ் காமாட்சி
 சாரும் கனவு நனவளிப்பாள்;
தருமபுரிவாழ் காமாட்சி
 தான்என்(று) எண்ணத் தந்தருள்வாய்;
தருமபுரியில் நின்றருளும்
 சக்தி! காமாட் சித்தாயே! 8

நீடிப் பரவ நினைந்தில்லேன்
 நினைத்துப் பரவி நின்றில்லேன்
நின்று பரவி நெகிழ்ந்தில்லேன்
 நெகிழப் பரவிப் பாடுகிலேன்
பாடிப் பரவிப் பயில்கில்லேன்
 பயின்று பரவிப் பற்றுகிலேன்
பற்றிப் பரவிப் பணியாற்றேன்
 பணிவாய்ப் பரவிக் கூடுகிலேன்
கூடிப் பரவிக் குழைந்தில்லேன்
 குழைந்து பரவிக் குன்றில்லேன்
குன்றிப் பரவிக் குறிக்கொள்ளேன்
 குறித்துப் பரவிச் சாடில்லேன்
சாடிப் பரவித் தரித்தில்லேன்
 தரித்துப் பரவத் தருவாயே
தருமபுரியில் நின்றருளும்
 சக்தி! காமாட் சித்தாயே! 9

பொழிலார் தரும புரிவாழும்
புனிதை நினதற் புதம்போற்றி
பொற்பார் தரும புரிவாழும்
பூமா(து) உமையுன் பதம்போற்றி
எழிலார் தரும புரிவாழும்
எந்தாய் நின்றன் இயல்போற்றி
ஏத்தும் தரும புரிவாழும்
ஈசு வரிநின் இதம்போற்றி ;
கயலார் தரும புரிவாழும்
கமலை நின்றன் கவின்போற்றி
கலையார் தரும புரிவாழும்
கன்னீ நின்றன் கரம்போற்றி ;
தளராத் தரும புரிவாழும்
தவளே நின்றன் தவம்போற்றி ;
தரும புரியில் நின்றருளும்
சக்தி ! காமாட் சித்தாயே ! 10

## நூல் வெளியிட நன்கொடை வழங்கியவர்கள்

| | |
|---|---|
| ஸ்ரீ மத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ வரதராஜமடாதிபதி யதிராஜஜீயர்ஸ்வாமிகள் | 1008 |
| திரு K. M. காசிவிஸ்வநாதன், ராமகிருஷ்ணா மேக்னசைட் மைன்ஸ், சேலம்–4. | 10001 |
| திரு R. சின்னசாமி, முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர், தருமபுரி. | 1000 |
| திரு A. S. ஆதிநாராயணன் செட்டியார் சன்ஸ், தருமபுரி. (ஆருத்ரா தரிசனம் மற்றும் ஆனித்திருமஞ்சன விழா உபயதாரர்) | 1001 |
| திரு R. பெரியசாமி, B.Sc., (Agri) மண்டலமேலாளர், இந்தியன் வங்கி, தருமபுரி. | 501 |
| திரு N. ராஜேந்திரன், B.A., B.L., வழக்கறிஞர், முன்னாள் தர்மகர்த்தா, தர்மபுரி. | 500 |
| திரு K. ரகோத்தமன், M.D. & டாக்டர் G. நாகவேணி, M.D., டொலிடோ அமெரிக்க ஐக்கிய நாடு, C/o குருராவ், தலைவர், அறக்கட்டளை. | 500 |
| திரு J. P. பாலசுப்ரமணியன், (த்ரீகேட்ஸ்) தருமபுரி. | 500 |
| திரு R. கந்தஉடையார், அரிசி ஆலை உரிமையாளர், பழைய தருமபுரி | 500 |
| பேராசிரியர் G. சின்னப்பையன், M.Sc., M.Phil., தருமபுரி. | 500 |
| திரு B.R.M. சுப்ரமணியம், மேகலசின்னம்பள்ளி. | 500 |
| திரு A. விமலன், K. R. M. S. பஸ் உரிமையாளர், தருமபுரி. | 300 |
| திரு P. பொன்னுசாமி, B.A., B.L., MLA, செயலர், அறக்கட்டளை | 250 |
| திருமதி M. R. காளியம்மாள், பெருந்தலைவர், அறக்கட்டளை | 250 |
| திரு J. பட்டாபிராம செட்டியார், அப்பாவு நகர், தருமபுரி. | 250 |
| திரு D. R. வேதகிரி, ஷராப் கடை, தருமபுரி. | 250 |
| திரு R. பெருமாள், அரிசி ஆலை உரிமையாளர், பழைய தருமபுரி. | 250 |
| திரு D. C பெரியசாமி, Ex. M. C. தருமபுரி. | 201 |
| திரு D. R. வெங்கடாசலம், ஸ்ரீ குமார் மோட்டார் ஒர்க்ஸ், தருமபுரி | 201 |
| திரு P. S. பன்னீர்செல்வம், அரிசி ஆலை உரிமையாளர், ப. தருமபுரி | 200 |
| திரு மோகன், M.Sc., ஆணையாளர், நகராண்மைக் கழகம், தருமபுரி | 200 |
| ஆஸ்திகசமாஜம், ஒகேனக்கல் தாத்ரிஹவனக் கமிட்டி, பா. பட்டி | 100 |
| திரு J. மகாலிங்கம், ஆரியபவன் ஸ்வீட்ஸ், தருமபுரி. | 100 |
| திரு J. ராமமூர்த்தி, பாலக்கோடு. | 100 |
| A. ராஜகோபால், தருமபுரி மெடிகல்ஸ், தருமபுரி. | 100 |
| M. வடிவேல், B.A., ஸ்ரீ தேவி லாட்ஜ், தருமபுரி. | 101 |
| நாககசுப்பிரமணியம், தாசில்தார், தருமபுரி. | 101 |
| R. சீனிவாசன், ஒய்வு பெற்ற அலுவலர், மின்துறை, தருமபுரி | 100 |

| | |
|---|---|
| திரு K. பெரியசாமி, ஜமேதார், அஞ்சல் துறை, தருமபுரி. | |
| திரு P. சண்முகம், B.A.,B.L., வழக்கறிஞர், தருமபுரி. | |
| திருமதி B. லலிதா, B.A.,B.L., வழக்கறிஞர், தருமபுரி. | 10 |
| திரு D. K. காவேரிக்கவுண்டர், விநாயகா மெடிகல்ஸ், தருமபுரி. | 100 |
| திரு S. R. சத்யநாராயணன், ஸ்ரீ பாலாஜி பெட்ரோலியம் கம்பெனி, | 100 |
| திரு N. ராஜாராம், ஓய்வு பெற்ற ரயில்வே அலுவலர், தாம்பரம். | 120 |
| காமதேனு ஏஜென்சீஸ், தருமபுரி. | 107 |
| திரு A. அருணாசலம், B.Com., அரிசி ஆலைஉரிமையாளர் தருமபுரி | 100 |
| திரு M. தங்கவேல், ராஜாத்தி ஆலை உரிமையாளர், தருமபுரி. | 100 |
| திரு M. ரங்கராஜு, அரிசி ஆலை உரிமையாளர், தருமபுரி. | 100 |
| திரு K. M. கந்தசாமி, ஜவஹர் டெக்ஸ்டைல்ஸ், தருமபுரி. | 101 |
| திரு முத்தப்ப செட்டியார், C/o. மோகன் பேன்சி ஸ்டோர்ஸ், தருமபுரி | 100 |
| திரு K. R. வெங்கட்ராமய்யர், (தமது பெற்றோர் லக்ஷ்மி ராமச்சந்திரய்யர் நினைவாக) தருமபுரி | 100 |
| திரு D. நாகராஜன், ப்ருக் பாண்டு டீ, தருமபுரி. | 100 |
| பொறிஞர் M. ஆதிமூலம், B.E., மின் துறை, தருமபுரி. | 100 |
| திரு M. K. நாராயணன் சன்ஸ், M K S லாரி உரிமையாளர் தருமபுரி | 100 |
| டாக்டர் P. வரதராஜன், M.D., திருவொற்றியூர், சென்னை. | 100 |
| திரு S. A. மாதையன், தேசிய சிறுசேமிப்பு முகவர், தருமபுரி | 100 |
| M/s. ராஜலஷ்மி ஏஜென்சீஸ், இண்டேன் கேஸ், தருமபுரி. | 101 |
| திரு R. கிருஷ்ணன், B.A.,B.L., வழக்கறிஞர், தருமபுரி. | 101 |
| திரு R, நஞ்சுண்டன், பண்டி வியாபாரம், பென்னாகரம். | 101 |
| டாக்டர் G ராமசாமி, M.D., ஸ்ரீ ராமகிருஷ்ணா ஹாஸ்பிடல் தருமபுரி | 100 |
| திரு H. ராமசாமிசெட்டிசன்ஸ, 39C பை-பாஸ் ரோடு, தருமபுரி. | 100 |
| திரு S. திருப்பதி, செயலர், தருமபுரி மாவட்ட புரட்சித்தலைவி ஜெயலலிதா பேரவை, தருமபுரி. | 100 |
| திருவாளர்கள் J. ராமச்சந்திரன், J. ஜெகந்நாதன், J. விஸ்வநாதன், J. கிருஷ்ணகுமார், (R V ராஜா) தருமபுரி. | 100 |
| திரு G. முனிராஜு, B.E., 16, கோல்டன் தெரு, தருமபுரி-2. | 100 |

பின்புற அட்டைப்பட விளக்கம்

## [தொங்கும் தூண்]

மலர் பீடத்தின் மேல் சதுரங்களில் சிற்பங்கள் பொறிக்கப் பட்டுள்ளன. மலர்ப்பீடத்திற்கும் சதுரத்திற்கும் இடையே ஒரு துணியையோ, காகிதத்தையோ ஒரு புறத்திலிருந்து மறுபுறத்திற்கு நகர்த்த முடியும். இவ்வாறு சுமார் 6 அடி உயரமுள்ள தூண் அந்தரத்தில் தொங்குவது இன்றும் புதிராகவும், வியப்பாகவும் உள்ளது. இத்தூணில் அரசதம்பதியர் நடனமாடும் தேவகணங்கள், பறக்கும் கந்தர்வர்கள் போன்ற உருவங்கள் நுட்பமாக செதுக்கப்பட்டுள்ளன. தூண் முழுவதும் உள்ள சிற்பங்கள் இதில் உள்ள அரச தம்பதியினர்க்குக் குறிப்பிட்ட செய்தியை உரைப்பது. திரிசூலத்தை நோக்கிவிழும் ஒருவனைப் பெண் தடுப்பதாக அமைந்துள்ள சிற்பம் சிறப்பானதாகும்.

இத்தகைய நுட்பமான வேலைப்பாடமைந்த சிற்பத்தை வேறு எங்கும் காண்பது அரிது.

S. சாயிராம், M.A., M.Phil.



கோட்டை ஈசுவரன் கோயில்: ஆலயத் தோற்றம்
நவரங்க மண்டபத்து அதிசயத் தொங்கும் தூண்,